REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2021 மார்ச் 25 வியாழக்கிழமை

# தினகரன்
THINAKARAN
தினகரன்

89
1932 - 2021

வரு. 89 இல. 72 | March 25, Thursday, 2021 | 20பக்கங்கள் | 30/-







05 தமிழ்நாட்டில் தேர்தல் துரும்புகளாக இலங்கை தமிழர் விவகாரம்



09 வலையில் சிக்கிய எட்டு அடி புலி



12 மியன்மார் படையினரால் ஏழு வயது சிறுமி சுட்டுக்கொலை




20 46வது தேசிய விளையாட்டு விழா

மேல்மாகாணம் உள்ளிட்ட

## நாடு முழுவதும் பாடசாலைகள் 29 ஆம் திகதி முதல் ஆரம்பம்

### கல்வியமைச்சர் நேற்று அறிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**




மேல்மாகாணம் உட்பட நாடு முழுவதும் அரசாங்க பாடசாலைகளின் அனைத்து தர வகுப்பு மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் 29ஆம் திகதி திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகுமென கல்வியமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்தார். ஏற்கனவே ஏப்ரல் 19ஆம் திகதியே கல்வி நடவடிக்கைகளுக்காக பாடசாலைகள் திறக்கப்படுமென கல்வியமைச்சு அறிவித்திருந்த போதும் அந்த தீர்மானத்தில் மாற்றம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். அனைத்து வகுப்புகளுக்குமான கல்வி நடவடிக்கைகளை

06

## கொட்டுகொட தம்மாவாச தேரரின் இறுதிக் கிரியை இன்று

### துக்க தினமாக அரசு பிரகடனம்



இறைபதமடைந்த இலங்கை அமரபுர பிரிவின் மஹாநாயக்கர் அதி வணக்கத்துக்குரிய கொட்டுகொட தம்மாவாச தேரரின் இறுதி கிரியைகள் இன்று நடைபெறுவதால் இன்றைய தினம் (25) துக்க தினமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

தேசிய, சமய மற்றும் புத்தசாசன ரீதியாக இலங்கைக்கு அவர் ஆற்றிய உன்னத சேவையை கருத்தில் கொண்டு இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இறுதிக்கிரியை இடம்பெறும் நகர எல்லைக்குள் துக்க தினமாகக் கொண்டு இன்று கொழும்பு மாவட்டத்தில் இறைச்சிக்காக விலங்குகள் அறுத்தல்

06



ஸ்ரீ லங்கா அமரபுர மகா நிக்காயவின் மகாநாயக்கர் அதி வணக்கத்துக்குரிய கொட்டுகொட தம்மாவாச தேரரின் பூதவுடலுக்கு ஜனாதிபதி இறுதி அஞ்சலி செலுத்தினார். பூதவுடல் வைக்கப்பட்டிருந்த கல்கிஸ்ச, ஸ்ரீ தர்மபாலாராமயவிற்கு நேற்று (24) முற்பகல் சென்ற ஜனாதிபதி, தேரரின் பூதவுடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தியதுடன், பிக்கு மாணவர்கள் மற்றும் நிர்வாகக் குழுவினருக்கு தனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்தார். ஜனாதிபதி, விகாரையில் வைக்கப்பட்டிருந்த அனுதாப குறிப்பு புத்தகத்திலும் தனது கருத்தை பதிவிட்டார்.

மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்தின் பிரகாரம்;

# பொருளாதாரத் தடை விதிக்கும் நிலை இல்லை

### ஐ.நா. பாதுகாப்புச் சபையிலேயே தீர்மானம் எடுக்க முடியும்

**லோரன்ஸ் செல்வநாயகம், சுப்பிரமணியம் நிசாந்தன்**

மனித உரிமைகள் பேரவையில் (23) நிறைவேற்றப்பட்ட பிரேரணையூடாக இலங்கைக்கு பொருளாதாரத் தடை விதிக்கக்கூடிய நிலைமை இல்லையென அமைச்சரவை பேச்சாளரும், வெகுஜன ஊடகத்துறை அமைச்சருமான கெஹெலிய ரம்புக்வெல்ல நேற்றுத் தெரிவித்தார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர்களுடனான சந்திப்பு நேற்றுக் காலை அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. இந்த மாநாட்டில் அரசாங்க தகவல் திணைக்களத்தின் பதில் பணிப்பாளர் நாயகமாக செயற்படும் ருவன் சத்குமாரவும் கலந்து கொண்டார்.

இதன்போது ஊடகவியலாளர் ஒருவர் ஜெனீவா மனித உரிமைகள் பேரவையின் மூலம் நிறைவேற்றப்பட்ட பிரேரணை ஊடாக இலங்கை மீது பொருளாதார தடை விதிக்கப்படுமா? என அமைச்சரிடம்

06




## உடலுக்கு பாதகம் விளைவிக்கும் தேங்காய் எண்ணெய் இறக்குமதி

### விசாரணைகள் ஆரம்பம்; நுகர்வோரும் முறையிடலாம்



**ஷம்ஸ் பாஹிம், சுப்பிரமணியம் நிஷாந்தன்**

எப்போலடெக்ஸின் மூலக்கூறுகள் அடங்கிய தேங்காய் எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக கூறப்படும் விடயம் தொடர்பில் முழுமையான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் மொஹமட்

06

ஜெனீவா பிரேரணையை அரசு நிராகரித்துள்ளது;

## தாய்நாட்டுக்கு எதிராக செயற்பட வேண்டாம் என தினேஷ் கோரிக்கை

### உள்நாட்டு பொறிமுறை மூலம் தீர்வுக்கு ஏற்பாடு

**ஷம்ஸ் பாஹிம், சுப்பிரமணியம் நிஷாந்தன்**



ஜெனீவா பிரேரணையை இலங்கை நிராகரித்தாலும் அரசியல் அமைப்புக்கேற்ப செயற்படும் விதமாக உள்நாட்டு பொறிமுறை ஒன்றை அரசு உருவாக்கியுள்ளதென வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார். இலங்கை தொடர்பில் ஜெனீவாவில்

06

## கொழும்பு, களனி திஸ்ஸ மின் உற்பத்தி நிலையத்தில் இரு இயந்திரங்கள் பழுது

### திருத்தப்பணிக்கு சீனாவிலிருந்து குழு வருகை

### உண்மை நிலையை விளக்கினார் இ.மி.ச.தலைவர்

**தெஹிவளை கல்கிஸ்ச விசேட நிருபர்**

கடந்த 2019 ஜூலை மாதத்தில் திடீரென பழுதடைந்த களனி திஸ்ஸ மின்சார உற்பத்தி நிலையத்திலுள்ள எரிவாயு ஊடாக மின்சாரத்தை உற்பத்தி செய்யும் 110 மெகாவோட் கொண்ட இயந்திரமும், டீசல் ஊடாக மின்சாரத்தை உற்பத்தி செய்யும் மெகாவோட்ஸ் 55 ஸ்டீம் இயந்திரமும் இயங்க வைப்பதற்காக சீனக் கம்பனியான சீமெக்ஸ் எனும் நிறுவனத்தினர் தற்பொழுது இலங்கை வந்துள்ளனர்.

இவர்கள் அடுத்த 11 நாட்களுக்குள் இயந்திரங்களை திருத்தியமைத்து ஏப்ரல் 04ஆம் திகதி இயக்கவைப்பதற்கு இணக்கம் தெரிவித்துள்ளனரென இலங்கை மின்சார சபையின் தலைவர் பொறியியலாளர் விஜித்த



ஏப்ரல் 04 முதல் இயங்கவைக்க நடவடிக்கை

ஹேரத் நேற்றுத் தெரிவித்தார். கொழும்பிலுள்ள இலங்கை மின்சார சபை தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

06

## புர்கா தடை விடயத்தில் இதுவரை இறுதித் தீர்மானம் எதுவுமில்லை

### சுமுகமாக தீர்க்க அரசு நிதானமாக முடிவு காணும்



**லோரன்ஸ் செல்வநாயகம், சுப்பிரமணியம் நிசாந்தன்**

புர்கா தடை தொடர்பில் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றன. இதுவரையில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லை. இவ்விடயத்தை மத ரீதியானதாக மாத்திரம் அவதானிக்கக் கூடாது. தேசிய பாதுகாப்பை அடிப்படையாகக்

06

இலங்கை மீதான தீர்மானம்;

## இரா.சம்பந்தன் வரவேற்கிறார்



ஜெனீவா மனித உரிமைகள் மாநாட்டில், இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்தை வரவேற்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்

06

## பிறரின் வங்கிக் கணக்கிற்குள் ஊடுருவி ஒரு கோடி பண மோசடி

### வவுனியா இளைஞர் பொலிஸாரால் கைது

**ஓமந்தை, வவுனியா விஷேட நிருபர்கள்**

பிறரின் வங்கிக் கணக்குகளுக்குள் ஊடுருவி பண மோசடியில் ஈடுபட்டமைக்காக குற்றப் புலனாய்வு பிரிவினரால் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ள



தாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மாஅதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது, பணச் சலவை சட்டவிதிகளின் கீழ் இளைஞர்

06

## யாழ். தீவகங்களுக்கு அம்பியூலன்ஸ் படகுகள்

### ஆரம்பிக்குமாறு சிறிதரன் MP கோரிக்கை



**ஷம்ஸ் பாஹிம், சுப்பிரமணியம் நிஷாந்தன்**

அனலை தீவு, நெடுந்தீவு, நயினாதீவு, எழுவை தீவுகளுக்கு அரச அம்புலன்ஸ் படகுச் சேவை உடனடியாக ஆரம்பிக்கப்பட வேண்டுமென

06

## அரசியல் கைதி சுதாகரனின் காணிக்கு என்ன நடந்தது?

### மோசடி இடம்பெற்றுள்ளதாக சகோதரி புகார்



தமிழ் அரசியல் கைதி ஆனந்த சுதாகரனின் காணி ஆவணங்கள் யாழ்ப்பாணத்திலுள்ள ஹோட்டல் உரிமையாளரின் பெயருக்கு மோசடியான முறையில் மாற்றப்பட்டிருப்பதாக ஆனந்த சுதாகரனின் சகோதரி குற்றம்சாட்டியுள்ளார். கிளிநொச்சி பாரதிபுரம் கிராம அலுவலர் பிரிவில் இரணைமடு பகுதியிலுள்ள காணியும் யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல ஹோட்டல் உரிமையாளரின் பெயருக்கு மோசடியாக மாற்றப்பட்டிருப்பதாக சகோதரி

06

## ரஷ்யாவிலிருந்து 70 இலட்சம் 'ஸ்புட்னிக் 05' தடுப்பூசிகள்

### கொள்வனவு செய்ய அமைச்சரவை அனுமதி

கொவிட்19 நோய்க்கு எதிராக ரஷ்யாவில் தயாரிக்கப்பட்ட ஸ்புட்னிக் 05 தடுப்பூசியின் 70 இலட்சம் டோஸ் வாங்குவதற்கு அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

சுகாதார அமைச்சினால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கே அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.



69.65 மில்லியன் அமெரிக்க டொலர்கள் (சுமார் 139 கோடி ரூபா) செலவில் இத்தடுப்பூசி கொள்முதல் செய்யப்படவுள்ளது.

இலங்கையில் கொவிட்19 பரவலைக் கட்டுப்படுத்துதற்கு 14 மில்லியன் மக்களுக்கு தடுப்பூசி செலுத்துவதற்கு இலங்கை அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

## கொழும்பு – கதிர்காமம் – கொழும்பு லேக்ஹவுஸ் கடுகதி பஸ் சேவை

### விரைவில் மீண்டும் ஆரம்பம்
### புதிதாக 02 பஸ்கள் கொள்முதல்



லேக்ஹவுஸ் நிறுவனம் கொழும்பு – கதிர்காமம் – கொழும்பு கடுகதி பஸ் சேவையை மீண்டும் ஆரம்பிக்கவுள்ளது. இதற்காக இரண்டு அசோக் லேலண்ட் பஸ்களை நிறுவனம் கொள்முதல் செய்துள்ளது. நேற்று நிறுவனத்துக்கு கொண்டுவரப்பட்ட 54 ஆசனங்களைக் கொண்ட இரண்டு பஸ்களையும் நிறுவனத்தின்

06

விக்கல் வீராச்சாமி



அண்ணே, தமிழகம் மாதிரி இங்கே–யும் ஒருவர் நிவாரண பொருட்கள்ள தன்ர படத்தை ஒட்டி கொடுத்திருக்கிறார்....

ஓம் தம்பி, பாத்தனான் சும்மா கொடுத்–துட்டு வந்தா, சிலர் தாங்க கொடுத்த மாதிரி பேஸ்புக்குல படங்கள போட்டு விடுவாங்க எண்ட பயத்தில அவர் இப்படி செய்திருப்–பாரோ...!!!

89 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்

தினகரன் விளம்பரம்
0112429367

விற்பனை பிரிவு
0112429444,
0112429378

ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2021 மார்ச் 25 வியாழக்கிழமை

தினகரன்
THINAKARAN

**தொழுகை நேரம்**

25முதல் 27 வரை

| | |
|---|---|
| சுபஹ் | 04.57 |
| ளுஹர் | 12.18 |
| அஸர் | 03.28 |
| மஃரிப் | 06.21 |
| இஷா | 07.31 |

**இன்றைய சுபதினம்**

சார்வரி வருடம் பங்குனி 12

ராகுகாலம் : பகல் : 01.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை

யோகம்: சித்தஅமிர்த யோகம்

திதி: துவாதசி

**இராசி பலன்கள்**

| | | |
|---|---|---|
| மேஷம் | - | செலவு |
| ரிஷபம் | - | பாராட்டு |
| மிதுனம் | - | தனம் |
| கடகம் | - | போட்டி |
| சிம்மம் | - | கோபம் |
| கன்னி | - | முயற்சி |
| துலாம் | - | நன்மை |
| விருச்சிகம் | - | நிறைவு |
| தனுசு | - | வெற்றி |
| மகரம் | - | பொறுமை |
| கும்பம் | - | மறதி |
| மீனம் | - | சுகம் |

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள் (பாபு சர்மா)

# இன, மத ரீதியான பெயர்களில் அரசியல் கட்சிகள் பதிவு செய்யப்படமாட்டாது

## தேர்தல் ஆணைக்குழு தீர்மானம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

மதம் அல்லது இன ரீதியாக அரசியல் கட்சிகளை பதிவு செய்வதில்லையென்ற தீர்மானத்தை தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

அதற்கிணங்க அரசியல் கட்சிகள் பதிவு செய்யப்படும்போது அதன் உத்தியோகபூர்வ பெயர் எந்தவொரு மதம் அல்லது இனத்தின் பெயரைக் கொண்டிருந்தால் அவ்வாறான கட்சிகளை பதிவு செய்வதில்லை என்ற தீர்மானத்தை தேர்தல் ஆணைக்குழு மேற்கொண்டுள்ளது.

நாட்டில் நடைமுறையிலுள்ள சட்டங்களுக்கிணங்க அரசியல் கட்சி ஒன்று தேசிய கட்சி என்ற ரீதியிலேயே பதிவு செய்யப்படும். நேற்று இடம்பெற்றுள்ள மேற்படி ஆணைக்குழுவின் அமர்வில் அந்த தீர்மானத்தை மேற்கொண்டதாக

06



## Online Shopping ஒழுங்குபடுத்த

# நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தில் திருத்தம்

## அமைச்சர் பந்துல அறிவிப்பு

**ஷம்ஸ் பாஹிம், சுப்பிரமணியம் நிஷாந்தன்**

இணையத்தள வர்த்தகத்தை ஒழுங்குப்படுத்துவதற்காக விரைவில் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளதாக வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் மொஹமட் முஸம்மில் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அமைச்சர் பந்துல குணவர்தன மேலும் கூறியதாவது,

இணையத்தள வர்த்தகம் தொடர்பில் எமது நாட்டில் உரிய சட்டங்களும் விதிமுறைகளும் உருவாக்கப்படவில்லை. 2003ஆம் ஆண்டே நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தில் கடைசியாக திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தற்போதைய உலகளாவிய சூழ்நிலைக்கு ஏற்ப இச்சட்டத்தில் மாற்றங்கள் மேற்கொள்ளப்படவில்லை. பாரிய மாற்றங்களை இந்தச் சட்டத்தில்

06



## தவக்கால சிந்தனை

# மங்கள வார்த்தை திருவிழா

தவக்காலத்தில் வரும் மற்றொரு முக்கியமான பெருவிழா, இன்றைய மங்கள வார்த்தைத் திருவிழா.

இயேசு கிறிஸ்துவின் மனித பிறப்பு பற்றிய, மங்களச் செய்தியை, கபிரியேல் தூதர் மூலம் முன்குறிக்கப்பட்ட கன்னியான மரியாளிடம் தெரிவிக்கப்பட்ட கொண்டாட்ட நிகழ்வு இன்றைய நாளின் சிறப்பு.

மானுடம் சிறப்புற, மனிதம் மலர, கடவுளின் மகன் தன்நிலையை விடுத்து, பலவீனமான, பாவ நிலையான மனிதகுலத்தின் நிலையேற்று, தன் வல்லமையினால் நம் வலுவின்மையை போக்கிட முன்வந்த கொண்டாட்ட நிகழ்வு.

அன்னை மரியாவை விசுவாசத்தின் தாய் என்று சொன்னால் அது முழுக்க, முழுக்க பொருந்தும். அவளது விசுவாசம் ஒவ்வொரு வார்த்தையிலும், வாழ்வின் ஒவ்வொரு கணத்திலும் வெளிப்படுகிறது. இன்றைய நற்செய்தியில் இயேசு "உன்னத கடவுளின் மகன் எனப்படுவார்" என்ற செய்தி வானதூதரால் முன்னறிவிக்கப்படுகிறது. ஆனால், நடந்தது என்ன? இயேசுவை அன்னை மரியாள் காதுபடவே இழிவாகவும், குறையாகவும் பேசினார். ஆனால், அன்னை மரியாள் தனது விசுவாசத்தை சிறிதும் இழக்கவில்லை.

யாரிலே நம்பிக்கை வைத்திருந்தோமோ அவரே சிலுவையில் அறையப்பட்டு தனது உயிருக்காக துடித்துக் கொண்டிருந்தபோதிலும், இறுதியாக இறந்தபோதிலும் அன்னை மரியாள் தனது விசுவாசத்தை இழக்கவில்லை. கடவுளின் வார்த்தை நிறைவேறும் என்று உறுதியாக நம்புகிறாள். ஒன்றுமில்லாமையிலிருந்து இந்த உலகத்தைப் படைத்த கடவுளால், இறந்தவர்களுக்கு உயிர் கொடுக்க முடிந்த கடவுளின் ஆற்றலால் அனைத்துமே நடக்கும் என்று அன்னை மரியாள் நம்பினாள். அதனால் தான் விசுவாசத்தின் தாயாக இன்று உயர்ந்து நிற்கிறாள். தனது பிறப்பு முதல் வாழ்வின் கடைசி மூச்சு வரை, கடவுள் மட்டில் அன்னை மரியாள் வைத்திருந்த விசுவாசம் அளப்பரியது.

அன்னையிடத்தில் இருந்த அந்த விசுவாசம் நமதாக வேண்டும். அவளது விசுவாசப்பண்பை நாமும் நமது வாழ்க்கையில் வாழ்ந்து காட்ட வேண்டும். வாழ்வில் நம்பிக்கை இழந்த சூழ்நிலையையும் கடவுள் மாற்றக்கூடிய வல்லமை படைத்தவர் என்று கடவுள் மட்டில் நமக்குள்ள விசுவாசத்தை இன்னும் ஆழப்படுத்துவோம்.

அருட்பணி பேர்னாட் ஜீவா...

# ஆழ்கடல் மீன்பிடி வள்ளங்களின் உரிமையாளர் பிரச்சினைக்கு தீர்வு

## அமைச்சர் டக்ளஸ் இணக்கம்

அகில இலங்கை ஆழ்கடல் மீன்பிடிப்படகுகளின் (multi day fishing boats) உரிமையாளர் சங்க உறுப்பினர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற்றுத் தருவதாக உறுதியளித்துள்ள கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அண்மையில் இந்திய கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இலங்கை மீனவர்கள் மற்றும் தடுத்து வைக்கப்பட்டுள்ள மீன்பிடி படகுகளை துரிதமாக விடுவிக்க நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

அகில இலங்கை ஆழ்கடல் மீன்பிடி படகுகளின் உரிமையாளர் சங்க உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்குமிடையிலான சந்திப்பு அமைச்சின் கேட்போர் கூடத்தில் (23) நடைபெற்றது.

இச்சந்திப்பின் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சந்திப்பில், சர்வதேச மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடும் வி.எம்.எஸ் வசதியற்ற (VESSEL MONITORING SYSTEM) படகுகளை இலங்கை கடற்படையினர் கைப்பற்றி வழக்கு தொடர்வதாகவும் வி.எம்.எஸ். வசதிகளை ஏற்படுத்தி கொடுப்பது கடற்றொழில் திணைக்களத்தின் பொறுப்பு என்பதால் அதனை செய்யாமல் வழக்கு தொடர்வது நியாயமற்றதெனவும் தெரிவித்தனர்.

அத்துடன் அண்மையில் (17) மாலைதீவுக்கும் இந்தியாவிற்கும் இடைப்பட்ட சர்வதேச கடற்பரப்பில் வைத்து இந்திய கடற்படையினால் கைப்பற்றப்பட்ட 06 படகுகள் மற்றும் மீனவர்களை விடுதலை செய்வதற்கு துரித நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொண்ட சங்கத்தின் உறுப்பினர்கள், சட்ட விரோத செயற்பாடுகளில் ஈடுபட்ட படகுகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுவதை தாங்கள் ஆடசேபிக்கவில்லை எனவும் தெரிவித்தனர்.

இவர்களது கோரிக்கைகளுக்கு பதிலளித்த கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா,

வெளிநாடுகளின் கடற்படையினரால் எமது கடல் எல்லைக்கு அப்பால் எமது மீனவர்கள் கைது செய்யப்படுவதை தடுக்க முடியாது.

இப்பிரச்சினையை இலங்கை வெளிவிவகார அமைச்சே கையாள வேண்டும். இந்திய மீனவர்கள் கைது செய்யப்படும் போது உரிய சட்ட நடவடிக்கையின் பின்னர் அவர்கள் விடுதலை செய்யபடுவர்.



ஆனால் அவர்களது படகுகளை விடுவிப்பதில்லை. அதற்கு எமது சட்டத்திலும் இடமில்லை. மியன்மாரை பொறுத்த மட்டில் அங்கு இராணுவ ஆட்சி நடைபெறுவதால் இவ்விடயத்தை உரிய முறையில் பேச முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

போதைப்பொருள் கடத்துபவர்கள் அதனை எப்படியாவது செய்கின்றனர். அதனை தடுக்க வேண்டுமானால் மீன்பிடி படகுகளுக்கு விசேட அடையாளம் இடலாம். அப்போது இரு நாடுகளின் அதிகாரிகளும் அதனை இலகுவாக அடையாளம் காணலாம். விரைவில் அவுஸ்ரேலிய அரசாங்கம் எமக்கு 4,500 வி.எம்.எஸ். கருவிகளை வழங்கவுள்ளது. அதனை நாங்கள் கட்டங்கட்டமாக விநியோகிப்போம்.

உரிய சட்டங்களை அமுல்படுத்தத் தவறினால் எமது கடற்றொழில் வீழ்ச்சி அடையும். அதனால் மீனவர்களுக்குத்தான் பாதிப்பு ஏற்படும். கடற்றொழில் திணைக்களத்தையும் அமைச்சினையும் குறை சொல்லக் கூடாது. அவை இரண்டும் நன்றாகவே செயற்படுகின்றன.

கொவிட்19 தொற்று ஏற்பட்ட காலத்தில் எமது அமைச்சும் திணைக்களமும் நன்றாக செயற்பட்டது.

06

## கிராண்ட்பாஸ், கஜிமா வத்தை தீ விபத்து

# பாதிக்கப்பட்டவர்களுக்கு விரைவில் நல்ல தீர்வு



கொழும்பு, கிராண்ட்பாஸ் கஜிமா வத்தை பகுதியில் தீவிபத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு விரைவில் தீர்வு வழங்கப்படுமென அரசாங்கம் அறிவித்துள்ளது.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பின்போது இது தொடர்பில் ஊடகவியலாளர்களால் கேட்கப்பட்டபோதே அமைச்சரவை பேச்சாளர் கெஹெலிய ரம்புக்வெல்ல இதனைத் தெரிவித்தார்.

இப்பகுதியில் ஏற்பட்ட தீ விபத்து தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் உள்ளிட்டவற்றுடன் அரசாங்கம் கலந்தாலோசித்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு விரைவில் தீர்வு வழங்கப்படுமென்று அமைச்சரவை பேச்சாளர் கெஹெலிய ரம்புக்வெல்ல மேலும் தெரிவித்தார்.

கடந்த 15 ஆம் திகதி கஜிமாவத்தை பகுதியில் இடம்பெற்ற திடீர் தீ விபத்தில் அப்பகுதியில் சுமார் 30க்கும் மேற்பட்ட வீடுகள் முழுமையாக சேதமடைந்திருந்தன. தற்போது அங்குள்ள மக்கள் தற்காலிக இருப்பிடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

## பாராளுமன்ற நீர்த்தடாகம் சுத்தப்படுத்தப்பட்டதாலேயே

# தியவன்னாஓய மாசடைந்தது

**ஷம்ஸ் பாஹிம், சுப்பிரமணியம் நிஷாந்தன்**



பாராளுமன்றத்தின் முன்னாலிருக்கும் நீர்த்தடாகம் சுத்தப்படுத்தப்பட்டு அந்த நீர் தியவன்னா ஓயாவில் கலக்கவிடப்பட்டுள்ளதாலேயே தியவன்னா ஓயாவின் ஒருபகுதியில் நீர் மாசடைந்துள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, பாராளுமன்றத்துக்கு உள்நுழையும்போது தியவன்னா ஓயாவின் ஒருபகுதியில் கடந்த இரண்டு வாரங்களாக நீரின் நிறம் மஞ்சள், பச்சையாக மாறி உள்ளது. இது சுற்றாடலை மாசடையச்செய்திருக்கும் செயலா என்பது தொடர்பாக ஆராய வேண்டும் என்றார்.

இதற்கு பதிலளித்த சபாநாயகர், பாராளுமன்றத்தின் முன்னால் இருக்கும் நீர்த்தடாகம்

06

## ரஞ்சன் ராமநாயக்க தாக்கல் செய்துள்ள மனு விசாரணை

# 31ஆம் திகதி அறிவிப்பதாக நீதிமன்றம் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

ரஞ்சன் ராமநாயக்க அவரது பாராளுமன்ற உறுப்பினர் பதவி தொடர்பில் தாக்கல் செய்துள்ள மனுவை பரிசீலனைக்கு எடுப்பதா? இல்லையா? என்பது தொடர்பில் எதிர்வரும் 31ஆம் திகதி அறிவிக்க உள்ளதாக மேன்முறையீட்டு நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க தற்போது சிறைத்தண்டனை அனுபவித்து வரும் நிலையில் அவரது எம்.பி பதவியை நீக்குவது தொடர்பான தீர்மானத்தை இரத்துச் செய்யக் கோரி அவரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவை பரிசீலனைக்கு எடுப்பதற்கான அனுமதியை வழங்குவதா? இல்லையா? என்ற உத்தரவை மேன்முறையீட்டு நீதிமன்றம்

06

தினகரன் THINAKARAN

மாணவர் கரங்களில் 'புலமைக் கதிர்'

தினகரன் இதழுடன் பிரதி வெள்ளி தோறும் வெளிவருகின்றது 'புலமைக் கதிர்'...



தரம்–5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்களுக்கான பயன் தரும் வினாத்தாள்கள் இலவச இணைப்பாக உங்கள் தினகரனுடன்...

கொழும்பு இந்துக் கல்லூரி ஆசிரியர் எஸ்.ஏ. சந்திரபவன் தயாரித்து வழங்குகிறார்.

## கொழும்பு துறைமுக அபிவிருத்தி

# திட்ட சட்டவரைபை, வர்த்தமானியில் வெளியிட அமைச்சரவை அனுமதி

கொழும்பு துறைமுக அபிவிருத்தித் திட்டத்தை மேற்கொள்வதற்கான சட்டவரைபை, வர்த்தமானியில் வெளியிட அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல நேற்றுத் தெரிவித்தார்.

அத்துடன், இச் சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கைளை முன்னெக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் முன்வைக்கப்பட்டிருந்த அமைச்சரவைப் பத்திரத்துக்கே இவ்வாறு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. கொழும்பு துறைமுக அபிவிருத்தித் திட்டத்தை மேற்கொள்வதற்கு, கடந்த ஜனவரி மாதம் 04 ஆம் திகதி, அமைச்சரவையினால் அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து, அதற்குத் தேவையான சட்டமூலம், சட்டவரைஞர்களினால் தயாரிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையிலேயே, கொழும்பு துறைமுக அபிவிருத்தித் திட்டத்தை மேற்கொள்வதற்கான சட்டவரைபை, வர்த்தமானியில் வெளியிட அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

## பிணைமுறி மோசடி வழக்கு;

# ரவி கருணாநாயக்க உள்ளிட்ட 08 பேர் 30ஆம் திகதிவரை மீண்டும் விளக்கமறியலில்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

பிணைமுறி மோசடி வழக்கில் விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க உள்ளிட்ட 08 சந்தேக நபர்களையும் எதிர்வரும் 30 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

2016ஆம் ஆண்டு மார்ச் 29ஆம் திகதிக்கும் ஜூன் 30ஆம் திகதிக்குமிடையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் பிணைமுறி ஏல விற்பனையின் போது இடம்பெற்றுள்ள 36.98 பில்லியன் நிதி மோசடி தொடர்பில் சட்டமா அதிபரால் மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் இவ்வழக்கு

06





லேக்ஹவுஸ் நிறுவனம் கதிர்காமம் – கொழும்பு கடுகதி பஸ் சேவையை மீண்டும் ஆரம்பிப்பதற்காக கொள்முதல் செய்துள்ள பஸ்கள் நேற்று நிறுவனத்துக்கு கொண்டுவரப்பட்டது. அதனை போக்குவரத்து பிரிவு ஊழியர்கள் பார்வையிட்ட போது... (படங்கள்: சமன் ஸ்ரீ வெதகே)

அங்கம் – 03

# பதிவு செய்யப்படாத சட்ட விரோத தொழில் முகவருக்கு பணம் செலுத்துதல்

நேற்றைய கதையின் தொடர்ச்சி

நீங்கள் வேலைவாய்ப்பிற்காக அல்லது நிரந்தரமாக வதிவதற்காக வேண்டி வெளிநாட்டுக்குச்செல்ல விரும்புகிறீர்களா? தயவுகூர்ந்து உங்களினதும் உங்களின் நெருங்கிய உறவுகளினதும் பாதுகாப்பை பற்றி முதலில் அக்கறை எடுத்துக்கொள்ளுங்கள். வெளிநாட்டுக்கு செல்ல விரும்பினால் எப்பொழுதும் பாதுகாப்பான பாதையை தெரிவு செய்யுங்கள். இந்த சித்திரக்கதையில் ராஜாவுக்கு என்ன நிகழ்கின்றது என்பதை தொடர்ந்து அவதானிக்கும் போது பாதுகாப்பான புலம்பெயர்வை பற்றிய உங்களின் பார்வைக்கோணத்தை அதிகரித்துக்கொள்ள முடியும். இப்பத்திரிகையில் 7 நாட்களுக்கு தொடராக பிரசுரிக்கப்படவிருக்கும் சித்திரக்கதையின் 3 ஆவது அங்கம் இதுவாகும். ஒவ்வொரு அங்கத்தின் இறுதியிலும் பரிசுகளை பெறும் வாய்ப்புக்களும் வழங்கப்பட்டுள்ளது.

## மனித கடத்தல்காரர்கள் பற்றி விழிப்புடனிருங்கள்!

**பாதுகாப்பான வெளிநாடு செல்லும் பாதையை தெரிவு செய்வதற்கு IOM நிறுவனத்தின் நேரடி இலக்கம் 0774410086 இற்கு அழையுங்கள்.**



அர்னோல்டை நம்பிய ராஜா பெற்றோரின் எதிர்ப்புக்கு மத்தியில் அவர்களின் வீட்டை அடகு வைத்து பிரயாணத்திற்காக பெருமளவு பணத்தை ஏற்பாடு செய்தார்.



தகுதி மற்றும் தொழில் வீசா இன்றி தனது பயண ஏற்பாடுகளை செய்வதற்காக வேண்டி அர்னோல்டுக்கு ராஜா 20 இலட்சம் ரூபாய்களை கட்டணமாக செலுத்தினார்.



பணக்கொடுப்பனவிற்கான எந்த ஆவணமும் அர்னோல்டிடமிருந்து ராஜாவுக்கு கிடைக்கவில்லை.



அர்னோல்டிடம் அவரது தொலைபேசி இலக்கத்தை ராஜா கேட்ட போதும்



தான் அடிக்கடி வெளிநாடு செல்வதால் தன்னிடம் வட்சப் வைபர் மட்டுமே உள்ளதாகவும்



அவற்றினூடாக மட்டுமே கதைக்குமாறும் அர்னோல்ட் ராஜாவுக்கு கூறினார்.

### எந்தவிதமான ஆவணங்களோ பற்றுச்சீட்டோ இல்லாது தொழில் முகவராக தோன்றும் ஒருவரிடம் பணத்தை கொடுப்பது பொருத்தமா?



விடை 1:

இல்லை. பணம் கொடுக்கலுக்கான எந்த அத்தாட்சியுமின்றி அல்லது தொழில் முகவர் பதிவுசெய்யப்பட்டவரா என்பதை உறுதிப்படுத்தாமல் பணத்தை செலுத்துவது தவறாகும்.



விடை 2:

ஆம். தொழில் முகவர் உங்களுக்கு தெரிந்த அல்லது உங்களுக்கு தெரிந்தவருடன் தொடர்புபட்டவராயின் அது பிரச்சினைக்குரிய விடயமல்ல.

இக் கேள்விக்கு சரியான விடையை தெரிவு செய்வதன் மூலம் நாளாந்த பரிசுத்தொகைகளில் பரிசினை வெல்லுங்கள். உங்களின் விடையை அல்லது விடைகளை கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களுடன் IOM நிறுவனத்தின் 0774410086 என்ற நேரடி இலக்கத்திற்கு அனுப்பி வையுங்கள். விடைகளை SMS அல்லது வட்சப் அல்லது வைபர் மூலமாக 0774410086 என்ற இலக்கத்திற்கு அனுப்ப முடியும். S3 என்ற குறியீட்டை தவறாமல் குறிப்பிடவும்.

S3 விடை எண் (கள்), பிரசுரமான திகதி, பத்திரிகையின் பெயர்
பால்: ஆண் / பெண், வயது, ஊர் – மாவட்டத்தின் பெயர்

உதாரணம்:

S3 3 ,4 22.03.2021 _ தினத்தந்தி
ஆண் 20 சிலாபம் – புத்தளம் மாவட்டம்

விடைகள் 07.04.2021 திகதி வரை மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

புலம்பெயர்தலுக்கான சர்வதேச நிறுவனம் (IOM)
9ஆம் மாடி, IBSL கட்டிடம்,
80A , எல்விட்டிகல வீதி, பொறல்லை, கொழும்பு 8.

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சார்வரி வருடம் பங்குனி மாதம் 12ம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1442 ஷஃபான் பிறை 11



**குறள் தரும் சிந்தனை**

ஒப்புரவி னால்வரும் கேடெனின் அஃதொருவன்
விற்றுக்கோள் தக்க துடைத்து

ஒப்புரவால் கேடு வரும் என்றால் அக் கேடு ஒருவன் தன்னை விற்றாவது வாங்கிக்கொள்ளும் தகுதி உடையதாகும்.

# பிரேரணைக்கு ஆதரவளிக்காத நிலைப்பாட்டில் கூடுதல் நாடுகள்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 46 வது அமர்வு கடந்த பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி (2021) ஜெனீவாவில் ஆரம்பமானது. 47 நாடுகள் அங்கம் வகிக்கும் இப்பேரவையின் இந்த அமர்வில் பிரித்தானியா, கனடா, ஜேர்மனி, மலாவி, மொண்டனீக்ரோ, வடக்கு மசிடோனியா ஆகிய நாடுகள் இணைந்து இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக் கூறல் மற்றும் மனித உரிமைகளைப் பாதுகாத்தல் தொடர்பான பிரேரணையொன்றைக் கொண்டு வந்திருந்தன. இப்பிரேரணை மீதான வாக்கெடுப்பு மார்ச் 22 ஆம் திகதி நடத்தப்பட ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டிருந்தது. என்றாலும் இறுதித் தருவாயில் தொழில்நுட்ப கோளாறைக் காரணம் காட்டி மறுநாள் 23 ஆம் திகதி வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இவ்வாக்கெடுப்பில் இப்பிரேரணைக்கு ஆதரவாக 22 நாடுகளும், எதிராக 11 நாடுகளும் வாக்களித்துள்ளன. ஆனால் 14 நாடுகள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை. இதன்படி இப்பிரேரணைக்கு ஆதரவாக 22 நாடுகள் வாக்களித்துள்ள போதிலும், இப்பேரவையில் அங்கம் வகிக்கும் 47 நாடுகளில் பெரும்பாலான நாடுகளின் ஆதரவு பிரேரணைக்குக் கிடைக்கப் பெறவில்லை என்பது தெளிவாகின்றது.

அதாவது ரஷ்யா, சீனா, பாகிஸ்தான், பங்களாதேஷ், சோமாலியா, உஸ்பெகிஸ்தான், கியூபா, பிலிப்பைன்ஸ், வெனிசுவேலா, பொலிவியா, எரித்திரியா ஆகிய 11 நாடுகளும் இலங்கைக்கு ஆதரவாக இப்பிரேரணைக்கு எதிராக வாக்களித்த அதே நேரம் இந்தியா, பஹ்ரெய்ன், இந்தோனேசியா, லிபியா, சூடான், செனகல், முரித்தானியா, கபொன், புர்கினோ பாஸோ, தகோ, கமரூன், ஜப்பான், நமீபியா, நேபாளம் ஆகிய 14 நாடுகளும் இப்பிரேரணை மீதான வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை.

வல்லரசு நாடுகள் தலைமையில் வளர்முக நாடான இலங்கைக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட இப்பிரேரணைக்கு எதிரான நிலைப்பாட்டை 25 நாடுகள் எடுத்துள்ளன. அவற்றில் 11 நாடுகள் நேரடியாகவே எதிரான நிலைப்பாட்டை எடுத்திருக்க, 14 நாடுகள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாது தத்தம் ஆட்சேபனையை வெளிப்படுத்தி இருக்கின்றன.

இந்நிலையில்தான் இலங்கை வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன, இப்பிரேரணைக்கு எதிராகவும் இலங்கைக்கு ஆதரவாகவும் வாக்களித்த 11 நாடுகளுக்கும் வாக்களிப்பில் கலந்து கொள்ளாத 14 நாடுகளுக்கும் இலங்கை சார்பில் தம் நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டுள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் நாட்டின் நலன்களை முன்னிலைப்படுத்தி மேற்கொண்ட நடவடிக்கைகளின் பயனாக இப்பிரேரணைக்கு எதிரான நிலைப்பாட்டை இவ்வளவு தொகை நாடுகள் எடுத்திருக்கின்றன.

குறிப்பாக பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கானின் இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயம், இலங்கைப் பிரதமரின் பங்களாதேஷுக்கான உத்தியோகபூர்வ விஜயம், ஜெனீவா மனித உரிமைகள் பேரவையில் அங்கம் வகிக்கும் முஸ்லிம் நாடுகளை உள்ளிடக்கிய உலகின் மிகப் பெரிய அமைப்பான இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பின் செயலாளர் நாயகம் கலாநிதி யூஸுப் அல் உதைமீனுடன் இலங்கை ஜனாதிபதியின் தொலைபேசி ஊடான கலந்துரையாடல், இலங்கை பிரதமர், பஹ்ரெய்ன் துணை மன்னர் சல்மான் பின் ஹமட் அல் கலிபா உடன் தொலைபேசி ஊடாக மேற்கொண்ட கலந்துரையாடல் என்பன இதற்கு முக்கிய பங்களித்து இருக்கின்றன.

அதேநேரம் சீனா, ரஷ்யாவைப் போன்று ஜெனீவா மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு தொடர்ந்தும் ஆதரவு நல்கிவரும் நாடு என்பதை பாகிஸ்தான் மீண்டுமொரு தடவை உறுத்திப்படுத்தி இருக்கின்றது. குறிப்பாக 2014 இல் ஜெனீவா மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட பிரேரணையை வாக்கெடுப்புக்கு விட முன்னர் அதில் திருத்தங்கள் செய்ய வேண்டுமெனக் கோரி பாகிஸ்தான் மூன்று தடவை ஆட்சேபனை தெரிவித்து வாக்கெடுப்பு கோரியிருந்தமை தெரிந்ததே.

வளர்முக நாடொன்றுக்கு எதிராக இவ்வாறு பிரேரணையைக் கொண்டு வந்து நெருக்கடிகளை ஏற்படுத்துவது நல்லதல்ல. இது தொடர்பில் வல்லரசு நாடுகள் கவனம் செலுத்த வேண்டும். ஏனெனில் நிலைபேறான அபிவிருத்தியை அடைந்து கொள்வதில் கவனத்தை குவித்து செயற்பட்டு வரும் இலங்கைக்கு எதிரான இவ்வாறான நடவடிக்கைகள் அதன் அபிவிருத்திப் பாதையில் இடையூறுகளை ஏற்படுத்துவதாக அமையலாம்.

அதனால் இவ்வாறான விவகாரங்களை சம்பந்தப்பட்ட நாட்டுடன் கலந்துரையாடி சுமுகத் தீர்வுகளைப் பெற்றுக் கொள்ளவே முயற்சிக்க வேண்டும். அதுவே தார்மீகமானதாக இருக்கும். அத்தோடு சம்பந்தப்பட்ட நாட்டின் நிலைபேறான அபிவிருத்திக்கு அளிக்கப்படும் பாரிய பங்களிப்பாகவும் இருக்கும்.

editor.tkn@lakehouse.lk

# அருளமுதம் வழங்கும் அருட்சிவயோக வள்ளல்

## யோக சுவாமிகளின் 57 ஆவது குருபூசை



யோக சுவாமிகள் செல்லப்ப தேசிகர் அருளால் சிவ போகத்தில் பொருந்திய இடம் நல்லூர்த் தேரடி ஆகும். அவர் அரை நூற்றாண்டு காலமாக உறைந்து சிவதொண்டு புரிந்த இடம் கொழும்புத்துறை ஆச்சிரமம். தமது சாந்நித்தியம் என்றும் நின்று நிலவும் வண்ணமாய்க் கோவில் கொண்டருளும் இடம் சிவதொண்டன் நிலையம் ஆகும்.

செல்லப்பமூர்த்தம் ஒரு சிவமூர்த்தமே. யோகசுவாமிகள் இம்மூர்த்தத்தை மூவர்களும் ஒன்றாகச் சேர்ந்த நல்ல மூர்த்தம் எனப் போற்றுவார். இக்குரு யோகசுவாமிகளைத் தம்மோடு கூடக் குடியிருத்தி, ஞானவித்தையின் நுட்பங்களையெல்லாம் ஒன்றும் ஒழியாமற் போதித்தார். அப்போதனை நிறைவுற்ற பின்னர் ஒருநாள் யோகசுவாமிகளை உவகை பூத்த முகத்துடன் உற்றுநோக்கி 'ஒரு பொல்லாப்புமில்லை' என்று அருவமும் காட்டி, உருவமும் காட்டி, அருள் நிலை காட்டி, அந்தம் ஆதியில்லாச் சொருபமும் காட்டினார்.

அந்த நன்மோன நிறைவில் சுவாமி பிரிந்திருந்ததில்லை. அவர் மோனநிலை தவறாத ஞானநிட்டர். அவர் செல்லப்பரைப் போற்றிச் சொன்ன “ஆறாறு தத்துவத்துக்கப்பாலே உள்ளவன், மாறாக் கருணையன், மருமத்தில் மருமமாயிருப்பான், மாதவருமறியாத மகத்தான்” என்னும் மொழிகள் அவருக்கும் பொருந்துவதே.

யோகசுவாமிகளது திருவுள்ளத்திலே ஆசான் தமக்கு ஈந்த அனுபவ சித்தாந்தத்தை உலகறிய விளக்கம் செய்ய வேண்டுமென்ற திருக்குறிப்புத் தோன்றியதும் கொழும்புத்துறைக் கொட்டிலிற் போய மர்ந்தார். தக்கவர்களைத் தேடி யாழ்ப்பாணத்துச் சந்தி, தெருக்கள், சந்தை கடைகளெங்கும் திரிந்தார். அவர் உத்தியோகம் புரிந்த கொழும்புப் பட்டினம், கண்டி, மலைநாடெல்லாம் மாதம் ஒருமுறை சுற்றி வந்தார். ஒரு ஞானிக்கும் ஞான நாட்டமுடையோர்க்குமான சம்பந்தம் மலருக்கும் மதுவண்டுக்கும் உள்ளதும், பழமரத்துக்கும் வௌவாலுக்கும் உள்ளதும் போன்ற சம்பந்தமெனவே தோன்றுகின்றது.

சுவாமிகளை ஒரு பெரும் திருக்கூட்டம் சூழ்ந்தது. அத்திருக் கூட்டத்தில் சித்தாந்தசாத்திர நூல்களைச் சிந்தித்துச் சிந்தித்து சோதியாய்ப் பரிணமித்த திருவிளங்க தேசிகர் ஆகிய தீவிர பக்குவர்கள் இருந்தனர். திருவடியின்பத்தைக் இலக்காகக் கொண்டு சுவாமிகளின் பின்னே முன்பின் நாடாது செல்லவல்ல மார்க்கண்டு சுவாமிகள், செல்லத்துரை சுவாமிகள் முதலான உத்தம சீடர்கள் இருந்தனர்.

பிரம்மஸ்ரீ கணேசய்யர், சோமசுந்தரப் புலவர் ஆகிய இரு மொழிக்கடல்களும் பழுத்த தமிழ்ப் புலவர்களும் இருந்தனர். சேர். பொன். இராமநாதன் போன்ற தலைவர்கள் கொழும்புத்துறை ஆச்சிரமத்திற்கு வந்து திருக்கதவம் திறக்கும் தருணம் பார்த்து நின்றனர். S.W.R.D. பண்டாரநாயக்கா அவர்கள் கொழும்புத்துறைக் கொட்டிலுள் புகுந்து சுவாமிகளின் ஆசி வேண்டினார்.

அபயசேகர, திகிரிபண்டார, சுசநாக வீரப்பெரும் ஆதிய பௌத்த அறிஞர்கள் அவரைத் தரிசித்துச் சென்றனர். இராமகிருஷ்ண மடத்துத் தலைவராயிருந்த சுவாமி அசங்கானந்தா மகராஜ் அவர்கள் தாம் தரிசித்த இரு மகத்தான ஞானியருள் யாழ்ப்பாணச் சோதியான யோகசுவாமிகள் ஒருவர் எனப் போற்றினார். கனேடியத் தூதுவராய்ப் பணிபுரிந்த கலாநிதி ஜோர்ஜ் அவர்கள் சுவாமிகளைத் தமது ஆன்மீகக் குருவாகக் கொண்டு அடிக்கடி தரிசித்து மோனத்தேன் பருகிக் களித்தார்.

சோல்பரிப் பிரபுவின் புதல்வரான றாம்ஸ்போதம் என்பவர் 'சந்தசுவாமி' எனும் நாமம் சூடி சுவாமிகளின் துறவுச் சீடருள் ஒருவராய்ச் சிவதொண்டு புரிந்தார். நீதியரசராயிருந்த அக்பர் பொதுக் கூட்டங்களுக்கு விருந்தினராய்ச் சென்று உரையாற்றிய போதெல்லாம் சுவாமிகளைப் பற்றிச் சில வசனங்களாவது சொல்லத் தவறுவதில்லை.

ஸ்ரீகாந்தா போன்ற அரச அதிபர்கள் சுவாமிகளின் பணி செய்தனர். ஆசிரியர்கள், வைத்தியர்கள் என்று அரச பணி புரிந்தோரும், கமம் செய்தோரும், வயோதிபர்களும், குழந்தைகளும் சுவாமிகளிடம் அன்பு பூண்டனர். தீய பழக்கங்கள் கொண்டோரும் திருந்துவதற்காக அவரை நாடி நின்றனர்.

“நாங்கள் பரிசுத்தரும் தெய்வத்துள் வைக்கப்பட்டவர்களாகவும் இருக்கிறோம். எங்களுக்குள் ஒரு மாறுபாடும் இல்லை. நாங்கள் எல்லாம் ஒரே ஆள். இதுவே நமது உண்மைச் சுபாவம்! வித்தியாசங்கள் எல்லாம் உண்மைச் சுபாவத்தின் சிறப்புக்கள். அவற்றால் ஒரு குறையுமில்லை. கடவுளால் நம்மைப் பிரிந்திருக்க முடியாது. இந்தக் குழந்தைக்கும் எனக்கும் ஒரு வயது” என்ற வண்ணம் எளிதாய் எவர்க்கும் இன்னுரை சொன்னார்.

அவர் தெய்வத்தோடு நமக்குள்ள சம்பந்தத்தை நினைவூட்டிய வண்ணம் நடமாடும் தெய்வமாகத் திரிந்தார். 'எங்கும் மங்களம் தங்குக' என்று கூறிக் கொண்டு எங்கும் திரிந்தார். அதனால் யாழ்ப்பாணம் எங்கும் திருவும், கல்வியும், சீரும் தழைத்தன. ஒரு குறிப்பிட்ட காலப் பகுதியில் யாழ்ப்பாண மக்கள் கல்வி, செல்வம், உத்தியோகம் ஆகியவற்றில் முன்னணியினராய் நின்றதன் இரகசியம் இதுவே.

சுவாமிகள் தாம் திருவடிக் கலப்புறுவதற்குப் பத்து ஆண்டுகளுக்கு முன் சிவதொண்டன் நிலையத்தை நிறுவினார். இது பற்றி பின்னர் தம் அன்பர்களிடம் கூறிய போது தனக்குப் பின் தன்னை நம்பினோர் வழிதவறி போகாதிருத்தற் பொருட்டு இதனை நிறுவியதாகக் குறிப்பிட்டார்.

தம்மைத் தரிசிக்கக் கொழும்புத்துறைக்கு வருவோரிடம் “இங்கு ஏன் வருகிறீர்கள்? சிவதொண்டன் நிலையத்திற்குச் சென்று நன்றாக தியானஞ் செய்யுங்கள்” என்று கூறினார். தக்கவர்களைப் பார்த்துத் தான் சிவதொண்டன் நிலையத்தில் இருப்பதாயும் அங்கு தியானஞ் செய்வோர் அனைவருடனும் கூட இருப்பதாயும் கூறியருளினார்.

தியான மண்டபத்திற்கு ஏறிச் செல்லும் படிகளில் குண்டலினி சக்தியிருப்பதாயும் கூறினார். அவர் திருவடிக் கலப்புறுவதற்கு முந்திய ஓராண்டு காலத்தில் தியான மண்டபத்திலே திருவடி வீற்றிருக்கும் இடத்திற்கு நேரே கீழிருக்கும் அறையில் இடையிடையே வந்து உறைந்தார். அவ்வறையிலேதான் பேராசிரியர் ரி.எம்.பி.மகாதேவன் போன்ற தத்துவப் புலவர்கள் சுவாமிகளைத் தரிசிக்கும் பாக்கியம் பெற்றனர். யோகசுவாமிகள் நல்லைத்தேரடியில் சிவயோகத்தில் பொருந்தியது போல செல்லத்துரை சுவாமிகள் சிவயோகத்திற் பொருந்திய இடம் சுவாமிகள் உறைந்த அவ்வறையேயாம்.

யாழ்ப்பாணம் முழுவதற்கும் சோதிப் பிரகாசமளிக்கும் ஞானச்சுடர் விளக்காகச் சிவதொண்டன் நிலையம் ஒளிர்கிறது. இந்நிலையத்திலே கடந்த மூன்று நாட்களாக ஆச்சிரம வாழ்வு வாழ்ந்து நந்சிந்தனை முற்றோதல் புரிந்த அடியார்கள் இன்று(25.03.2021) யோகசுவாமிகளின் ஐம்பத்தேழாவது குரு பூசையை அபிடேக ஆராதனைகளுடனும் சிறப்புடனும் அனுட்டிக்கிறார்கள்.

**சிவதொண்டன் சபை...**
434, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்

# காலத்தால் அழியாத புகழுக்குரிய இசையுலக ஆளுமை சீர்காழி

திருஞானசம்பந்த நாயனார் அவதரித்த சீர்காழி பதியில் 19.01.1933 அன்று சாதாரண மிட்டாய்க்கார குடும்பத்தில் சிவசிதம்பரம், அபயம்பாள் தம்பதியருக்கு மூன்றாவது மகனாக பிறந்தார் கோவிந்தராஜன். சிறு வயதிலிருந்தே சங்கீதம், நாடகம், இசை, நடிப்பில் பெரும் ஆர்வம் கொண்டவர் இவர்.

தேவி நாடக சபாவில் இணைந்து இசை, நாடகம் என சில காலம் பொழுதைக் கழித்த கோவிந்தராஜன், பின்னர் சேலம் மொடர்ன் தியேட்டர்ஸில் துணை நடிகராக மாதச் சம்பள அடிப்படையில் பணியாற்றினார். இவரின் வாழ்க்கைப் பாதை முட்கள் நிறைந்தது. படிப்படியாக முன்னேறி தமிழ் இசைக்கல்லூரியில் இசைமணி பட்டப்படிப்பில் தேர்ச்சி பெற்று சென்னை மத்திய அரசு கலைக் கல்லூரியில் ‘சங்கீத வித்துவான்’ பட்டம் பயின்று தனது தகுதியை திறம்பட வளர்த்துக் கொண்டார்.

சீர்காழி கோவிந்தராஜன் கர்நாடக சங்கீதம், நாடக சங்கீதம், பக்தி இசை, மெல்லிசை, சினிமா இசை, கிராமிய இசை என அனைத்திலும் தனிமுத்திரை பதித்து சிறப்புப் பெற்றவர். சினிமாவில் பின்னணிப் பாடகராக சுமார் 16000 பாடல்கள் பாடியுள்ளார் சீர்காழி கோவிந்தராஜன். சிவாஜி கணேசன், எம்.ஜி.ஆர், எஸ்.எஸ். ராஜேந்திரன், முத்துராமன், என்.டி.ராமராவ், வி.நாகையா, ரஜினிகாந்த், பாண்டியன் போன்ற பல நடிகர்களுக்கு பின்னணி பாடியுள்ளார்.

தனது வெண்கலக் குரலால் ஆலயங்களில் இவர் இசைக் கச்சேரி நடத்தும் பொழுதுகளில் இறைவனே இறங்கி வந்து விடுவதைப் போல் பிரமை ஏற்படும். இவர் பாடிய பாடல்கள் அனைத்தும் கண்ணியம் மிக்க வரிகளைக் கொண்டதாக இருக்கும். நல்ல தரத்தில் அமைந்த பாடல்களுக்கு மட்டுமே பின்னணி பாடும் கொள்கையைக் கொண்டவர் சீர்காழி கோவிந்தராஜன். தமிழ்நாட்டில் காமராஜர், அண்ணா போன்றோர் தலைமையில் நடைபெற்ற காவல்துறை மாநாடு, உலகத் தமிழ் மாநாடு போன்ற மிக முக்கியமான நிகழ்வுகளில் சீர்காழி கோவிந்தராஜனின் கச்சேரி கண்டிப்பாக நடைபெறுவதுண்டு.

மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் முதலமைச்சராக இருந்த போது சீர்காழி கோவிந்தராஜன் அரசவை கலைஞராக இருந்தார். இவர் தொகுத்துப் பாடிய திருக்குறள் இசைத்தட்டு வெளியீடு பேரறிஞர் அண்ணா தலைமையில் நடைபெற்றதை தன் வாழ்நாளில் பெரும் பாக்கியமாக கருதியவர் சீர்காழி கோவிந்தராஜன்.

காஞ்சி காமகோடி பீடம், குன்றக்குடி ஆதீனம், தர்மபுர ஆதீனம் போன்ற ஆன்மீக பீடங்களின் இசைப் புலவர் பட்டங்களைப் பெற்றவர். கடைசி வரை அரசியல் சாயமின்றி எல்லாத் தலைவர்களிடத்திலும் சமமாகப் பழகி, பண்பைப் பேணியவர் சீர்காழி கோவிந்தராஜன். உலகில் பல்வேறு நாடுகளில் தனது இசைப் பங்களிப்பை வழங்கியுள்ளார். இலங்கைக்கு பல



**33ஆவது நினைவு தினம் (24.03.2021)**

தடவை விஜயம் மேற்கொண்டு இசைப்பணியாற்றினார். இவர் லண்டனில் நடத்திய கச்சேரி இன்றளவிலும் வரலாற்றுப் புகழ் கொண்டது.

இவர் பாடிய சிறந்த பாடல்கள் சில...

கல்லிலே கலைவண்ணம் கண்டான், கண்ணன் வந்தான் இங்கே கண்ணன் வந்தான், இருக்கும் இடத்தை விட்டு இல்லாத இடம் தேடி□

‘கர்ணன்’ படத்தில் இவரின் இசைப்பங்களிப்பு மகத்தானது. மழை கொடுக்கும் கொடையுமொரு, மரணத்தை எண்ணி கலங்கிடும் விஜயா, உள்ளத்தில் நல்ல உள்ளம் உறங்காதென்பது போன்ற பாடல்களும், காதலிக்க நேரமில்லை காதலிப்பார் யாருமில்லை, திருச்செந்தூரில் கடலோரத்தில் செந்தில்நாதன் அரசாங்கம், உலகம் சுற்றும் வாலிபனில் டைட்டில் பாடல் நமது வெற்றியை நாளை சரித்திரம் சொல்லும், இதயக்கனியில் நீங்க நல்லாயிருக்கணும் இந்த நாடு முன்னேற, சிவந்த மண்ணில் அம்மா உன் மகனோடு உன் பொன்னுடலும் கலந்ததம்மா, அகத்தியரில் உலகம் சமநிலை பெறவேண்டும், தாயிற் சிறந்த கோயிலுமில்லை, நடந்தாய் வாழி காவேரி, வென்றிடுவேன் நாட்டையும், பழைய தசாவதாரம் படப்பாடல்கள், ராஜ ராஜ சோழனில் ஓசை ஒலியெலாம், கந்தன் கருணையில் ஆறுபடை வீடு கொண்ட திருமுருகா, பாகப்பிரிவினையில் ஒற்றுமையயாய் வாழ்வதாலே உண்டு நன்மையே என்ற பாடலும், பணம் பந்தியிலே குணம் குப்பையிலே, நித்தம் நித்தம் மாறுகின்றதெப்படியோ, எங்கிருந்தோ வந்தான் கண்ணன் இங்கிவனை யான் பெறவே என்ன தவம் செய்து விட்டேன், தேவன் கோவில் மணியோசை, செங்கனிவாய் திறந்து சிரித்திடுவாய், ஓடம் நதியினிலே ஒருத்தி மட்டும் கரையினிலே, என்னடா தமிழ் குமரா எனை நீ மறந்தாயடா, மலைகளில் சிறந்த மலை மருதமலை, சின்னஞ் சிறு பெண் போலே சிற்றாடை இடை உடுத்தி சிவகங்கை குளத்தருகே, விநாயகனே வினை தீர்ப்பவனே, சித்தூர் ராணி பத்மினியில் பார்த்துக் கொண்டிருந்தாலே போதும், திருப்பதி மலை வாழும் வெங்கடேஷா, ஆத்தாடி மாரியம்மா, ஆண்டுக்கு ஆண்டு தேதிக்கு தேதி ஆயிரம் இருக்குது சுபதினம், இது நீரோடு செல்கின்ற ஓடம், கோட்டையிலே ஒரு ஆலமரம் அதில் கூடு கட்டும் ஒரு மாடப்புறா என வரிசைப்படுத்திக் கொண்டே செல்லலாம்.

மேலும் சீர்காழி கோவிந்தராஜன் ஓர் சிறந்த நடிகர். இவருக்கு சினிமாவில் நடிக்க பெரும் வாய்ப்பளித்தவர் இயக்குனர் ஏ.பி.நாகராஜன். கந்தன் கருணை, வா ராஜா வா, திருமலைத் தென்குமரி, அகத்தியர், தெய்வம், ராஜராஜ சோழன், திருவருள், தசாவதாரம் (பழையது), தாய் மூகாம்பிகை, மீனாட்சி திருவிளையாடல் போன்ற படங்களில் நடித்தும் உள்ளார்.

இவற்றில் அகத்தியர் படத்தில் அகத்தியர் வேடத்தில் நடித்து பிரமிக்க வைத்தார். இந்திய அரசின் பத்மஸ்ரீ, சங்கீத நாடக அக்கடமி விருது, தமிழக அரசின் சிறந்த பின்னணி பாடகர் விருது, கலைமாமணி விருது, இசைஞான பூபதி விருது, மொரீசியஸ் தூதுவர் கௌரவ விருது போன்ற சிறப்புகளை அடைந்தவர் சீர்காழி கோவிந்தராஜன் அவர்கள்.

இவர் பாடிய பாடல்கள் காலத்தால் சாகா வரம் பெற்றவைகளாகும். தனது 55 ஆவது வயதில் 24.03.1988 அன்று இறுதி மூச்சிலும் "உலகம் வாழ்க, உலகம் வாழ்க" என பிராத்தனை செய்து கொண்டே இறைவனை அடைந்தார் இசைஞான பூபதி சீர்காழி கோவிந்தராஜன் அவர்கள். சீர்காழி கோவிந்தராஜன் போன்ற யுகப் பாவலர்கள் என்றும் அழிவதில்லை, பல யுகங்கள் கடந்தாலும் இவர் புகழ் நீடிக்கும் என்பதில் ஐயமில்லை.

## இசை, நடிப்பு கலைகளில் மாத்திரமன்றி தனிமனித வாழ்விலும் தலைசிறந்த பண்பாளன்

**எஸ்.கணேசன் ஆச்சாரி சதீஷ்...**
கம்பளை

# தமிழ்நாட்டில் தேர்தல் துரும்புகளாக கச்சதீவு, இலங்கை தமிழர் விவகாரம்

**தமிழகத்தில் நடைபெறப் போகின்ற சட்டமன்றத் தேர்தலில் இலங்கைத் தமிழர் விவகாரம், கச்சதீவு பிரச்சினை, தமிழக மீனவர் பிரச்சினை ஆகியன பெரிதும் முக்கியத்துவம் பெறுகின்றன.**

தமிழக மீனவர்கள் பிரச்சினை, இலங்கை தமிழர் பிரச்சினை தொடர்பாக மணிக்கணக்கில் பேசுகின்ற பா..ஜக இம்முறை தேர்தல் அறிக்கையில் இதனை திட்டமிட்டே புறக்கணித்திருப்பதாக பலரும் கருதுகின்றனர். இப்படி தமிழர் நலனை புறக்கணித்துவிட்டு இந்த மண்ணில் "எங்களுக்கு வாக்கு போடுங்கள்" என பா.ஜ.க எப்படி கேட்க முடியும் என்கிறார்கள் அவர்கள்.

சட்டசபை தேர்தலுக்காக பிரசாரம் செய்ய வந்த பிரதமர் மோடி, "எங்களுடைய ஆட்சியில் ஒரு தமிழக மீனவர் கூட இலங்கைச் சிறையில் இல்லை,பெரும்பாலான படகுகளை மீட்டு விட்டோம், சில படகுகளையும் மீட்போம்" என கூறினார். யதார்த்தம் வேறு விதமான இருக்கையில் இப்படி பேசலாமா என கொந்தளித்தனர் மீனவர்கள்.




"70 ஆண்டுகளுக்கு முன்னர் பாகிஸ்தான் ஆக்கிரமித்த காஷ்மீரை இந்திய வரைபடத்தில் சேர்த்துக் கொண்டு இறுமாப்பு பேசுகிறது பாரதிய ஜனதா கட்சி. ஆனால் 40 ஆண்டுகளுக்கு முன்னர் இந்தியாவினால் இலங்கைக்கு தாரைவார்க்கப்பட்ட கச்சதீவை மீட்டுத் தருவோம், கச்சதீவை மீட்டு தமிழர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமையை நிலைநாட்டியே தீருவோம் என வாக்குறுதி கொடுக்காமல் இருப்பது ஏன்?அவ்வளவுதான் உங்களின் தமிழர் நலன் மீதான அக்கறை" என்று பா.ஜ.கவுக்கு எதிரான அணியினர் கூறுகின்றனர்.

அடுத்து இலங்கை தமிழர் பிரச்சினை. இலங்கைத் தமிழர் பிரச்சினையில் எப்போது பார்த்தாலும் 13வது அரசியல் சாசன திருத்தம், ஒன்றுபட்ட இலங்கைக்குள் தீர்வு என்றெல்லாம் பிரசங்கம் செய்வது பா.ஜ.கவின் வாடிக்கை. ஆனால் அதன் தேர்தல் அறிக்கையில் அப்படி ஒரு கடுமையான சொல் இல்லை.

இலங்கை அகதிகளுக்கு குடியுரிமை வழங்குவோம் என சொல்கிறார்கள். ஆனால் சி.ஏ.ஏ.வை நீங்கள் கொண்டு வந்த போது ஏன் அந்த மசோதாவில் இலங்கையும் இல்லை. இலங்கை தமிழர்கள் தமிழர்கள் இல்லையா என்று ஒட்டுமொத்த தமிழகமுமே கேட்டது. வியாக்கியானங்கள் விலாவாரியாக விழுந்த போதும் ஒன்றும் நடக்கவில்லை. உங்கள் தேர்தல் அறிக்கையிலும் எதுவும் இல்லை. எந்த முகத்தை வைத்துக் கொண்டு இந்த தமிழ் நிலத்தில் வாக்கு கேட்கும் துணிச்சல் பா.ஜ.கவுக்கு இருக்கிறதோ என்று வினவுகிறார்கள் எதிரணியினர்.



மொத்தத்தில் சட்டமன்றத் தேர்தலில் கச்சதீவு மற்றும் இலங்கைத் தமிழர் விவகாரம் இம்முறை முக்கியத்துவம் பெறுகின்றது.

# புராதன சின்னங்களுக்கு மதிப்பளிக்கும் கடமை நம் அனைவருக்கும் உள்ளது



**காத்தான்குடிக்கு நல்லெண்ண விஜயமொன்றை மேற்கொண்டு தென்னிலங்கையிலுள்ள பௌத்த தேரர்கள் மூவர் சில தினங்களுக்கு முன்னர் வருகை தந்தனர்.**

அகில இலங்கை ஜம் இய்யத்துல் உலமா சபையின் ஏற்பாட்டில் 'இலங்கையிலுள்ள புராதன சின்னங்களை பாதுகாப்போம்' எனும் தொனிப்பொருளில் இவர்களின் இந்த நல்லெண்ண விஜயம் அமைந்திருந்தது.

உதவிக் கல்விப் பணிப்பாளர் கடுவல, தொரந்தொட்ட ரஜமகா விகாரையின் கறுவிலக் கொட்டு தம்மதிலக தேரோ தலைமையில் இம்புல்கொட அமுனுகம ரஜமகா விகாரையின் தேவானந்தா தேரோ, சஸ்ரபதி குணமாரியாவே நந்தசிறி தேரோ ஆகிய மூன்று தேரர்கள் வருகை தந்ததுடன் அகில இலங்கை ஜம் இய்யத்துல் உலமா சபை பிரதி நிதிகளும் இந்த விஜயத்தில் பங்கு கொண்டனர். காத்தான்குடிக்கு வருகை தந்த பௌத்த மத தேரர்கள் காத்தான்குடி மீரா பாலிகா தேசியப் பாடசாலை மற்றும் காத்தான்குடி மத்திய மகாவித்தியாலய தேசியப் பாடசாலைகளுக்கு சென்று அங்குள்ள மாணவ மாணவியரை சந்தித்தனர்.ை

இதன்போது இவர்களுக்கு ம கத்தான வரவேற்பளிக்கப்பட்டது. காத்தான்குடி மீராபாலிகா மகாவித்தியாலய தேசியப் பாடசாலையில் அதிபர் எம்.சி.எம்.ஏ.சத்தார் தலைமையில் நடைபெற்ற வைபவத்தில் இவர்கள் கலந்து கொண்டனர். அதே போன்று காத்தான்குடி மத்திய மகா வித்தியாலய தேசியப் பாடசாலைக்குச் சென்ற இவர்களை பாடசாலை அதிபர் எஸ்.எச். பிர்தௌஸ் வரவேற்றார்.

இந்த நிகழ்வுகளில் பாட சாலையின் பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் காத்தான்குடி ஜம் இய்யத்துல் உலமா சபை, காத்தான்குடி காத்தான்குடி பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளன பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

காத்தான்குடி மீரா ஜும்ஆப் பள்ளிவாயலுக்கு சென்று ஜும்ஆ தொழுகையை பார்வையிட்டதுடன் பள்ளிவாயலில் பொதுமக்களை சந்தித்தனர். இதன் போது பள்ளிவாயலுக்கு தொழுகைக்காக சமுமகளித்திருந்தவர்கள் பௌத்த தேரர்களுடன் கைலாகு கொடுத்து உரையாடினர்.

## காத்தான்குடிக்கு நல்லெண்ண விஜயம் மேற்கொண்ட பௌத்த தேரர்கள் குழு

அதே போன்று காத்தான்குடி சித்தீக்கியா பெண்கள் அரபுக் கல்லூரி, காத்தான்குடி ஜாமியத்துல் பலாஹ் அரபுக் கல்லூரி, காத்தான்குடியிலுள்ள இஸ்லாமிய நூதனசாலை என்பவற்றை அவர்கள் சென்று பார்வையிட்டனர்.

இந்த விஜயத்தின் போது காத்தான்குடி ஜம் இய்யத்துல் உலமா சபையினரையும் சந்தித்தனர்.

இதன் போது கருத்து தெரிவித்த கறுவிலக்கொட்டு தம்மதிலக தேரோ,

"தேசிய பெருமைகள் தேசிய சொத்துக்கள் ஒரு இனத்துக்கு, ஒரு சமயத்துக்கு சொந்தமானவையல்ல. அவை நம் அனைவருடைய தேசிய சொத்துக்களாகும். அதனை நாம் அனைவரும் பாதுகாக்க வேண்டும்" எனத் தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர் "இந்த நாட்டிலுள்ள புராதனச் சின்னங்கள் தேசிய சொத்துக்களாகும். இந்த நாட்டிலுள்ள அனைவரும் சேர்ந்து இந்த புராதனச் சின்னங்களை பாதுகாக்க வேண்டும். அதனை மதிக்க வேண்டும்" எனக் குறிப்பிட்டார்.

"தேசிய முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை தேசிய சொத்துக்களாக மதித்து நடக்க வேண்டிய கடமை நம் அனைவருக்கும் உண்டு. இலங்கையில் இனங்களுக்கிடையிலான ஒற்றுமை என்பது நீண்ட வரலாற்றைக் கொண்டது.

இலங்கையின் அரச சபைகளிலும் பாதுகாப்புச் சபைகளிலும் முஸ்லிம்கள் அங்கம் வகித்து பங்களிப்புச் செய்து வந்துள்ளார்கள். இலங்கை முஸ்லிம்களுக்கு மிகவும் கௌரவமான, பெறுமதியான ஒரு வரலாறு இந்த நாட்டில் இருக்கின்றது.

அண்மைக் காலத்தில் ஏற்பட்ட துரதிர்ஷ்டவசமான ஒரு சில சம்பவங்கள் தொடர்பில் இலங்கை முஸ்லிம்களை ஏனைய சமூகங்கள் சந்தேகத்துடன் பார்ப்பதுடன் சங்கடத்தை ஏற்படுத்துவதை காணக் கூடியதாக இருக்கின்றது.

இந்த வகையில் தேசிய தொல்பொருள்களை, புராதனச் சின்னங்களை பாதுகாப்பதற்கான கொள்கை ஒன்றை உருவாக்குவதற்கான பணிகளை நாங்கள் மேற்கொண்டிருக்கின்றோம்.





உங்களுக்கு சமய ரீதியான விடயங்கள் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தவையாக இருக்கின்றனவோ அவை எனக்கும் பௌத்தர்களுக்கும் தேசிய ரீதியாக தேசிய சொத்துக்கள் என்ற வகையில் எங்களுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கின்றன.

தேசிய முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை தேசிய சொத்துக்களாக மதித்து நடக்க வேண்டிய கடமை நம் அனைவருக்கும் உண்டு. தேசிய பெருமைகள் தேசிய சொத்துக்கள் ஒரு இனத்துக்கு ஒரு சமயத்துக்கு சொந்தமானதல்ல. அவை நம் அனைவருடைய சொத்துகள். நம் அனைவருடைய பெருமைகள் அவை என்பதை நாம் அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

தேசிய பெறுமதி மிக்க சொத்துக்களை பார்ப்பதற்கு, அவற்றை அனுபவிப்பதற்கு வருமாறு உங்களுக்கு நான் அழைப்பு விடுக்கின்றேன். அவைகளை பாதுகாத்து, அவற்றை கௌரவப்படுத்தி, எந்தவொரு தீங்கும் செய்யாமல் பாதுகாப்பது எங்களுடையதும் உங்களுடையதுமான பொறுப்பாகும்" என்றார் அவர்.

இதன்போது பௌத்த தேரர்களுக்கு காத்தான்குடி ஜம் இய்யத்துல் உலமா சபையினால் நினைவுச் சின்னங்களும் வழங்கப்பட்டன.

**எம்.எஸ்.எம்.நூர்தீன்...**
(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)

# சுற்றுச் சூழலை பாதுகாத்து எழிலூட்டும் பணியில் சாய்ந்தமருது இயற்கையை நேசிக்கும் மன்றம்

**சாய்ந்தமருது இயற்கையை நேசிக்கும் மன்றம் என்.எல்.எஃப் (Nature Loving Forum – N.L.F) கடந்த ஒரு வருட காலமாக சுற்றுச் சூழல் நடவடிக்கை தொடர்பில் இப்பிரதேசத்தில் பணிகளை மேற்கொண்டு வருகின்றது. சாய்ந்தமருது–மாளிகைக்காடு பிரதேசத்தில் இந்த அமைப்ப பல பணிகளை முன்னெடுத்து வருகின்றது.**

சாய்ந்தமருது இயற்கையை நேசிக்கும் மன்றம் (என்.எல்.எஃப்) சமுதாய அடிப்படையிலான தன்னார்வ அமைப்பாகும். இவ்வமைப்பு சுற்றுச்சூழல் மற்றும் அது தொடர்புடைய பிரச்சினைகள் குறித்து சமூகத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டு பணியாற்றி வருகின்றது. சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்து மாணவர்கள் மற்றும் தன்னார்வ செயற்பாட்டாளர்களை விழிப்புணர்வூட்டல், ஊக்குவித்தல் மற்றும் இயற்கை பற்றிய கல்வியூட்டல் ஆகிய சேவைகளில் இந்த அமைப்பு செயற்பட்டு வருகின்றது.



என்.எல்.எஃப் அமைப்பானது மரநடுகை, கடலோரப் பாதுகாப்பு மற்றும் இயற்கையை பாதுகாத்தல் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், பிளாஸ்டிக் பாவனையை குறைத்தல், மீள்சுழற்சி செய்யப்பட்ட பொருட்களின் பயன்பாட்டை ஊக்குவித்தல், சேதனப் பசளை பயன்பாட்டை ஊக்குவித்தல், நஞ்சற்ற உணவுப் பொருள் உற்பத்தி மற்றும் பாவனையை ஊக்குவித்தல் போன்ற செயற்பாடுகளில் மிகுந்த ஆர்வம் செலுத்தி செயற்பட்டு வருவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. அத்துடன், இவ்வமைப்பானது கல்முனை மாநகர சபையுடன் இணைந்து, சாய்ந்தமருது பிரதேத்தில் திண்மக் கழிவகற்றல் செயற்பாடுகள் தொடர்பில் காத்திரமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.



சுனாமி பேரழிவிற்குள்ளான சாய்ந்தமருது முகத்துவாரத்தை அண்டிய கடற்கரை பகுதியை தன்னார்வ அடிப்படையில் சுத்தம் செய்து, பொதுமக்கள் மற்றும் நலன்விரும்பிகளின் பங்களிப்புடன் அழகிய உள்ளூர் பொழுதுபோக்கு தலமாக மாற்றியமை என்.எல்.எப் அமைப்பின் சிறந்ததொரு பணி ஆகும். இதற்கு 'மருதூர் சதுக்கம்' எனப் பெயரிட்டு நிழல் தரும் மரங்கள் நடப்பட்டு தொடர்ச்சியாக பராமரித்து வருவதுடன், சாய்ந்தமருது – மாளிகைக்காடு பிரதேசத்தில் உள்ள கடற்கரையோரம் மற்றும் இயற்கை பிரதேசங்களை பராமரிக்கும் செயற்பாடுகளையும் தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்றது.

இந்த அமைப்பின் தோற்றத்தின் பின்னர் இப்பிரதேச மக்களிடையே சுற்றுச்சூழல் பற்றிய ஆர்வமும், விழிப்புணர்வும் ஏற்பட்டுள்ளதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. மருதூர் சதுக்கம் தற்போது நாளாந்தம் நூற்றுக்கணக்கான மக்கள் வருகை தரும் பொழுதுபோக்கு தளமாக மாற்றப்பட்டுள்ளது.மேலும், இதனை அண்டிய பிரதேசத்தில் நடமாடும் வியாபாரிகள் தங்கள் விற்பனைக் கூடாரங்களை அமைத்துள்ளதன் காரணமாக அவர்களது பொருளாதாரத்தை மேம்படுத்தவும் வசதியாக மருதூர் சதுக்கம் காணப்படுகின்றது.

மருதூர் சதுக்கம் மற்றும் அதனோடு இணைந்த ஏனைய பிரதேசங்களை எதிர்காலத்தில் அபிவிருத்தி செய்யும் பொருட்டு அரசியல்வாதிகள் மற்றும் தனிநபர்கள் அத்துடன் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களை அணுகி இவ்வமைப்பு தொடர்ச்சியான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இயற்கையை நேசிக்கும் மன்றத்தின் செயற்பாடுகளுக்கு பொதுமக்களினதும், இயற்கை விரும்பிகளினதும் ஒத்துழைப்பு கிடைக்குமாயின் இவ்வமைப்பின் செயற்பாடுகளை மேலும் விஸ்தரிப்பதற்கு வாய்ப்பாக அமையும் என்பது இவ்வமைப்பினரின் வேண்டுகோளாக இருக்கின்றது.



**அஷ்ரப் கான்...**
(கல்முனை மத்திய தினகரன் நிருபர்)

# ஈரோஸ் திரையரங்கில் காடன் தமிழ்த் திரைப்படம்

மிக நீண்ட காலத்தின் பின்னர் வெள்ளவத்தை ஈரோஸ் திரையரங்கில் தமிழ்ப்படமொன்று திரையிடப்படவுள்ளது. கானகத்தையும் அங்கு வாழும் யானைகளையும் அழிக்கும் பெரும் முயற்சிகளின் திட்டத்தை எப்படி நாயகன் போராடி இயற்கை வளத்தை பாதுகாக்கின்றான் என்பதை சுவையாகவும் விறுவிறுப்பாகவும் நவீன திரைத் தொழில் நுட்பங்களுடன் அதிரடியாகச் சொல்கிறது இந்தப் படம், காடன்.

படத்தில் விஷ்ணு விஷால், ராணா பகுபதி ஆகியோர் முக்கிய பாத்திரங்களில் நடித்துள்ளனர். கானகத்தை பின்னணியாக கொண்ட படம் என்பதால் காடன் குடும்பத்துடன் பார்க்கக்கூடிய ஒரு திரைப்படம். குழந்தைகளுக்கு குதூகலம் தரக்கூடிய படம் மட்டுமல்ல, அடிதடி காட்சிகளில் விருப்பம் கொண்ட ரசிகர்களுக்கு விசில் அடிக்கச் செய்யும் படம் என்றும் கூறலாம்.கதை களம் கானகப்பகுதியில் நடப்பதாக சித்தரிக்கப்பட்டுள்ளது. அப்பகுதியின் யானைகள் வாழும் பகுதிக்கு பொறுப்பான பஞ்தேவ் என்பவன் காட்டை பசுமை மாறாமல் பாதுகாத்து வருகின்றான் அப்போது அரசியல்வாதிகளின் துணையோடு ஒரு பெரும் வர்த்தக நிறுவனம் காட்டை அழித்து பிரமாண்டமான கொல்ப் மைதானத்தை நிறுவ முனைகிறது. எதிர்ப்பை சமாளிக்க அபீர் என்பவனை கும்கி யானையோடு அந்த நிறுவனம் காட்டுக்கு அனுப்பி வைப்பதோடு காட்டுக்குள் குறுக்கே ஒரு மதிலையும் அமைக்கிறது. இறுதியாக கொல்ப் மைதானத்தின் திறப்பு விழாவும் நடைபெற ஏற்பாடாகிறது. பந்தேவின் கானத்தை காக்கும் முயற்சிகள் தோற்றுப் போனதா? வில்லன் என்னவானான்? கொல்ப் மைதானம் திறந்துவைக்கப்பட்டதா? இக்கேள்விகளுக்கு ஈரோசின் வெள்ளித் திரையில் விடை காணலாம்.

## ரஞ்சன் ... (02ஆம் பக்கத் தொடர்)

எதிர்வரும் 31ஆம் திகதி வழங்கத் தீர்மானித்துள்ளது. நேற்றைய தினம் நீதிமன்றத்தில் ஆஜரான ரஞ்சன் ராமநாயக்க சார்பு சட்டத்தரணி சுரேன் பெர்னாண்டோ, ரஞ்சன் ராமநாயக்க தொடர்ந்து மூன்று மாதங்களுக்கு பாராளுமன்ற அமர்வில் கலந்து கொள்ளாவிட்டால் அவரது பதவி இரத்துச் செய்யப்படும் என்பதை குறிப்பிட்டதுடன் அது தொடர்பான நீதிமன்ற உத்தரவை விரைவாக பிறப்பிக்குமாறும் நீதிமன்றத்தைக் கேட்டுக் கொண்டார்.

அதற்கிணங்க மேற்படி வேண்டுகோளை ஆராய்ந்த மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி அர்ஜுன ஒபேசேகர அதற்கான உத்தரவை பிறப்பிப்பது தொடர்பான திகதியை நேற்று அறிவித்தார். நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டுக்காக கடந்த ஜனவரி 12ஆம் திகதி ரஞ்சன் ராமநாயக்கவிற்கு உயர் நீதிமன்றம் 04 வருட கடூழிய சிறைத் தண்டனை வழங்கி தீர்ப்பளித்தது.

எவ்வாறெனினும் தனது எம்.பி பதவியை இரத்துச் செய்வது தொடர்பான நடவடிக்கையை இடைநிறுத்துவது தொடர்பில் பாராளுமன்ற செயலாளர் நாயகத்திற்கு உத்தரவிட கோரி ரஞ்சன் ராமநாயக்க மேற்படி மனுவை தாக்கல் செய்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ)



இறக்காமம் பிரதேச செயலகப் பிரிவில் பல்வேறு துறைகளையும் சார்ந்த 50 கலைஞர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் பிரதேச செயலாளர் எம்.எம்.நஸீர் தலைமையில் நடைபெற்றது. கலைஞர் சுவதம் விருதுகளை பெற்ற பத்து கலைஞர்களும் பிரதம அதிதியாக கலந்து கொண்ட அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஏ.எம்.ஏ.லதீப்புடன் சேர்ந்து எடுத்துக் கொண்ட படத்தை காணலாம்.

(படம் : இறக்காமம் தினகரன் நிருபர்)

## இன, மத ரீதியான... (02ஆம் பக்கத் தொடர்)

ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார். அதேவேளை தற்போது பதிவு செய்யப்பட்டுள்ள ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசியல் கட்சிகளின் பெயர்கள் அவ்வாறு மத அல்லது இன ரீதியில் அமைந்திருந்தால் அதனை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அது தொடர்பில் சம்பந்தப்பட்ட கட்சிக்கு அறிவித்து நியாயமான கால அவகாசம் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தேர்தல் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது. (ஸ)

## நுகர்வோர் பாதுகாப்பு... (02ஆம் பக்கத் தொடர்)

செய்ய வேண்டியுள்ளது. நெல் ஆலை உரிமையாளர்களுக்கு மட்டுமன்றி பல்வேறு தரப்பினர் நெல் கொள்வனவை சட்டவிரோதமாக மேற்கொள்கின்றனர். இதுதொடர்பில் உரிய சட்டத்திருத்தங்கள் முதலில் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. ஆகவே, நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் சட்டத்தை புதிய உலகுக்கு ஏற்ப விரைவில் மாற்றங்களை மேற்கொள்ள எண்ணியுள்ளோம் என்றார்.

## ஆழ்கடல் மீன்பிடி... (02ஆம் பக்கத் தொடர்)

அண்மையில் எமது அமைச்சினால் 700 மில்லியன் ரூபா செலவில் பேலியகொடை மீன் மொத்த விற்பனை கட்டடத் தொகுதி நவீன மயப்படுத்தப்பட்டது. மீன், கருவாடு மற்றும் மாசி போன்றவற்றுக்கு நாங்கள் கணிசமாக இறக்குமதி வரியை அதிகரித்தோம். இதனால் இறக்குமதியாளர்களின் வெறுப்பிற்கு நாங்கள் ஆளாகியுள்ளோம். பல்வேறு தூதரக அதிகாரிகள் வரியை தளர்த்துமாறு தூதரக மட்டத்தில் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

ஆகவே அடிப்படையற்ற குற்றச்சாட்டுக்களை தெரிவிக்கக் கூடாதெனத் தெரிவித்தார்.

## பாராளுமன்ற நீர்த்தடாகம்... (02ஆம் பக்கத் தொடர்)

சுத்தப்படுத்தப்பட்டிருக்கின்றது. அந்த நீர் தியவன்னா ஓயாவுக்குள் சென்றுள்ளதால்தான் நீரில் நிறம் மாற்றமடைந்திருக்கின்றது. அந்த பகுதியை தற்போது சுத்தப்படுத்த வேண்டி இருக்கின்றது என்றார்.

இதன்போது குறுக்கிட்ட எதிர்க்கட்சித் தலைவர், பாராளுமன்றத்துக்கு நுழையும் இடத்திலே சுற்றாடல் மாசடைவதாக இருந்தால், சிங்கராஜ வனம், ஹோட்டன்சமவெளி தொடர்பில் என்ன பேசுவது? 225 மக்கள் பிரதிநிதிகள் பாராளுமன்றத்துக்கு வரும் வெளியான தியவன்னாவில் இவ்வாறு சுற்றாடல் மாசடைவு இடம்பெறுவதென்றால், இந்த நாட்டின் நிலைமை என்ன? என்றார்.

இதற்கு பதிலளித்த சபாநாயகர், கவனமில்லாமல் செய்ததனாலே இந்த நிலை ஏற்பட்டிருக்கின்றது. தற்போது செய்வதற்கு வழியில்லை. அதனால் சுத்தப்படுத்த நடவடிக்கை எடுப்போம் என்றார்.

## ரவி கருணாநாயக்க... (02ஆம் பக்கத் தொடர்)

தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த வழக்கில் பிரதிவாதிகளாக முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க, முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன மகேந்திரன், பேர்பச்சுவல் ட்ரெசரீஸ் நிறுவனத்தின் உரிமையாளர் அர்ஜுன் அலோசியஸ் மற்றும் அந்த நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரி கசுன் பலிசேன ஆகியோர் உட்பட பலர் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.(ஸ)

## கொழும்பு, களனி திஸ்ஸ மின் உற்பத்தி...

கடந்த 2019 ஜூலை மாதத்தில் பழுத்தடைந்த இயந்திரங்களை திருத்த, கேள்வி கோரல் மூலம் விளம்பரப்படுத்தப்பட்டு மின் சக்தி அமைச்சின் அங்கீகாரத்துடன் ஓ.ஈ.எம் எனும் தேசிய நிறுவனத்துக்கே இயந்திரத்தை திருப்பி வெளிநாட்டுக்கு அனுப்பி திருத்துவதற்கான பொறுப்பை ஒப்படைத்தோம்.

அதற்கமைவாக கப்பல் மூலம் இயந்திரங்கள் துபாய்க்கும் இந்தியாவுக்கும் அனுப்பிவைக்கப்பட்டது. கடந்த கால கொரோனா காரணமாக இந்த இயந்திரங்கள் கடந்த டிசம்பர் மாதம் மீள கொண்டுவரப்பட்டு இணைக்கும்போது மீண்டும் அவை பழுதடைந்துவிட்டன. இதனால் இலங்கை மின்சார சபைக்கு பாரியதொரு நட்டம் ஏற்பட்டிருப்பது உண்மை.

இதற்கு காரணம் 2019, காலப் பகுதியில் இலங்கை மட்டுமல்ல ஏனைய நாடுகளிலும் கொவிட் 19 பிரச்சினைக்கும் காலதாமதம் இருந்தமையும் குறிப்பிடத்தக்கது. தற்பொழுது கூடிய மழை நீர் கிடைப்பதனால் மின் வெட்டு ஏற்படுவதற்கு சாத்தியமில்லை. எனவும் அவா் தெரிவித்தார்.

இதனால் குறிப்பிட்ட இந்திய நிறுவனத்தால் தவறுதலாக திருத்தியமைக்கப்பட்டதாலே இயந்திரங்கள் மீள பழுதடைந்தன. கடந்த கால கொவிட் 19, முடக்கம் போன்ற பிரச்சினையினாலேயே இவ்வியந்திரங்களை இந்தியாவிலிருந்து கொண்டு வருவதில் தாமதம் ஏற்பட்டது. இந்த இயந்திரங்கள் மீள பழுதடைந்தமையினால் இலங்கை மின்சார சபைக்கு 650 மில்லியன் ரூபா நட்டமேற்பட்டது.

இதனை மீளமைப்பதற்காக பாரமளிக்கப்பட்ட கம்பனிகளுக்கு இதுவரை மின்சார சபை பணம் எதுவும் செலுத்தவில்லை. இது பற்றிய ஒரு விசாரனைக் குழு அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளது. அதில் மின்சாரத்துறை நிபுணத்துவம் பெற்ற கலாநிதி லீலானந்த சமரநாயக்க தலைமையில் விசாணைக்குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளதுடன் குறிப்பிடப்பட்ட நிறுவனங்களையும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும் விசாரித்து வருகின்றது.

இவ் விடயத்தை வைத்து இலங்கை மின்சார சபை முகாமைத்துவம் திருட்டுத்தனமாக பணம் சம்பாதித்தாக சில ஊடகங்கள் அரசியல் ரீதியாக பிரச்சாரம் செய்கின்றன. அதில் எவ்வித உண்மைத் தன்மையும் இல்லை. இலங்கை மின்சார சபையின் பொதுமுகாமையாளர் குமுதினி ஹேரத், உப தலைவர் நளிந்த இளங்கோ ஹேரத் ஆகியோர் ஜனாதிபதி கோட்டாபாய ராஜபக்ஷவின் ஆலோசனைக்கேட்ப மின்சாரத்தை நாட்டில் சகல மக்களுக்கும் குறைந்த விலையில் வழங்குவதற்கே பல்வேறு திட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

டீசல் ஊடாக மின்சாரத்தை உற்பத்தி செய்யும் இயந்திரத்திங்களை இயக்குவதாலேயே இலங்கையில் எரிபொருளுக்காக நாளாந்தம் 30 கோடி ரூபாவை மின்சார சபை இழந்து வருகின்றது. இதனை எரிவாயு ஊடாக இயக்கும் அல்லது எல்.எம். ஜி மின்சாரத்தை இலங்கை உற்பத்தி செய்தால் மின்சார சபையின் செலவினம் அரைவாசியாகக் குறைந்து விடும்.

அதற்காக ஜனாதிபதி அத்திட்டங்களை ஆரம்பிப்பதற்காகவே அமைச்சுக்கு அனுமதி தந்துள்ளார். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, ஆட்சிக் காலத்தில் நுரைச்சோலையில் அனல் மின்சாரத்தை ஏற்படுத்தியதாலேயே மின்சாரம் சாதாரண விலைக்கும் பொதுமக்களுக்கு வழங்கமுடிந்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

## பொருளாதாரத் தடை...

கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சர் தொடர்ந்தும் பதிலளிக்கையில்,

இதனால் பொருளாதார பாதிப்பு ஏற்படாது. மனித உரிமைகள் பேரவையில் மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கையினால் தனிப்பட்ட ரீதியில் பேரவையினால் சில நாடுகளுக்கு இதனை வலியுறுத்த முடியும்.

ஆனால் இவ்வாறான தடை விதிக்கப்பட வேண்டுமாயின், ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு சபையிலேயே இதுதொடர்பில் தீர்மானங்கள் மேற்கொள்ள வேண்டும். பாதுகாப்புச் சபையில் வீடோ அதிகாரத்தை கொண்ட பல நாடுகள் உண்டு. அவை எமக்கு ஆதரவு வழங்கும் என்று அமைச்சர் கூறினார்.

இலங்கைக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் இன்னும் உரிய வகையில் நிரூபிக்கப்படவில்லை. யுத்தம் நடைபெற்ற 2009 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கை தொடர்பாக இலங்கை பிரிட்டன் தூதரகத்தின் பாதுகாப்பு பிரிவு அதன் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சுக்கு அனுப்பி வைத்த தகவல்கள் முரண்பாட்டை கொண்டதாக பிரபு நேஸ்பி தெளிவுபடுத்தியுள்ளார்.6 மாத கால தகவல்களை இவர் ஆய்வு செய்து அதில் முரண்பாடு இருப்பதை வெளிப்படுத்தியிருந்தார். அமெரிக்க பிரதிநிதி ஒருவரும் இந்த அறிக்கை பக்கசார்பானது என்று அப்பொழுது குறிப்பிட்டிருந்தார்.

இதேபோன்று அமெரிக்க தூதரகத்தின் பாதுகாப்பு பிரிவின் அதிகாரி கேனல் ஸ்மீத்தும் இந்த முரண்பாடுகளை வெளிப்படுத்தியிருந்தார். இலங்கைக்கு எதிராக அக்கால பகுதியில் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட பிரேரணைக்கு அனுசரணை வழங்கிய அமெரிக்காவும் அதிலிருந்து விலகிக் கொண்டது.

இந்நிலையில் இலங்கைக்கு எதிரான விடயங்களை ஆராய்ந்து சரியானவற்றை இலங்கை முன்வைப்பதற்கு தற்பொழுது நடவடிக்கை மேற்கொண்டுள்ளது என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## உடலுக்கு பாதகம் விளைவிக்கும்...

முஸம்மில் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

புற்றுநோயை ஏற்பத்தும் எப்போலடெக்ஸின் மூலக்கூறுகள் அடங்கிய இறக்குமதி செய்யப்பட்ட தேங்காய் எண்ணெய் சந்தைக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதாக குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

இதனை சுகாதார அமைச்சின் உணவு பாதுகாப்பு பிரிவும் தெரிவித்துள்ளதுடன், இந்த எண்ணெய்யை மீள் ஏற்றுமதி செய்யுமாறும் கோரியுள்ளது. ஆகவே, இந்த விடயம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதா என முஸம்மில் எம்.பி. எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

அமைச்சர் பந்துல குணவர்தன மேலும் தெரிவித்தாவது,

இந்த விடயம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. உடலுக்கு பாதகமான தேங்காய் எண்ணெய் சந்தையில் விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர் இதுவரை எவ்வித முறைப்பாடுகளையும் அளிக்கவில்லை.

என்றாலும், உடனடியாக இந்த விவகாரம் தொடர்பிலான விசாரணைகளை ஆரம்பிக்குமாறு நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைவருக்கு பணிப்புரை விடுத்துள்ளதுடன், இவ்வாறு பாதகமான தேங்காய் எண்ணெய் சந்தையில் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதாக ஊடகச்சந்திப்பை நடத்திய தரப்பினரிடம் விசாரணைகளை மேற்கொண்டு அவ்வாறு எண்ணெய் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள இடங்கள் தொடர்பில் முழுமையாக ஆராய்ந்து விசாரணை நடத்துமாறு வேண்டுகோள் விடுத்துள்ளேன்.

நாட்டுக்குள் இவ்வாறான எண்ணெய்யை கொண்டுவர அனுமதிகக வேண்டாமென சுகாதார அமைச்சு சுங்கத் திணைக்களத்துக்கு அறிவித்துள்ளது.

இறக்குமதி சுங்கத் திணைக்களத்தின் ஊடாகவே மேற்கொள்ளப்பட்டுள்ளது. நிதி அமைச்சர் இது தொடர்பிலான விசாரணைகளை முன்னெடுப்பார்.

இந்த பாதகமான எண்ணெய் சந்தையில் இருக்கும் இடங்களை எமக்கு அறிவித்தால் உரிய ஆய்வுகளை நடத்துவோம். நுகர்வோரும் இதுதொடர்பில் அறிவிக்கலாம்.

நாட்டில் எண்ணெய்க்கான கேள்வி அதிகமாக இருப்பதால் எமது நாட்டில் சோயா உற்பத்தியை அதிகரித்து கேள்வியை பூர்த்தி செய்ய நடவடிக்கைகளை எடுத்துள்ளோம் என்றார்.

## தாய் நாட்டுக்கு எதிராக செயற்பட...

நடைபெற்று முடிந்துள்ள விடயங்கள் தொடர்பில் (இன்று) வியாழக்கிழமை பாராளுமன்றத்தில் விசேட அறிவிப்பொன்றை விடுக்கவுள்ளதாகவும் அவர் கூறினார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை எதிர்க்கட்சி பிரதம கொரடாவான லக்ஷ்மன் கிரியெல்ல உரையாற்றிய போது, ஜெனீவாவில் எமது நாடு தோல்வியை சந்தித்துள்ளது. நல்லாட்சி ஆட்சிக் காலத்தில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் தோல்வி ஒன்றை இலங்கை சந்திக்கவில்லை. இது தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் அறிவிப்பேதேனும் விடுக்கவுள்ளாரா? என எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

கடந்த காலத்தில் இணை அனுசரணைக்கு கையொப்பமிட்டு வெளிநாட்டு சக்திகளிடம் எமது நாடு கட்டுப்பட்டிருந்தது, இதிலிருந்து வெளியேற மக்கள் ஆணையொன்று பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள போதிலும் அரசியல் அமைப்பை மீறி நடவடிக்கை எடுக்க நேர்ந்துள்ளதாக தற்போதைய எதிர்க்கட்சியின் ஆட்சியில் இருந்த வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பனவே தெரிவித்திருந்தார். தற்போது ஜெனீவா பிரேரணையை இலங்கை நிராகரித்தாலும் அரசியலமைப்பிற்கமைய செயற்படும் விதமாக உள்நாட்டு பொறிமுறை ஒன்றை நாம் உருவாக்கியுள்ளோம்.

எதிர்கட்சியினர் குழப்பமடைய வேண்டியதில்லை. தாய் நாட்டுக்கு எதிராக அவர்கள் செயற்பட வேண்டாம். ஜெனீவாவில் இலங்கை தொடர்பில் நடைபெற்று முடிந்துள்ள விடயங்கள் தொடர்பில் நாளை (இன்று) வியாழக்கிழமை பாராளுமன்றத்தில் அறிவிப்பொன்றை விடுப்பேன் என்றார்.

## புர்கா தடை விடயத்தில் இதுவரை...

கொண்டு அவதானிக்க வேண்டுமென அமைச்சரவை பேச்சாளர் கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில், புர்கா தடை விவகாரத்தை மத ரீதியான விடயமாக மாத்திரம் பார்க்கக் கூடாது. தேசிய பாதுகாப்பை அடிப்படையாகக் கொண்டு அவதானிக்க வேண்டும். ஐந்து நட்சத்திர ஜனநாயக நாடுகள் கூட புர்காவுக்கு தடை விதித்துள்ளன. அவ்வாறான நாடுகள் தேசிய பாதுகாப்பை அடிப்படையாகக் கொண்டே இந்த தீர்மானத்தை எடுத்துள்ளன. உலகில் இதுவரையில் 16 நாடுகள் புர்காவுக்கு தடை விதித்துள்ளன.

அவற்றில் 03 முஸ்லிம் நாடுகளும் உள்ளடங்குகின்றன. எனவே, இது இலங்கையில் மாத்திரம் வரையறுக்கப்பட்டதொன்றல்ல. எவ்வாறிருப்பினும் இவ்விடயம் தொடர்பில் அரசாங்கம் தொடர்ந்தும் கலந்துரையாடல்களை முன்னெடுத்து வருகிறது. ஆரம்ப காலங்களில் முகத்தை முழுமையாக மறைக்கும் வகையிலான ஆடை கலாசாரம் காணப்பட்டது. எனினும் தற்போது கலாசார மாற்றத்துடன் அவற்றிலும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. எனவே இது தொடர்பில் சுமுகமான நடவடிக்கைகள் நிதானமாக முன்னெடுக்கப்படும் என்றார்.

## இரா.சம்பந்தன் வரவேற்கிறார்...

பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின், 46 ஆவது கூட்டத்தொடரில், இலங்கை தொடர்பாக முன்வைக்கப்பட்ட பிரேரணை, 11 மேலதிக வாக்குகளால் நேற்று நிறைவேற்றப்பட்டது. 47 உறுப்பு நாடுகளைக்கொண்ட, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில், பிரேரணைக்கு ஆதரவாக 22 நாடுகளும், எதிராக 11 நாடுகளும் வாக்களித்திருந்தன. இந்தியா உள்ளிட்ட 14 நாடுகள் வாக்கெடுப்பிலிருந்து விலகியிருந்தன. இலங்கை தொடர்பாக ஜெனீவாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு, பெரும்பான்மையை பெற்றுக்கொள்ள முடியாமல் போனதாக, வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்திருந்தார்.

47 உறுப்பு நாடுகளில், 25 நாடுகளது அனுமதி இந்த பிரேரணைக்கு கிடைக்கவில்லையெனவும், இதன் ஊடாக வாக்கெடுப்பிலிருந்து விலகியிருந்த நாடுகளும் இலங்கைக்கு ஆதரவு வழங்கியுள்ளமை புலப்படுவதாகவும் அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், ஜெனீவாவில் நிறைவேற்றப்பட்ட இலங்கை தொடர்பான தீர்மானம் குறித்து, இரா.சம்பந்தன் இவ்வாறு தெரிவித்தார். இதேநேரம், இந்தியா, தமிழ் மக்கள் மற்றும் இலங்கை தொடர்பாக ஆழமாக சிந்தித்து ஜெனீவா மனித உரிமைகள் மாநாட்டில் செயற்பட்டுள்ளதாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் குறிப்பிட்டார்.

## யாழ். தீவகங்களுக்கு அம்பியூலன்ஸ் படகுகள்...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் எம்.பி. சுகாதார அமைச்சரிடம் வேண்டுகோள் விடுத்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின் போது சுகாதார அமைச்சரிடம் அவர் இவ்வாறு வேண்டுகோள் விடுத்தார்.

சிறிதரன் எம்.பி. தமது கேள்வியில், அனலைத்தீவு, நெடுந்தீவு, நயினாதீவு, எழுவைத் தீவு பகுதிகளுக்கு அரச அம்புலன்ஸ் படகுச் சேவை இல்லாதுள்ளது. யாழ். மாவட்டத்தில் தரைத்தொடர்பு இல்லாத தீவுகள் அனைத்திலும் இதே நிலைதான் காணப்படுகிறது. அதேபோன்று வேலனை, ஊர்காவற்துறை வைத்தியசாலைகளும் பாரிய குறைப்பாடுகளுடன்தான் இயங்குகின்றன.

மிகவும் குறைப்பாடுகளுடன் இயங்கும் நெடுந்தீவு வைத்தியசாலையிலிருந்து யாழ்.வைத்தியசாலைக்கு நோயாளிகளை கொண்டு வர அரச படகுச்சேவையொன்று உடனடியாக ஆரம்பிக்கப்பட வேண்டும். நெடுந்தீவிலிருந்தான 13 கடல் மைல்கள் பயணம் மிகவும் ஆபத்தான பயணமாகும். அரச ஊழியர்கள் முதல் அனைத்து தொழிலாளர்களும் உயிர் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் இந்தப் பயணத்தை மேற்கொள்கின்றனர். அதேபோன்று நெடுந்தீவு வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்தியர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும். தற்காலிகமாக வந்துச் செல்லும் வைத்தியர்கள் இருவர் மாத்திரமே உள்ளனர் என்றார். இந்த விடயம் தொடர்பில் மிகவும் அக்கறையுடன் செயற்படுவதாக சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி சிறிதரன் எம்.பியிடம் உறுதியளித்தார்.

## நாடு முழுவதும் பாடசாலைகள்...

ஆரம்பிக்க முடியுமென்ற அனுமதியை சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வழங்கியுள்ளதாலேயே அனைத்து வகுப்புகளுக்கான கல்வி நடவடிக்கைகளையும் ஆரம்பிப்பதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

மேல் மாகாணத்தில் அரசாங்க பாடசாலைகளில் தரம் 5, 11 மற்றும் 13ஆம் வகுப்புகளுக்கான கல்வி நடவடிக்கைகள் கடந்த 15ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டன. ஏனைய வகுப்புகளுக்கான கல்வி நடவடிக்கைகள் ஏப்ரல் 19 ஆம் திகதி ஆரம்பிக்கப்படுமென தெரிவிக்கப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும் மேல் மாகாணத்திலுள்ள அனைத்து வகுப்புகளுக்கான கல்வி நடவடிக்கைகளும் எதிர்வரும் 29ஆம் திகதி முதல் ஆரம்பிப்பதற்கு உரிய சுகாதார அமைச்சின் பரிந்துரைகள் கல்வியமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

இந்த பரிந்துரைகளுக்கமைய இதுவரை திறக்கப்படாமலிருந்த ஆரம்பப் பாடசாலைகளைத் திறப்பதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அது தொடர்பில் நேற்று தெரிவித்த சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன,

மேல் மாகாணத்தின் அனைத்து வகுப்புகளுக்கும் பாடசாலைகளில் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பான இறுதி தீர்மானத்தை கல்வி அமைச்சே மேற்கொள்ள வேண்டுமென்று தெரிவித்துள்ளார்.(ஸ)

## கொட்டுகொட தம்மாவாச...

நிலையங்கள் மற்றும் இறைச்சி விற்பனை நிலையங்களை மூடுவதற்கும் மதுபானசாலைகள் மற்றும் மதுபான விற்பனை நிலையங்களை மூடுவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## அரசியல் கைதி சுதாகரனின்...

கூறியுள்ளார். இது குறித்து சகோதரி கூறுகையில், போலி ஆவணங்களை பயன்படுத்தி, போலி கையெழுத்துக்களுடன் காணி உரிமம் மாற்றப்பட்டுள்ளது. இதனை தட்டிக்கேட்ட தம் மீது தாக்குதல் நடத்த முயற்சித்ததாகவும் குற்றம்சாட்டியுள்ளார். ஆனந்த சுதாகரனை விடுதலை செய்ய முடியாதவர்கள் அவருடைய காணிகளையாவது பாதுகாத்து கொடுங்களென தாயாரும், சகோதரியும் கோரிக்கை விடுத்திருக்கின்றனர்.

## கொழும்பு – கதிர்காமம் – கொழும்பு...

தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி டபிள்யூ தயாரட்ண உள்ளிட்ட பணிப்பாளர் சபையினர் பார்வையிட்டனர்.

புதிதாக கொள்முதல் செய்யப்பட்ட இரண்டு பஸ் வண்டிகளையும் பரிசீலித்த பின்னர் நிறுவனத்துக்கு கொண்டுவந்து ஏனைய பணிப்பாளர்களுடன் பார்வையிட்டனர். இதன்போது செயற்பாட்டுப் பணிப்பாளர் கணிஷ்க விதாரண, பிரதி பொது முகாமையாளர் சந்தன பண்டார, போக்குவரத்து முகாமையாளர் திஸ்ஸபண்டார உள்ளிட்ட அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

## பிறரின் வங்கிக் கணக்கிற்குள்...

ஒருவர் வவுனியா பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளார்.

பிற நபர்களின் வங்கி கணக்குகளுக்குள் ஊடுருவி பண மோசடியில் ஈடுபட்டுள்ளதாக தெரிவித்தே குற்றப் புலனாய்வுப் பிரிவினர் சந்தேக நபரான இளைஞரை கைது செய்துள்ளனர்.

வவுனியா – வேப்பங்குளம் பகுதியைச் சேர்ந்த 29 வயது இளைஞர் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார். அவரின் தனியார் வங்கி கணக்கு இலக்கம் ஒன்றுக்கு அமெரிக்காவிலிருந்து ஒரு கோடியே இரண்டு இலட்சத்து 58 ஆயிரத்து 399 ரூபா பணம் வைப்பிலிடப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. இது தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்த குற்றப் புலனாய்வு பிரிவினர், சந்தேக நபரான இளைஞர் ஏனைய நபர்களின் வங்கி கணக்குகளுக்கு அத்துமீறி பிரவேசித்தே இந்த பணத்தொகையை பெற்றுக் கொண்டுள்ளமை தெரிய வந்துள்ளது.

இந்நிலையில், கடந்த காலங்களில் இதே போன்ற மோசடி செயற்பாடுகளில் ஈடுபட்டதாக 36 பேர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர் தொடர்பான மேலதிக விசாரணைகளை குற்றப் புலனாய்வு பிரிவினர் முன்னெடுத்து வருகின்றனர்.

# எமது நாட்டின் உள்ளக விவகாரங்களில் இந்தியாவின் ஆலோசனை அவசியமற்றது

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கொவிட்19 வைரஸ் தாக்கத்தினால் பொருளாதார மட்டத்தில் பல சவால்கள் தோற்றம் பெற்றுள்ளன. மக்களின் வாழ்க்கை செலவுகளும் அதிகரித்துள்ளன.

இவ்வாறான நிலையில் மாகாண சபை தேர்தலை நடத்துவது பொருத்தமற்றதாகும். மேலும் காணி, பொலிஸ் அதிகாரங்களை பகிர்ந்தளிக்க ஒருபோதும் இடமளிக்க முடியாது என இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

மாகாண சபை முறைமை இனப் பிரச்சினைக்கு தீர்வை பெற்றுத் தரும் வகையில் அறிமுகப்படுத்தப்பட்டாலும் பிற்பட்ட காலத்தில் அவை பல முரண்பாடுகளை தோற்றுவித்துள்ளன.

நல்லாட்சி அரசாங்கம் மாகாண சபை தேர்தலை திட்டமிட்ட வகையில் பிற்போட்டது. மாகாண சபைகளின் நிர்வாகம் ஜனாதிபதியின் பிரதிநிதிகள் ஊடாக முன்னெடுக்கப் படுகிறது. கடந்த காலங்களை காட்டிலும் தற்போது மாகாண சபைகளின் நிர்வாகம் ஆளுநர்களினால் சிறந்த முறையில் முன்னெடுக்கப்படுகிறது.



மாகாண சபை தேர்தல் அவசியமா இல்லையா என்பதில் மக்களின் அபிப்ராயத்தை பெற்றுக் கொள்வது அவசியாகும் என்பதை தெரிவித்துள்ளோம். மாகாண சபை முறைமை வீண் செலவுகளை ஏற்படுத்தும் ஒரு முறைமையாக காணப்படுகிறது என்பதே பெரும்பாலான மக்களின் அபிப்ராயமாக கணப்படுகிறது.

மாகாண சபை விவகாரத்தில் இந்தியாவின் ஆலோசனைகளை பெற்றுக் கொள்வது அவசியம் என ஆளும் தரப்பின் உறுப்பினர்கள் குறிப்பிடுவது முற்றிலும் தவறானதொரு கருத்தாகும்.

நாட்டின் உள்ளக விவகாரங்கள் தொடர்பில் இந்தியாவின் ஆலோசனைகளை பெறுவது அவசியமற்றது. நாட்டு மக்களின் அபிப்பிராயத்துக்கு அமையவே அரச நிர்வாகத்தை முன்னெடுக்க முடியும் என்றார்.

# வடக்கு,கிழக்கில் இடம்பெறும் சட்டவிரோத செயற்பாடுகளை தடுத்து நிறுத்த வேண்டும்

## பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன்

**வவுனியா விசேட நிருபர்**



வடக்கு கிழக்கு பகுதிகளில் முறையான அனுமதி பெறப்படாது நடைபெறும் சட்டவிரோத செயற்பாடுகளை இனிவரும் காலங்களில் பார்வையிட்டு தடுத்து நிறுத்த வேண்டும் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். மேலும் கூறுகையில்,

வவுனியாவில் பல இடங்களில் நடைபெறும் சூழலை சேதப்படும் செயற்பாடுகளை அவதானித்தோம். ஒரு பகுதியில் காடழிப்பு இடம்பெற்று 20 அடிக்கு மேல் கிடங்கு வெட்டி மண் அகழ்வு இடம் பெறுகிறது. நாங்கள் சென்ற போது அங்கிருந்து வாகனங்கள் சென்று விட்டன. இதேபோல் இலங்கையில் அனைத்து பிரதேசங்களிலும் பாரிய சூழலுக்கு எதிரான விடயங்கள் நடைபெறுகின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கூட சட்டவிரோத மண் அகழ்வு இடம்பெறுகிறது. அது தொடர்பில் பிரதேச அபிவிருதிக் கூட்டத்தில் நிறுத்துமாறு கோரிய போதும் இன்று வரை நிறுத்தப்படவில்லை. வடக்கு கிழக்கு பகுதிகளில் முறையான அனுமதி பெறப்படாது நடைபெறும் சட்டவிரோத செயற்பாடுகளை இனிவரும் காலங்களில் பார்வையிட்டு தடுத்து நிறுத்த வேண்டும் என்றார்.

# களுத்துறை சிறைக்குள் வீசப்பட்ட பொதி மீட்பு

களுத்துறை சிறைச்சாலைக்குள் வீசப்பட்ட பொதியினை சிறைச்சாலை அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர். இச் சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது.

களுத்துறை சிறைச்சாலையின் மதிற்சுவருக்கு வெளியே இருந்து நபரொருவர் பொதியொன்றை வீசிவிட்டு ஓடிச்செல்வதை சோதனைச் சாவடியில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த அதிகாரிகள் கவனித்துள்ளனர்.


அதனையடுத்து சிறைச்சாலையின் சி பிரிவின் உட்புறத்தை பரிசோதித்தபோது அங்கே புற்களால் மறைக்கப்பட்ட பொதியொன்றை சிறைச்சாலை அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளனர்.

அப்பொதியினை பரிசோதனையிட்டபோது அதனுள் இருந்து கையடக்க தொலைபேசியொன்றும், கையடக்க தொலைபேசிக்கான மின்கலம் ஒன்றும் 8 புகையிலை துண்டுகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைப்பற்றப்பட்ட மேற்படி பொருட்கள் மேலதிக விசாரணைகளுக்காக களுத்துறை வடக்கு காவல் துறையினரிடம் கையளிக்கப்படவுள்ளன.

# அடையாள அட்டை பெற வருவோர் முன் அனுமதி பெற வேண்டும்

தேசிய அடையாள அட்டையை பெற்றுக் கொள்ள ஆட்பதிவு திணைக்களத்திற்கு வருகைத் தருபவர்கள் முன் அனுமதி பெறுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளதாக ஆட்பதிவு திணைக்களம் தெரிவித்துள்ளது.இவ்வாறு முன் அனுமதி பெறுவதற்கு இரு தொலைபேசி இலக்கங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. 011 52 26 100 அல்லது 011 52 26 126 ஆகிய இலக்கங்களை தொடர்பு கொண்டு முன் அனுமதி பெற வேண்டும் என ஆட்பதிவு திணைக்களம் தெரிவித்துள்ளது.




பசறை பதிமூன்றாம் கட்டைப்பகுதியில் அண்மையில் ஏற்பட்ட கோர விபத்தினையடுத்து அவ்விடத்தில் தற்போது வாகனங்கள் வேகமாக செல்வதைக் கட்டுபடுத்துவதற்கு வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் வீதியில் வேக கட்டுப்பாட்டு தடைவிதிக்கப்பட்டுள்ளது. (படங்கள்: லுணுகல நிருபர்)


## இலங்கை வங்கி

**கொள்வனவு செய்ய வெற்றுக்காணி / கட்டிடத்துடன் காணி தேவைப்படுகின்றது**

பின்வரும் இலங்கை வங்கி கிளைகளுக்காக முக்கிய வர்த்தகப் பிரதேசங்களுள் காணிகள் / கட்டிடத்துடன் காணிகள் தேவைப்படுகின்றன :

| இடம் | விஸ்தீரணம் (பேர்ச்சஸ்) | ஆகக் குறைந்தது முன்னோக்கிய பாதை (அடி) |
|---|---|---|
| மருதானை | 43 | 65 |
| நாரஹென்பிட்ட | 43 | 65 |
| பிலியந்தல | 51 | 75 |
| மீரிகம | 51 | 75 |

காணி உரிமையாளர்கள் மாத்திரம் காணியின் விவரணம், மூல உறுதியின் நகல், அங்கீகரித்த அளவை வரைபடம் உள்ளூர் அதிகாரப் பத்திரங்கள் (வீதி ரேகை சான்றிதழ், கையகப்படுத்தாமை சான்றிதழ், உரிமை சான்றிதழ்) மற்றும் எதிர்பார்க்கப்படும் விலை ஆகியவற்றுடன் ஏலவிலை கூறல்களை தொலைபேசி இலக்கத்துடன் சமர்ப்பிக்க வேண்டும்

ஏலவிலை கூற ஆர்வமுடையவர்கள் மேலே கேட்கப்பட்டுள்ள ஆவணங்களைச் சமர்ப்பிப்பதுடன் எதிர்பார்க்கப்படும் மிகக் குறைந்த விலையையும் குறிப்பிட்டு முத்திரையிட்டு தபால் உறையில் இட்டு பதிவுத் தபால் மூலம் கீழ்க் கண்ட முகவரிக்கு 2021.04.08 திகதிக்கு முன் கிடைக்குமாறு அனுப்பி வைக்கவும்.

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

பிரதான முகாமையாளர்
சொத்துக்களும் சேகரிப்பும் பகுதி
14ம் தளம், இலங்கை வங்கி,
"இலங்கை வங்கிச் சதுக்கம்",
இல. 01, இலங்கை வங்கி மாவத்தை,
கொழும்பு 01.
தொலைபேசி இல. 011-2544310, 011-2434786
தொலைநகல் 011-2449629

## இலங்கை வங்கி

**ஊவா மாகாணத்தின் பின்வரும் கிளை இடமாற்றத்திற்காக குத்தகை அடிப்படையில் பொருத்தமான கட்டடமொன்று தேவைப்படுகின்றது.**

### ஹாலிஎல கிளை

**உத்தேசக் கட்டடம் பின்வரும் வசதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்**

- கட்டடம் சட்டபூர்வமாக நிர்மாணிக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன் 10 வருடங்களுக்கு மேல் பழைமை வாய்ந்ததாக இருத்தல் கூடாது.
- இடப்பரப்பானது ஆகக் குறைந்தது 2250 - 3250 சதுர அடி பரப்பளவைக் கொண்டதாகவிருத்தல் வேண்டும் என்பதுடன் மாடிக் கட்டடமானால் தரைத் தளத்தின் இடப்பரப்பளவானது 2250 சதுர அடி பரப்பளவைக் கொண்டதாகவிருத்தல் வேண்டும் என்பதுடன் எஞ்சிய பகுதி மேல் மாடியிலிருத்தல் வேண்டும்.
- பிரதான வீதிக்கு குறைந்தபட்சம் 30 அடி முகப்பாகவும் நகரத்தின் வர்த்தக எல்லைக்குளும் அமைந்திருத்தல் வேண்டும்.
- 100 சதுர அடி பரப்பளவைக் கொண்ட அறையொன்று மின்பிறப்பாக்கியினை வைப்பதற்கு கட்டடத்தின் பின்புறத்தில் வெளியேறக்கூடிய வழியுடன் அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.
- குறைந்தபட்சம் 03 வாகனங்களை நிறுத்தி வைக்கக்கூடிய இடவசதி இருத்தல் வேண்டும். வாகனங்கள் நிறுத்துவதற்குப் பொருத்தமான வகையில் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
- இலங்கை டெலிகொம் நிறுவனத்தின் தொலைபேசி இணைப்பை பெற்றுக்கொள்வதற்கான வசதிகள் இருத்தல் வேண்டும்.
- மூன்று முதன்நிலை மின்சார கட்டமைப்புடன் மின் முறைமையானது வங்கிக்கு பொருத்தமான வகையில் அமைக்கப்பட்டிருத்தல்.
- நீர் வழங்கலுடன் பொருத்தமான உயர்ந்த இடத்தில் நீர்த்தாங்கி ஒன்று இருத்தல் வேண்டும். (குறைந்தபட்சம் 1000 லீற்றர் கொள்ளளவுடையது)
- குறைந்தபட்சம் 02 மலசலகூடங்கள் இருத்தல் வேண்டும் என்பதுடன் அவைகள் பெண்கள் மற்றும் ஆண்களுக்கு வெவ்வேறாக பயன்படுத்தக் கூடியதாகவிருத்தல் வேண்டும்.
- கட்டடத்தின் தரைப்பரப்பு தரையோடு பதிக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன் சீலிங் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும்.
- பின்புற கதவு மற்றும் ஜன்னல்களுக்கு பாதுகாப்பான இரும்புக் கம்பிகள் இடப்பட்டிருக்க வேண்டும் இல்லையெனில் வங்கிக்குத் தேவையான வகையில் அமைத்துக் கொடுக்கப்பட வேண்டும்.
- கட்டடத்தின் உரிமையாளர் குறைந்தபட்சம் பதினைந்து வருட காலத்திற்கு இலங்கை வங்கியுடன் உடன்படிக்கையொன்றுக்கு வருவதற்கு இணங்குதல் வேண்டும்.
- தெரிவு செய்யப்பட்ட கட்டிடம் பரீட்சித்துப் பார்க்கப்பட்டதன் பின் வங்கியினால் பிரேரிக்கப்படும் மாற்றங்களைச் செய்து கொடுப்பதற்கு கட்டிடத்தின் உரிமையாளர் இணங்குதல் வேண்டும்.
- கட்டிடத்தின் உரிமையாளர் வங்கியுடன் உடன்படிக்கை செய்து கொள்வதற்கான சட்டபூர்வமான உரிமையினை உரிமையாளர் கொண்டிருக்க வேண்டும்.

இது தொடர்பில் ஆர்வமுடையோர் அங்கீகரிக்கப்பட்ட கட்டட வரைபடம், நில அளவை வரைபடம், உரிமை உறுதி, இணக்கச் சான்றிதழ் போன்ற ஆவணங்களின் பிரதிகள் மற்றும் எதிர்பார்க்கும் மாதாந்த வாடகையைக் குறிப்பிட்டு 14 நாட்களுக்குள் பின்வரும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்பப் படிவத்தை அனுப்ப வேண்டிய முகவரி:

**உதவிப் பொது முகாமையாளர் (ஊவா)**
**இலங்கை வங்கி**
**ஊவா மாகாணப் அலுவலகம்**
**இல.: 17, ஹில் டிரைவ்,**
**கெப்பெட்டிபொல வீதி, பதுளை.**

இலங்கைவங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

## 23.03.2021 - தேசிய லொத்தர் சபை உருவாக்கிய மொத்த வெற்றியாளர்கள் எண்ணிக்கை 752,261

## பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூ. 30,718,590.00

ரூ. 2,000,000.00 பரிசு 01 ரூ. 1,000,000.00 பரிசு 01 ரூ. 100,000.00 பரிசுகள் 37

www.nlb.lk NLB NATIONAL LOTTERIES

### உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு திகதி 23/03/2021 1585 சீட்டிழுப்பு இலக்கம்

சுப்பர் இலக்கம் 06 வெற்றி இலக்கங்கள் 05 30 40 46

| | | | |
|---|---|---|---|
| 1 பரிசு | 4 இலக்கங்களும் பொருந்துமாயின் | ரூ. 500,000.00 | - |
| 2 பரிசு | சுப்பர் இலக்கத்துடன் 3 இலக்கங்கள் பொருந்துமாயின் | ரூ. 20,000.00 | 09 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் பொருந்துமாயின் | ரூ. 1,000.00 | 125 |
| 4 பரிசு | சுப்பர் இலக்கத்துடன் 2 இலக்கங்கள் பொருந்துமாயின் | ரூ. 200.00 | 391 |
| 5 பரிசு | 2 இலக்கங்கள் பொருந்துமாயின் | ரூ. 100.00 | 5,416 |
| 6 பரிசு | சுப்பர் இலக்கத்துடன் 1 இலக்கம் பொருந்துமாயின் | ரூ. 60.00 | 4,619 |
| 7 பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | ரூ. 20.00 | 65,902 |
| 8 பரிசு | சுப்பர் இலக்கம் மாத்திரம் பொருந்துமாயின் | ரூ. 20.00 | 15,916 |

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்த தொகை
ரூ. 2,838,300.00

வெற்றி பெறும் சீட்டுகள் சீட்டிழுக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சத்திக்கு கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரி சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டது. பரிசை பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 3,141,790.00

தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD இல. 32, தேசமான்ய N. W. J. முதலிகே மாவத்தை, கொழும்பு 01. Phone : 0114 607 000, 0112 324 324 Fax : 0114 663 416 Web : www.nlb.lk

### Mega POWER மெகா பவர்

சீட்டிழுப்பு இலக்கம்: 797
உத்தியோகபூர்வ முடிவுகள்
திகதி: 23.03.2021

ஆங்கில எழுத்து S சுப்பர் இலக்கம் 20 வெற்றி இலக்கங்கள் 37 49 53 63

| | பரிசுக் கட்டமைப்பு | பரிசுத் தொகை ரூ. | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000,000.00 | - |
| 2 ஆம் பரிசு | 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 100,000.00 | 05 |
| 3 ஆம் பரிசு | இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000.00 | 92 |
| 4 ஆம் பரிசு | 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 500.00 | 218 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 100.00 | 5,550 |
| 6 ஆம் பரிசு | 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 40.00 | 3,538 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | 20.00 | 90,324 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 20.00 | 16,395 |

அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 124,365,594.00

அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 20,938,204.80 அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை ரூ. 3,531,900.00

தேசிய லொத்தர் சபை www.nlb.lk

### கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 2730 சீட்டிழுப்பு திகதி 23 / 03 / 2021

ஆங்கில எழுத்து L வெற்றி இலக்கங்கள் 18 21 33 80

| | பரிசு கட்டமைப்பு | பரிசுத்தொகை | வெற்றியாளரர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000,000.00 | 01 |
| 2 பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100,000.00 | 09 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 2,000.00 | 178 |
| 4 பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000.00 | 423 |
| 5 பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100.00 | 10,088 |
| 6 பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் சரியாயின் | ரூ. 40.00 | 6,545 |
| 7 பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூ. 20.00 | 166,708 |
| 8 பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூ. 20.00 | 30,423 |

இந்த சீட்டிழுப்பில் உருவாகிய வெற்றயாளர்களின் எண்ணிக்கை 214,375

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்தத்தொகை ரூ. 7,892,220.00

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 78,167,870.80

வெற்றி பெறும் சீட்டுகள் சீட்டிழுக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சத்திக்கு கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரி சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டது. பரிசை பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.



தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD இல 32 தேசமான்ய N. W. J. முதலிகே மாவத்தை கொழும்பு 01 தொலைபேசி : 0114 607 000, 0112 324 324 Fax: 0114 663 416 Web: www.nlb.lk

### சீட்டிழுப்பு இலக்கம் 4435 உத்தியோகபூர்வ முடிவுகள் - மஹஜன சம்பத

திகதி: 23-03-2021

வெற்றி எழுத்து H வெற்றி இலக்கங்கள் 8 0 1 4 3 8

பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

| | | | வெற்றிபெற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1ஆம் பரிசு | 8 0 1 4 3 8 | ரூபா. 2,000,000/- | 01 |
| 2ஆம் பரிசு | 0 1 4 3 8 | ரூபா. 100,000/- | 14 |
| 3ஆம் பரிசு | 1 4 3 8 | ரூபா. 10,000/- | 140 |
| 4 ஆம் பரிசு | 4 3 8 | ரூபா. 1,000/- | 1,337 |
| 5ஆம் பரிசு | 3 8 | ரூபா. 100/- | 13,161 |
| 6ஆம் பரிசு | 8 | ரூபா. 20/- | 130,454 |

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

| | | | வெற்றிபெற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 7ஆம் பரிசு | 8 0 1 4 3 | ரூபா. 10,000/- | 12 |
| 8 ஆம் பரிசு | 8 0 1 4 | ரூபா. 1,000/- | 126 |
| 9ஆம் பரிசு | 8 0 1 | ரூபா. 100/- | 1,282 |
| 10ஆம் பரிசு | 8 0 | ரூபா. 50/- | 13,039 |
| 11ஆம் பரிசு | H | ரூபா. 20/- | 52,242 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை – ரூ. 12,133,170.00

ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும். பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 20,166,148.00

NLB வாழ்வின் கனவிற்கு அதிர்ஷ்டத்தின் ஆசீர்வாதம்

தேசிய லொத்தர் சபை 32, தேஷமான்ய N. W. J. முதலிகே மாவத்தை, கொழும்பு - 01. தொலைபேசி: 011-4607000, 011-2324324. Fax: 011-4669416. www.nlb.lk

### தன நிதானய உத்தியோகபூர்வ முடிவுகள்

திகதி - 23/03/2021
சீட்டிழுப்பு இலக்கம் - 472

Z ஆங்கில எழுத்து 04 39 71 78 வெற்றி இலக்கங்கள்

| | கட்டமைப்பு | பரிசுகள் | வெற்றியாளர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 1,000,000.00 | - |
| 2 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 100,000.00 | 09 |
| 3 ஆம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 3,000.00 | 96 |
| 4 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 1,000.00 | 217 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 100.00 | 5,348 |
| 6 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் சரியாயின் | ரூபா. 60.00 | 3,626 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூபா. 20.00 | 91,305 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூபா. 20.00 | 16,977 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூபா. 4,323,000.00
பரிசுகளை வென்ற வெற்றியாளர்களின் எண்ணிக்கை. 117,578

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 89,437,518.00

- ரூபா. 5 இலட்சம் அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசின் வரி சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது.
- பரிசுத்தொகையை பெற்றுக்கொள்ளும் போது தேசிய அடையாள அட்டை கட்டாயமானது.
- சீட்டிழுப்பு தினத்திலிருந்து 6 மாதகாலத்திற்கு மாத்திரமே வெற்றி லொத்தர் செல்லுபடியாகும்.

தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD

# இந்திய மீனவர்களின் அத்துமீறல்

# கடற்றொழில் அமைச்சரின் யாழ். அலுவலக முற்றுகை போராட்டம்

## நாளை நடத்த மீனவர் சங்கங்கள் அழைப்பு

*யாழ்ப்பாணம் குறூப் நிருபர்*

கடற்றொழில் அமைச்சரின் யாழ்.மாவட்ட அலுவலகத்தை முடக்கி முற்றுகைப் போராட்டத்திற்கு அழைப்பு கடற்றொழில் அமைச்சரின் யாழ்.மாவட்ட அலுவலகத்தை முடக்கி நாளை 26ஆம் திகதி முற்றுகைப் போராட்டத்திற்கு வடக்கு மாகாண மீனவர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

இலங்கையின் கடல் எல்லைக்குள் அத்துமீறி இந்திய மீனவர்கள் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து இப்போராட்டம் மேற்கொள்ளப் போவதாக (.24) ஊடகவியலாளர் சந்திப்பில் இதனை தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை, இந்திய மீனவர்களது பிரச்சினைகள் நீண்டகாலமாகப் பேசப்பட்டு வந்தாலும் வாய்மூலமான உறுதி மொழியும் காலத்தைக் கடத்தும் செயற்பாடுகளும் தான் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு எட்டப்பட வேண்டும். எங்களது வாழ்வாதாரங்கள் அல்லது வலிகள் வெளிக்கொண்டு வரப்பட வேண்டும் என்ற நோக்கத்தில் வடக்கின் நான்கு மாவட்டங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் மீனவ அமைப்புகளும் இணைந்து இன்று ஒரு கலந்துரையாடல் ஒன்றை நடத்தினோம். அதன் இறுதியில் முற்றுகைப் போராட்டத்தை நடத்த ஏற்பாடு செய்துள்ளோம்.எனவே அரசியல் பிரமுகர்கள், முச்சக்கர வண்டிகள் சங்கம், பனை தென்னைவள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கமென அனைவரும் இப் போராட்டத்திற்கு ஆதரவு வழங்க வேண்டுமென்றனர்.

இப் போராட்டத்தை யாழ் மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க சமாசங்களின் சம்மேளனம்,பூநகரி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், முல்லைத்தீவு மாவட்ட க.தொ.சங்.சமாசம், கிளிநொச்சி மாவட்ட க.தொ.சங்.சமாசம், மன்னார் மாவட்ட க.தொ.சங்.சமாசம் ஆகியோர் இணைந்து நடாத்தவுள்ளதாக அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

---

## வர்த்தக அமைச்சு

### கூட்டுறவு மொத்த விற்பனைத்தாபனம்

### பன்னேகமுவ அரிசி கட்டிடத் தொகுதியின் உமி அறையை புதுப்பித்தலுக்கான விலைமனுக்கோரல்

கூட்டுறவு மொத்த விற்பனைத் தாபனத்திற்கு சொந்தமான “பன்னேகமுவ அரிசி கட்டிடத் தொகுதியின்” நெல் குற்றும் பிரிவுடன் சம்பந்தப்பட்ட உமி சேர்கின்ற அறையை புதுப்பிப்பதற்காக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் இருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

அதனடிப்படையில் அவ் இடத்தைப் பரீட்சித்துப் பார்த்து சுற்றாடலுக்கு மற்றும் பொது மக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வண்ணம் தரத்துடனான நிர்மாண விடயங்களை மேற்கொள்ளல் வேண்டும். அதற்கு மேலதிகமாக கீழ்க்காணும் தகைமைகள் சம்பந்தமாகவும் கவனத்தில் கொள்ளப்படும்.

- உமி அறையை புதிதாக நிர்மாணித்தல் மற்றும் புதுப்பித்தல் பற்றிய அனுபவம்
- பொறியியல் விடயங்கள் பற்றி அரசில் பதிவு செய்திருத்தல்

மேற்படி தகைமைகள் கொண்ட நிறுவனங்களில் இருந்து மாத்திரம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. (மேற்படி தகைமைகளுடன் சம்பந்தப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகளையும் சமர்ப்பித்தல் வேண்டும்)

உங்கள் நிறுவனத்தினால் 2021.04.07 மு.ப.12.00 மணிக்கு அல்லது அதற்கு முன் விலைமனுக்கள் செல்லுபடியாகும் கால எல்லை வரை கடிதத் தலைப்பு மூலம் உறையொன்றில் இட்டு பொறியிட்டு சதொச தலைமையகத்தின் 07ஆம் மாடியில் கேள்விப் பெட்டி இல.04 இற்கு இடுவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு தயவுடன் அறிவிக்கிறேன்.

கேள்விகள் சமர்ப்பிக்கும் போது ரூ.15,000.00 மீளளிக்கப்படாத கேள்வி வைப்பொன்றை 2021.04.07ஆம் திகதி மு.ப.10.00 இற்கு முன் செலுத்துதல் வேண்டும்.

பரீட்சித்தல் 2021.04.01 முதல் 2021.04.07 வரை அரச அலுவலக வேலை நாட்களில் மு.ப.9.00 முதல் பி.ப.3.00 வரை இடம்பெறும் மேலதிக தகவல்களுக்கு கீழ்க்காணும் தொ.பே இலக்கத்தை அழைத்து விபரங்களை பெற்றுக்கொள்ளுங்கள்

- தொ.பே.இல-0472237666
- கையடக்கத் தொ.பே.இல - 0718359726 (திரு.ஜயசிங்ஹ)

இறுதித்தீர்மானம் கேள்விச் சபைக்கு உரியது

**தலைவர்,**
**பெறுகைக்குழு**
**கூட்டுறவு மொத்த விற்பனைத் தாபனம்**
**இல.27, வொக்ஷோல் வீதி,**
**கொழும்பு - 02**

---

## அறிவித்தல்

### அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் கணிய அளவையாளர் தரம் III பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக விண்ணப்பங்கள் கோரல்

1.0 அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் கணிய அளவையாளர் தரம் III பதவிகளில் நிலவும் 01 வெற்றிடத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் அனுமதிக்கு இணங்க விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2.0 தகைமையை மதிப்பிடும் நேர்முகப் பரீட்சையொன்றின் பெறுபேறுகளின் அடிப்படையில் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள பரீட்சார்த்திகள் நிலவும் வெற்றிடங்களுக்கு நியமிக்கப்படுவார்கள்.

3.0 இந்நியமனம் நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையதுமாகும். பதவிக்கு உரித்துடைய ஓய்வூதிய முறை தொடர்பில் அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு உத்தியோகத்தர்கள் கட்டுப்படுதல் வேண்டும்.

4.0 **அடிப்படைத் தகைமைகள்**

(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியில் 18 வயதுக்கு குறையாதவராகவும் 35 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (அரசாங்க சேவையில் நிரந்தரப் பதவிகளை வகிப்பவர்களுக்கு அதிகபட்ச வயதெல்லை ஏற்புடையதாகாது)

(இ) சிறந்த நடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.

(ஈ) ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் பணியாற்றுவதற்கும் பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான பொருத்தமான உடல் மற்றும் உளத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(உ) **தகைமைகள் :**

(I) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரப் பரீட்சையில் சிங்கள தமிழ் ஆங்கில மொழி, கணிதம் மற்றும் மேலும் இரண்டு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் அல்லது குறித்த துறையில் தேசிய தொழிற் தகைமை (NVQ) மட்டம் மூன்றுக்குரிய (03) தேர்ச்சியைப் பெற்றிருத்தல்

**அத்துடன்**

(II) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தரப் பரீட்சையில் விஞ்ஞான கணித பாடத் துறையில் அனைத்துப் பாடங்களிலும் (பொதுச் சாதாரண பரீட்சை தவிர) சித்தியடைந்து மூன்றாம் நிலைக் கல்விப் பாடநெறியொன்றைத் தொடர்வதற்குத் தேவையான தேர்ச்சி மட்டத்தைப் பெற்றிருத்தல். (பழைய பாடத்திட்டத்தின் கீழ் 03 பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருந்தால் போதுமானதாகும்) அல்லது குறித்த துறையில் தேசிய தொழிற் தகைமை (NVQ) மட்டம் நான்கிற்கான (04) தகைமைகளைப் பெற்றிருத்தல்.

(ஊ) **தொழிற் தகைமைகள்:**
மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப துறையில் (கணிய அளவை) தேசிய தொழிற் தகைமை (N.V.Q.) மட்டம் ஆறுக்கான (06) தகைமைகளைப் பெற்றிருத்தல்.

(எ) **தொழிற் தகைமைகள் :**
கணிய அளவைத் துறையில் ஒரு வருட அனுபவம்

(ஏ) ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பதவிக்குரிய அனைத்து தகைமைகளையும் விண்ணப்பங்கள் கோரப்படும் திகதியில் அல்லது அதற்கு முன்னர் பூர்த்தி செய்திருத்தல் கட்டாயமானதாகும்.

5.0 சம்பளத் திட்டம் : ரூபா 30,140 - 10x350 - 11 x 370 - 10x 560-10 x 660 - 49,910/ (03/2016 ஆம் இலக்கப் பொது நிருவாகச் சுற்றறிக்கைக்கு இணங்க MT 2 - 2016 சம்பளக் குறியீடு ஏற்புடையதாகும்.)

6.0. இங்கு குறிப்பிடப்படாத ஏதேனும் விடயங்கள் இருப்பின், அவை தொடர்பில் அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரினால் தீர்மானிக்கப்படும். அனைத்து விண்ணப்பதாரர்களும் இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பொதுச் சட்டதிட்டங்களுக்கு இணங்கச் செயற்படுவது கட்டாயமாகும்.

2021 மார்ச் மாதம் ....... ஆம் திகதி ......................................
(திணைக்களத் தலைவர்)

அதற்கான விண்ணப்பப் படிவமும் உரிய நிபந்தனைகளும் அரசாங்க சேவை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் www.pubad.gov.lk இணையதளத்தில் வெளியிடப்படும் என்பதுடன் அதனைப் பூர்த்தி செய்து 2021.04.10 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் அரசாங்க சேவை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, சுதந்திர சதுக்கம், கொழும்பு - 07. என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

---

## கேள்வி அறிவித்தல்

### அரச அச்சகக் கூட்டுத்தாபனம் (SPC)

### பாவனையிலிருந்து அகற்றப்பட்ட டயர், டேப் மற்றும் டியூப் விற்பனை

அரச அச்சகக் கூட்டுத்தாபனத்தின், பெறுகைக் குழுவின் தலைவரால் கீழ்க்காணும் உருப்படிகளுக்காக கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| உருப் படி இல | விற்பனைக்கு உரிய உருப்படி | கோவை இலக்கம் | கேள்விப் பிணை (ரூ) | செயற்பாட்டு பிணை முறி (ரூ) |
|---|---|---|---|---|
| 01 | பாவனையிலிருந்து அகற்றப்பட்ட டயர், டேப், டியூப் | SPC/SU/L/2021/FI/11 | 5,000.00 | 25,000.00 |

கேள்வி ஆவணங்கள் அரச அச்சகக் கூட்டுத்தாபனத்தின் வழங்கல்கள் முகாமையாளரின் அலுவலகத்தில் இலவசமாக பரீட்சித்துப் பார்க்க முடிவதுடன், கேள்வி ஆவணத் தொகுதிக்காக மீளளிக்கப்படாத ரூ.3000.00 கேள்விக் கட்டணத்தை செலுத்திய பின்னர் அரச அச்சகக் கூட்டுத்தாபனத்தின் வழங்கல்கள் முகாமையாளரிடம் 2021.03.25ஆம் திகதி முதல் 2021.04.21 வரை மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை அலுவலக கடமை நாட்களில் பெற்றுக்கொள்ளலாம்.

SPC/SU/L/2021/FI/11 என்ற கோவை இலக்கத்தை கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடப்பட்ட பொறியிடப்பட்ட விலைமனுக்களை 2021.04.22 மு.ப.11.00 இற்கு முன் தலைவர், பெறுகைக்குழு, அரச அச்சகக் கூட்டுத்தாபனம், பானலுவ, பாதுக்க என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அல்லது கூட்டுத்தாபனத்தின் வழங்கல்கள் பிரிவில் உள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். தாமதமாக வழங்கப்படுகின்ற கேள்விகள் நிராகரிக்கப்படும்.

2021.04.22ஆம் திகதி மு.ப.11.00 இற்கு கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படுவதுடன், அவ் வேளையில் கேள்விதாரர் அல்லது பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**அரச அச்சகக் கூட்டுத்தாபனம்**
**பானலுவ, பாதுக்க**

தொலைபேசி இல : 0112757501
பெக்ஸ் இல : 0112757500

---

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

### ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை

### மருத்துவ உபகரணங்களின் வழங்கலுக்கான கேள்வி

2021.04.22 ஆம் திகதி மு.ப. 10 மணி வரை ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலைக்கு பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ள மருத்துவ உபகரணங்களின் வழங்கலுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் இப்போது கோருகின்றார்.

| விலைமனுக்கோரல் இல. | உருப்படியின் விளக்கம் | எண்ணிக்கை |
|---|---|---|
| Q 192/21 | High End Colour Doppler Ultra Sound Scanner | 01 No |
| Q 193/21 | Retrofit Digital Radiography (DR) Upgrade with flat Panel Detectors in Exiting static and Mobile X-Ray System | - |

விலைமனுக்கோரல் தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.

நிகரான உபகரணங்களை வழங்குவதில் முன்னைய அனுபவமுள்ள விலைமனுதாரர்கள் உற்பத்தியாளர்கள்/முகவர்கள்/கம்பனிகளாகவிருக்கலாம்.

இந்த வைத்தியசாலையின் வழங்கல் பிரிவிலிருந்து 2021.03.25 ஆம் திகதியிலிருந்து 2021.04.21 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் விலைமனு ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம். ஆவணத்தைப் கையேற்பதற்காக ஒவ்வொன்றிற்கும் 3,500 ரூபாவை மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமாக செலுத்திய பின்னர் விலைமனுதாரர் எழுத்துருவிலான கோரிக்கையொன்றுடன் மீளளிக்கப்படாத கட்டணத்திற்காக இந்த வைத்தியசாலையின் கணக்காளரினால் வழங்கப்பட்ட பணப்பற்றுச்சீட்டு பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 8 ஆம் பந்தியின் கீழ் கம்பனிகள் பதிவாளரினால் (சமாகம் மெதுர) வழங்கப்பட்ட ஓர் பதிவுச் சான்றிதழின் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியுடன் விண்ணப்பித்தல் வேண்டும்.

உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட இரு பிரதிகளிலான விலைமனுக்கோரல் ஆவணங்கள் ‘‘மூலப்பிரதி’’ மற்றும் ‘‘நகல்பிரதி’’ என இரு தபாலுறைகளில் அடக்கப்பட்டு, முத்திரையிடப்பட்டு அவ்விரண்டும் ஒரு தபாலுறையில் அடக்கப்பட்டு, முத்திரையிடப்பட்டு அதனது இடது பக்க மேல் மூலையில் “உருப்படி, கேள்வி இலக்கம் மற்றும் மூடும் திகதி’’ ஆகியன குறிப்பிடப்படல் வேண்டும். விலைமனுக்கள் 2021.04.22 ஆம் திகதி மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பதிவுத்தபாலில் பின்வரும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது தலைவரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படலாம். தாமதமான விலைமனு சமர்ப்பிப்புகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

விலைமனுதாரர் விலைமனுக்கோரல் ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள விலைமனுப்பிணையொன்றை விலைமனுவுடன் இணைத்தல் வேண்டும்.

பெற்றுக் கொள்ளப்பட்ட விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே வைத்தியசாலையின் மாநாட்டு மண்டபத்தில் திறக்கப்படுவதுடன் விலைமனுதாரர் அல்லது அவருடைய பிரதிநிதியொருவர் இந்நிகழ்வின் போது சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவார்.

மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து 0112-778624 என்ற தொலைபேசி எண்ணினூடாக சிரேஷ்ட பெறுகை முகாமையாளருடன் தொடர்பு கொள்ளவும். விலைமனுக்கோரல் ஆவணங்கள் இலவசமாக பரீட்சிக்கப்படலாம். விலைமனுவை முழுமையாக அல்லது பகுதியாக ஏற்றுக் கொள்வதற்கு அல்லது நிராகரிப்பதற்கான உரிமையை பெறுகைக் குழுவானது கொண்டுள்ளது.

**திணைக்கள பெறுகைக் குழு,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை,**
**தளபத்பிட்டிய, நுகேகொட.**



---

## சட்டவிரோத வல்லப்பட்டை மர விற்பனை

### சட்டநடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தல்

*மாத்தளை சுழற்சி நிருபர்*

உலக மரபுரிமையாக காணப்படும் நக்கிள்ஸ் வனப்பிரதேசத்தில் சட்டவிரோதமாக வல்லப்பட்டை மரங்களை விற்பனை செய்துவரும் நபர்களுக்கு எதிராக கடுமையான சட்டநடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸ்மா அதிபருக்கு மாத்தளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரோஹன திஸாநாயக்க கடிதம் மூலம் தெரிவித்துள்ளார்.

அண்மைக்காலமாக நக்கிள்ஸ் புவக்பிடி பகுதி வனப்பிரதேசத்தில் மிகவும் பெறுமதி வாய்ந்த வல்லப்பட்டை மரங்கள் சட்டவிரோதமாக இனந்தெரியாதோரால் வெட்டப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருவதாக தெரியவருகின்றது.

இவ்வாறு வனப்பிரதேசத்திலுள்ள வல்லப்பட்டை மரங்கள் அழிக்கப்பட்டு வருவதால் சுற்றாடலுக்கும் பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டு வருவதாக பொலிஸ்மா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## வாகன டயர்களை பரிசோதிக்கும் நடவடிக்கை தற்காலிகமாக நிறுத்தம்

*லோரன்ஸ் செல்வநாயகம்*

தேய்ந்த டயர்களைக் கொண்ட வாகனங்களை அடையாளம் காண தொடங்கப்பட்ட விசேட கண்காணிப்பு நடவடிக்கை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

வாராந்திர அமைச்சரவை கூட்ட முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். மேலும் கூறுகையில், கொரோனா வைரஸ் தொற்று நோயால் தற்போது தடைசெய்யப்பட்டுள்ள டயர்களின் தேவை மற்றும் டயர்களை இறக்குமதி செய்வதற்கான தேவை குறித்து அரசாங்கம் ஆய்வு செய்யும்.

இந்த அம்சங்களை மறுபரிசீலனை செய்த பின்னர் இறுதி முடிவு எடுக்கப்படும். அதுவரை தேய்ந்த டயர்களை கண்காணிப்பதற்கான சிறப்பு நடவடிக்கை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்றார்.

---

### கம்பனி பெயர் மாற்றல் அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி தனது பெயரை 2021 மார்ச் 18ம் திகதியன்று மாற்றியுள்ளது என்பதை அறியத்தருகிறோம்.

**கம்பனியின் முந்தைய பெயர்:**
டென்ட்சு ஏஜிஸ் நெட்வர்க்ஸ் (பிரைவட்) லிமிட்டட்

**கம்பனியின் இல :** பீவீ **2572**

**பதிவு முகவரி:**
இல. 176/1 திம்பிரிகஸ்யாய வீதி, கொழும்பு 5.

**கம்பனியின் புதிய பெயர்:**
டென்ட்சு கமியுனிகேஷன்ஸ் (பிரைவட்) லிமிட்டட்

எக்கவுன்டிங் சிஸ்டம்ஸ் செக்கரட்ரியல் சேர்விசஸ் (பிரைவட்) லிமிட்டட்
03ம் மாடி, இல 11, காசல் ஒழுங்கை. கொழும்பு 4.

---

எனது இல. :- KDS/TUM/4/1/6/1
காணி அமைச்சின் குறிப்பு இல
:- 4-3/7/2016 எச்டப்ளிவ்/412

**காணி எடுத்தற் சட்டத்தின் (460ஆம் அத்தியாயம்) 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்**

கீழ் அட்டவணையில் குறிப்பிடப்படும் காணிகளை அரசாங்கம் கைபற்ற எண்ணியுள்ளது. இது தொடர்பான மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து 2021.02.19ம் திகதிய 2215/52 எனும் இலக்கம் கொண்ட இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அதிவிசேட வர்த்தமானியை பார்வையிடவும்.

**உப அட்டவணை**

| | |
|---|---|
| 1.மாகாணம் | : மத்திய |
| 2.மாவட்டம் | : கண்டி |
| 3.பிரதேச செயலாளர் பிரிவு | : தும்பனை |
| 4.அமைவு | : இல. 301, கலகெதர மேற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவுக்கு உட்பட்ட |
| 5. கிராமம் | : உடபிட்டிய |
| 6. முதல் கிராம வரைபட இல | : இ.கி.வ. இல. 130, பிற்சேர்க்கை இல.03, தாள் இல.03 |
| 7. காணியின் பெயர் | : பரகஹமட |
| 8. முழு நில அளவு | : 0.4185 ஹெக்டயார்ஸ் |

**எஸ்.எம்.சீ.குணரத்ன,**
**பிரதேச செயலாளர்.**
**பிரதேச செயலாளர் காரியாலயம், தும்பனை.**
**2021.03.22**









மாத்தளை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான மாசிமக மகோற்சவத்தை முன்னிட்டு வருடாந்தம் நடைபெறும் நூற்படையல் வைபவத்தில் இவ்வருடம் கலாபூஷணம் மாத்தளை பெ. வடிவேலன் எழுதிய 'எங்கள் முத்துமாரி மாசிமகத்தில் சித்திரத் தேரிலேறி வீதியிலே பவனி வந்து அருள் புரிந்தார்' என்னும் கவிதை நூல் ஆலய மூலஸ்தானத்தில் அம்பாளின் திருவடிகளில் படைத்து வெளியிடப்பட்டது. பூஜையினை நடாத்திய திவாகர் சர்மா சிவாச்சரியார் உட்பட நூலாசிரியர் , தேவஸ்தான அறங்காவலர் சபைத்தலைவர் சே.சர்வானந்தா, செயலாளர் செல்லையா ஜெயராஜ் ஆகியோருடன் நிகழ்வில் கலந்துகொண்ட பிரமுகர்களும் காணப்படுகின்றனர்.

# வலையில் சிக்கிய எட்டு அடி புலி

**நோட்டன் பிரிட்ஜ், ஹற்றன் விசேட, ஹற்றன் சுழற்சி, மஸ்கெலிய நிருபர்கள்**



அக்கரபத்தனை போபத்தலாவ மெனிக்பாலம் வெஸ்ட்பிரிவு பகுதியில் எட்டு அடி நீளம் கொண்ட புலி ஒன்று நேற்று புதன்கிழமை வலையில் சிக்குண்டுள்ளதாக அக்கரபத்தனை பொலிஸார் தெரிவித்தனர்.

மெனிக்பாலம் வெஸ்ட் பிரிவிலுள்ள மக்கள் நேற்று காலை 07மணியளவில் புலி வலையில் சிக்குண்டு இருப்பதை கண்டு 119 என்ற அவசர இலக்கத்திற்கு தகவல் வழங்கியதையடுத்து அக்கரப்பத்தனை பொலிஸார் ஊடாக நுவரெலியா வனவிலங்கு அதிகாரிகளுக்கு தகவல் வழங்கப்பட்டது.இதனையடுத்து அப்பகுதிக்கு வந்த வனவிலங்கு அதிகாரிகள், இரந்தனிகல மிருக வைத்தியசாலை வைத்தியர்களை வரவழைத்து புலியினை கொண்டு செல்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

போபத்தலாவ வனப்பகுதியில் இருந்து உணவு தேடிவந்த புலியே இவ்வாறு வலையில் சிக்குண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை நுவரெலியா வனவிலங்கு அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பெக்கோ இயந்திரத்தில் சிக்கி இளைஞன் பலி

**நோட்டன் பிரிட்ஜ் நிருபர், ஹற்றன் சுழற்சி நிருபர்**

கினிகத்தேனையில் சிறிய ரக பெக்கோ இயந்திரமொன்று குடை சாய்ந்து, விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.



பொல்பிட்டிய விகாரைக்கு அருகாமையில் உள்ள மின் உற்பத்தி நிலையத்தில் மண் அகற்றும் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த சிறிய ரக பெக்கோ இயந்திரமொன்று குடை சாய்ந்து, விபத்துக்குள்ளானதில் அதன் சாரதியான இளைஞன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

பதுளை ஹாலிஎல உடுவர பகுதியை சேர்ந்த சந்தருவான் மதுசங்க யாப்பா (வயது 22) என்ற இளைஞனே உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவம் நேற்று காலை 7.30 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. பொல்பிட்டிய பகுதியிலுள்ள மின்சார உற்பத்தி நிலைய புனரமைப்பு வேலைகளில் ஈடுபட்டிருந்த போது பெக்கோ இயந்திரம் பின்னோக்கி இழுத்துச் செல்லும் போது சாரதி பாய்ந்துள்ளதாகவும் அவர் பாய்ந்த பக்கத்திலேயே இயந்திரம் குடை சாய்ந்ததில் அதில் அகப்பட்டு அவர் ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளதாகவும் ஆரம்பகட்ட விசாரணையின் மூலம் தெரியவந்துள்ளது. உயிரிழந்த நபரின் சடலம் கினிகத்தேனை வைத்தியசாலையில் பிரேதச பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை கினிகத்தேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# புதிதாக அமைக்கப்படும் கட்டடங்களுக்கு தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் அனுமதி கட்டாயம்

**காவத்தை தினகரன் விசேட நிருபர்**

இரத்தினபுரி மாவட்டத்தில் புதிதாக அமைக்கப்படும் அனைத்து கட்டடங்களுக்கும் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் அனுமதி கட்டாயம் பெற வேண்டும்.

இரத்தினபுரி மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் மாவட்ட செயலாளர் மாலனி லொக்குபோத்தாகம தலைமையில் நேற்றுமுன்தினம்(23) மாவட்ட செயலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம் பெற்றபோதே இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

இரத்தினபுரி மாவட்டத்தில் புதிதாக அமைக்கப்படும் அரச மற்றும் தனியார் கட்டடங்கள் மற்றும் வீடுகள் அனைத்திற்கும் சம்பந்தப்பட்ட பிரதேச சபை மற்றும் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் அனுமதி கட்டாயம் பெற வேண்டும் என இரத்தினபுரி மாவட்ட அனர்த்த முகாமைத்துவ குழு தீர்மானம் எடுத்துள்ளது.

இரத்தினபுரி மாவட்டத்தில் கடந்த காலங்களில் அனர்த்தங்கள் ஏற்பட்ட போது பல்வேறு கட்டடத்தொகுதிகள் சேதமாகின. இவ்வாறு சேதமாகிய கட்டடங்கள் அனைத்தும் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் மூலம் அனுமதி பெறப்படாத கட்டடத்தொகுதிகளாகும்.

இதை கருத்திற் கொண்டே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டதாகவும் இதன்போது தெரிவிக்கப்பட்டது.



இதன்போது கருத்து தெரிவித்த இரத்தினபுரி மாவட்ட செயலாளர் மாலினி லொக்குபோத்தாகம, இரத்தினபுரி மாவட்டத்தில் ஒவ்வொரு வருடமும் வெள்ள அனர்த்தத்திற்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது. குறிப்பாக 2017ஆம் ஆண்டு மே மாதம் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு மற்றும் மண்சரிவு காரணமாக இரத்தினபுரி மாவட்டத்தில் 101 பேர் பலியாகினர். இதில் 86 பேரின் சடலங்கள் தேடி எடுக்கப்பட்டபோதிலும் மிகுதி 15 பேரின் சடலங்களும் கிடைக்கவில்லை. கடந்த 2018, 2019, 2020 ஆகிய ஆண்டுகளில் இரத்தினபுரி மாவட்டத்தில் வெள்ளம் மற்றும் மண்சரிவு ஏற்பட்டபோதிலும் அது 2017ஆம் ஆண்டை போல் பாதிப்புகள் ஏற்படாவிட்டாலும் கூட சிறு அளவில் பாதிப்புகள் ஏற்பட்டது. இதை கருத்திற் கொண்டு எந்தநேரத்திலும் நாம் ஆயத்தமாக இருக்க வேண்டும் என்று இரத்தினபுரி மாவட்ட செயலாளர் மாலினி லொக்குபோத்தாகம தெரிவித்தார்.

இதன்போது இரத்தினபுரி மாவட்டத்தின் உள்ளூராட்சி சபை தலைவர்கள், பிரதேச செயலாளர்கள், அரச அதிகாரிகள் பாதுகாப்பு அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### மத்திய மாகாணத்தில்

# கொவிட் 19 தொற்றாளர்களின் எண்ணிக்கை 7717 ஆக அதிகரிப்பு

**(எம்.ஏ.அமீனுல்லா )**

மத்திய மாகாணத்தில் கொவிட் 19 தொற்றாளர்களின் எண்ணிக்கை 7717 ஆக அதிகரித்துள்ளதாக மத்திய மாகாண சுகாதார திணைக்களம் தெரிவித்துள்ளது.

மத்திய மாகாணத்தில் அதிக எண்ணிக்கையிலான கொரோனா தொற்றாளர்கள் கண்டி மாவட்டத்தில் பதிவாகியுள்ளனர். அதன்படி கண்டி மாவட்டத்திலிருந்து 4962 பேர் இனம்காணப்பட்டுள்ளனர். அதே போன்று நுவரெலியா மாவட்டத்தில் 1555 தொற்றாளர்கள் , மாத்தளை மாவட்டத்தில் 1200 தொற்றாளர்கள் பதிவாகியுள்ளனர்.

நேற்றுமுன்தினம் (23) காலை 6.00 மணிக்கு முடிவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் மாகாணத்திற்குள் மொத்தம் 16 புதிய தொற்றாளர்கள் பதிவாகியுள்ளனர். அதன்படி கண்டியிலிருந்து 05 பேரும் நுவரெலியாவில் இருந்து 04 , மாத்தளைலிருந்து 07 . பேரும் புதிய தொற்றாளர்களாக பதிவாகியுள்ளனர்.

மேலும் மத்திய மாகாணத்தில் கண்டி மாவட்டத்திலேயே கொரோனா தொற்று காரணமாக அதிகமானோர் உயிரிழந்துள்ளனர். அதன்படி கண்டி மாவட்டத்தில் இதுவரை 55 பேர் மாத்தளை மாவட்டத்தில் 10 பேரும் மற்றும் நுவரெலியா மாவட்டத்தில் 12 பேருமாக மொத்தம் 77 பேர் உயிரிழந்துள்ளனர்.

# மத்திய மாகாணத்தில் நீர்நிலைகளை பாதுகாக்க வேண்டும்

**(அமீனுல்லா)**

மத்திய மாகாணத்தில் காணப்படும் ஆறுகள் மாசடைவதை தவிர்த்து அதனை பாதுகாப்பது ஒவ்வொரு குடிமகனினதும் தார்மீகக் கடமையாகும் என மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே தெரிவித்தார் .

பேராதனை கண்ணொருவ பகுதியில் மகாவலி ஆற்றின் அருகே (22) நடைபெற்ற சுரகீமு கங்கா தேசிய திட்ட நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் ஆளுநர் இதனைத் தெரிவித்தார்.

ஆளுநர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

பல தசாப்தங்களுக்கு முன்னர் ஆற்றில் இறங்கி தண்ணீர் குடிக்க முடிந்தது, ஆனால் இன்று எந்த ஆற்றிலிருந்தும் தண்ணீர் குடிக்க முடியாதுள்ளது.

மகாவலி ஆற்றின் இருபுறமும் ஒதுக்கப்பட்ட நிலங்களை சட்டவிரோதமாக ஆக்கிரமித்து கழிவுகளை ஆற்றில் விடுகின்றனர். இது தொடர்பாக சட்டத்தை கடுமையாக அமுல்படுத்த வேண்டும். ஆனால் சுற்றுச்சூழல் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காமையால் அதன் விளைவுகளை ஒட்டுமொத்த மக்களும் அனுபவிக்க நேர்ந்துள்ளது.



மகாவலி ஆற்றில் பணியிடங்களில் இருந்து அசுத்தமான எரிபொருள் வெளியேற்றபடுவதாகவும், இதன் விளைவாக ஆற்றில் உள்ள மீன்களில் மண்ணெண்ணெய் இருப்பதாகவும் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். இந்நிகழ்வில் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான உதயன கிரிந்திகொட, குணதிலக்க ராஜபக்ச, மத்திய மாகாண பிரதான செயலாளர் காமினி ராஜரட்ண கண்டி மாவட்ட செயலாளர் சந்தன தென்னகோன், மத்திய சுற்றுச்சூழல் அதிகார சபையின் மாகாண பணிப்பாளர் கே.பி.வெலிகந்த உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### சப்ரகமுவ மாகாண

# அங்கவீனமுற்ற இராணுவ வீரர்களுக்கு உபகரணப் பொருட்கள் வழங்கி வைப்பு

**காவத்தை தினகரன் விசேட நிருபர்**

சப்ரகமுவ மாகாணத்தில் அங்கவீனமுற்ற இராணுவ வீரர்களுக்கு தேவையான உபகரணப் பொருட்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம்(23) மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ தலைமையில் மாகாண சபை கட்டடத்தொகுதியில் இடம்பெற்றது. ரணவிரு சேவை அதிகார சபையின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் சப்ரகமுவ மாகாணத்தில் அங்கவீனமுற்ற இராணுவ வீரர்களுக்கு தேவையான உபகரணப் பொருட்கள் வழங்கப்பட்டன.

இரத்தினபுரி மாவட்டத்தில் 817 இராணுவ வீரர்களும் கேகாலை மாவட்டத்தில் 1023 இராணுவ வீரர்களும் உட்பட சப்ரகமுவ மாகாணத்தில் மொத்தம் 1840 இராணுவ வீரர்கள் அங்கவீனமுற்றுள்ளனர்.

அத்தோடு இரத்தினபுரி மாவட்டத்தில் 1100 இராணுவ வீரர்களும் கேகாலை மாவட்டத்தில் 1156 இராணுவ வீரர்களும் உட்பட சப்ரகமுவ மாகாணத்தில் மொத்தம் 2256 இராணுவ வீரர்கள் நாட்டுக்காக உயிர் தியாகம் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி நிகழ்வில் இராணுவ அதிகார சபையின் இரத்தினபுரி மாவட்ட அதிகாரி கயான் விஜயவிக்ரம உட்பட முக்கிய அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.





இலங்கை மற்றும் இந்திய பிரபல ஊடகவியலாளரும் கேலிச் சித்திர ஓவியரும், நகைச்சுவை மேடை பேச்சாளருமான மணி ஸ்ரீகாந்தன் இங்கிரிய றைகம ஸ்ரீ குறிஞ்சி மாரியம்மன் ஆலய "ஆன்மீக மலர்" என்ற நூலின் சிறப்பு பிரதியொன்றை அகலவத்தை டார்டன்பீல்ட் கணபதி அறநெறி பாடசாலை பொறுப்பாளர் உதய சாந்தனிடம் கையளித்தார். இதனைத் தொடர்ந்து கணபதி அறநெறி பாடசாலை பொறுப்பாளர் உதயசாந்தன் ஊடகவியலாளர் மணி ஸ்ரீகாந்தனுக்கு ஊடகத் துறையில் ஆற்றி வரும் மகத்தான சேவையை பாராட்டும் வகையில் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். மேலும் இவ் வைபவத்தில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சிரேஷ்ட ஊடக இணைப்பாளர் சவரிமுத்து தேவதாஸ் கணபதி அறநெறி பாடசாலையில் மாணவ மாணவிகளுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கினார். (படங்கள்: களுத்துறை சுழற்சி நிருபர்)

தினகரன்
வடக்கின் உதயம்
Vadakkin Uthayam
2021 மார்ச் 25
வியாழக்கிழமை

# வீட்டுத் திட்ட நிதியினை வழங்க கோரி பயனாளிகள் கவனயீர்ப்பு

யாழ்.விசேட நிருபர்




வீட்டுத் திட்ட நிதியினை முழுமையாக வழங்குமாறு கோரி வீட்டுத்திட்ட பயனாளிகள் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்று யாழ்.மாவட்ட செயலகம் முன்பாக இவர்கள் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ்ப்பாணம் மானிப்பாய் பிரதேச செயலக பிரிவில், ஆனைக்கோட்டை ஜே/132 மற்றும் ஜே/133 கிராமஉத்தியோகத்தர் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் 2 ஆயிரத்து 18ஆம் ஆண்டு அப்போதைய அரசினால் ஏழு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா பெறுமதியான வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டதாகவும், அதில் இரண்டு கட்டங்களாக ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதி மட்டுமே தற்போது வரை வழங்கப்பட்டுள்ளதாகவும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் தெரிவித்துள்ளனர்.

அத்தோடு இப் பகுதியில் நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் அரசால் வழங்கப்பட்ட அரைகுறை வீட்டில் வசித்து வருவதாகவும் கவலை வெளியிட்டுள்ளனர். இந்த விடயம் தொடர்பில் அரச அதிகாரிகளை தொடர்பு கொள்ளும்போது அவர்கள் ஒவ்வொருவரும் வேறு ஒருவர் மீது பழி போட்டுவிட்டு தாங்கள் தப்புவதாக போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் குறிப்பிட்டுள்ளனர்.

திட்டத்தினை வழங்கும்போது தாங்கள் வசித்து வந்த தற்காலிக வீடுகளை இடித்து புதிய வீட்டுத்திட்டத்தினை மேற்கொண்டதாகவும், தற்போது வசிப்பதற்கு இடமின்றி வெயில் மற்றும் மழைகளில் வசித்து வருவதாகவும் மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

# 30 ஆண்டுகளின் பின்னர் குருந்தூர் குளத்தின் கீழ் சிறுபோக செய்கை



புதுக்குடியிருப்பு விசேட நிருபர்

குமுளமுனை கமநல சேவை நிலையத்தின் தண்ணிமுறிப்பு குருந்தூர் மலையின் கீழ் உள்ள குருந்தூர் குளம் 30 வருடங்களாக புனரமைக்படாதநிலையில் தற்போது கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் 10 மில்லியன் நிதியுதவியில் புனரமைப்பு செய்யப்பட்டு சிறுபோக விவசாய செய்கைக்கு நீர் வழங்கப்பட்டுள்ளது.

சிறுபோகம் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் குருந்தூர் குளத்தினை நம்பி சுமார் 60 ஏக்கர் வரையில் விவசாயிகள் நெற் செய்கையினை மேற்கொள்ள தீர்மானித்துள்ளார்கள். விவசாயிகளின் சிறுபோக செய்கைக்கான நீர் திறந்துவிடும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

இதன்போது குமுழமுனை கமநலசேவைத் திணைக்கள உத்தியோகத்தர்கள் கமக்கார அமைப்பினர் விவசாயிகள் ஆகியோர் குளக்கொட்டில் வழிபாடுகளை மேற்கொண்டு பொங்கல் பொங்கி தண்ணீரினை திறந்து விட்டுள்ளார்கள்.

# முத்தையன்கட்டு குளத்தின் கீழ் 4326 ஏக்கரில் சிறுபோக செய்கை

மாங்குளம் குறூப் நிருபர்

முத்தையன்கட்டு குளத்தின் கீழ் 3 ஆயிரத்து 305 ஏக்கரில் நெற் செய்கையும், ஆயிரத்து 21 ஏக்கரில் உப உணவு செய்கையும் செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இக் குளத்தின் கீழான பயிர்ச் செய்கை தொடர்பான கூட்டம் மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதன் தலைமையில் முத்தையன்கட்டு நீர்ப்பாசன திணைக்கள அலுவலகத்தில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்றுள்ளது.

இதன்போது பிரதி நீர்ப்பாசன பணிப்பாளர், பிரதி மாகாணவிவசாய பணிப்பாளர், பிரதேச செயலாளர், வனவளத் திணைக்களம், கமநலசேவை உதவிப் பணிப்பாளர் கிராம சேவையாளர் உள்ளிட்ட அதிகாரிகளுடன் கமக்கார அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். கூட்டத்தின் போது 3ஆயிரத்தி 305 ஏக்கரில் நெற் செய்கையும் ஆயிரத்தி 21 ஏக்கரில் உப உணவு செய்கையுமாக 4 ஆயிரத்தி 326 ஏக்கரில் செய்கை பண்ண தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய குளத்தின் தண்ணீரும் நேற்று முன்தினம் திறந்துவிடப்பட்டுள்ளது.

சிறுபோக விதைப்பிற்கான கால எல்லையாக 23.03.21 தொடக்கம் 23.04.21 வரை திகதியிடப்பட்டுள்ளது. வேலியுடன் பயிரும் கால்நடையுடன் ஆழும் என கால்நடை கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

குளத்தில் போதியளவு நீர் உள்ளதால் இம்முறை உபஉணவு செய்கையிலும் அதிகளவில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மன்னார் காட்டுப் பகுதியில் உருகுலைந்த சடலம் மீட்பு

மன்னார் குறூப் நிருபர்

மன்னார் காட்டுப் பகுதியில் உருக்குலைந்த நிலையில் சடலமொன்று மீட்கப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

மன்னார் தலைமன்னார் பிரதான வீதி, கரிசல் காட்டுப் பகுதியில் நேற்று முன்தினம் மாலை இச் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இப் பகுதியில் மாடு தேடிச் சென்ற நபர் ஒருவர் சடலத்தை அவதானித்த நிலையில் சடலம் தொடர்பாக பொலிசாருக்கு தகவல் வழங்கியுள்ளார். தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு சென்ற மன்னார் பொலிசார் சடலத்தை அவதானித்து மேலதிக நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.



சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை. நபர் சுமார் 20 நாட்களுக்கு முன் உயிரிழந்திருக்க முடியும் என எதிர்பார்க்கப்பட்டுள்ளதோடு, சடலம் சிதைவடைந்து உருக்குழைந்த நிலையில் அடையாளம் காண முடியாத நிலையில் காணப்பட்டது. எனினும் கடந்த மாதம் வீட்டைவிட்டுச் சென்று காணாமல் போனதாக தேடப்பட்டு வந்த நபரான 37 வயதான பூபாலசிங்கம் அருள்ராஜ் என்பரே இவர் என உறவினர்கள் அடையாளம் காட்டியுள்ளனர்.

நேற்று காலை சடலம் மீட்கப்பட்ட இடத்திற்கு தடயவியல் நிபுணத்துவ பொலிசார் மற்றும் மன்னார் பொது வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி ஆகியோர் சென்று விசாரணைகளை முன்னெடுத்தனர். சடலத்திற்கு அருகில் பாதணியும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

## உருத்திரபுரம் சிவன் கோவில்

# தொல்லியல் திணைக்கள அதிகாரிகளை வழிமறித்து மக்கள் எதிர்ப்பு போராட்டம்

கிளிநொச்சி குறூப் நிருபர்



கிளிநொச்சி உருத்திரபுரம் சிவன் ஆலயத்தில் தொல்லியல் திணைக்கள அதிகாரிகள் மேற்கொள்ளவிருந்த அகழ்வு ஆராய்ச்சி பணிகள் பொது மக்களின் எதிர்ப்பால் கைவிடப்பட்டுள்ளது.

நேற்று காலை உருத்திரபுரம் சிவன்கோவில் பகுதிக்கு தொல்லியல் ஆய்வுகளை மேற்கொள்ளவென அதிகாரிகள் சென்றனர். எனினும் அங்கிருந்த பொது மக்கள் அவர்களை ஆலயத்துக்குள் செல்ல விடாது தடுத்து நிறுத்தினர்.

வட மாகாண தொல்லியல் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் அடங்கிய குழுவினர் காலை 11 மணியளவில் உருத்திரபுரம் சிவன் ஆலயத்திற்கு அகழ்வாராச்சியை மேற்கொள்ள சமூகமளித்திருந்தனர்.

அதற்கு பொது மக்கள் வீதியை மறித்து அவர்களை உள்ளே செல்ல விடாது கோசங்களை எழுப்பியவாறு தடுத்து நின்றதோடு, வரலாற்றை மாற்றாதே, மனங்களில் புத்தரை தேடு, மண்ணில் புத்தரை தேடாதே, எங்களது சிவன் எங்களுக்கு வேண்டும், போன்ற கோசங்களை எழுப்பியவாறு எதிர்ப்பில் ஈடுபட்டனர்.

# யாழ்.மாநகர சந்தை தொகுதி மறு அறிவித்தல் வரை பூட்டு

யாழ்.விசேட நிருபர், ஐ.சிவசாந்தன்



யாழ்ப்பாணம் மாநகரில் மரக்கறி சந்தைத் தொகுதி மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

மரக்கறி, பழங்கள், உள்ளூர் உற்பத்திகள் மற்றும் வெற்றிலைக் கடைகள் அடங்கிய சந்தைப் பகுதி மாத்திரம் இவ்வாறு மூடப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் மாநகர மரக்கறி சந்தைத் தொகுதியில் எழுமாறாக 60 பேரிடம் நேற்று முன்தினம் மாதிரிகள் பெறப்பட்டன. இதில் 9 வியாபாரிகளுக்கு தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. தொற்றாளர்களில் 6 உள்ளூர் உற்பத்திப் பொருள்கள் (பனம் பொருள்கள்) வியாபாரிகள் எனவும், மூன்று பேர் மரக்கறி வியாபாரிகள் எனவும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். சந்தைத் தொகுதியின் அனைத்து வியாபாரிகளும் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்றார்.

# யாழ்.மாநகர முதல்வர் தனிமைப்படுத்தலில்

பருத்தித்துறை விசேட நிருபர்

யாழ்.மாநகரசபை முதல்வர் வி. மணிவண்ணன் சுயதனிமைப்பட்டுள்ளார். அவருடன் நெருங்கிப் பழகிய ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதியானதையடுத்து, தன்னை தனிமைப்படுத்திக் கொண்டார். வி.மணிவண்ணனின் நெருங்கிய நண்பர் ஒருவரின் திருமண நிகழ்வு கடந்த 20ஆம் திகதி பருத்தித்துறையில் நடந்தது.

அதில் மணிவண்ணனும் கலந்து கொண்டார். அந்த நண்பருக்கு நேற்று முன்தினம் கொரோனா தொற்று உறுதியானது. இதையடுத்து, தன்னை சுயதனிமைப்படுத்திக் கொண்ட வி.மணிவண்ணன், நேற்று காலை பி.சி.ஆர் பரிசோதனை செய்தார். இதனால், நேற்று மாநகரசபை அமர்வு நடைபெறவிருந்த நிலையில், பிற்போடப்பட்டுள்ளது.

# புலம்பெயர் உறவினால் கற்றல் உபகரணங்கள்

புலம்பெயர் வாழ் ஈழத்து உறவுகளால் வவுனியா மாணிக்கதாசன் நற்பணி மன்றத்தின் ஒருங்கிணைப்பில் பல்வேறு உதவித்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்தவகையில் புங்குடுதீவு பிரதேசத்தை சேர்ந்த சுவிஸ் நாட்டில் வசித்து வருகின்ற கிருஸ்ணகுமார் தர்சினி குடும்பத்தினர் தமது பிள்ளையின் மங்கல மஞ்சள் நன்னீராட்டு விழாவினை முன்னிட்டு உதவிகளை வழங்கியுள்ளனர். இவர்கள் வவுணதீவு புதுமண்டபத்தடி இருட்டுச்சோலை மடு எனும் கிராமத்தில் பொண்ணாங் கண்ணித் தோட்டத்தில் அடிப்படை வசதிகள் ஏதுமில்லாத "பாரதி முன்பள்ளியை" பொறுப்பெடுத்து, முன்பள்ளிக்குத் தேவையான உபகரணங்கள் உட்பட மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை வழங்கியுள்ளனர்.



# கிழக்கின் குரல்



# மட்டக்களப்பில் காணி வழங்கலில் பாரபட்சம்

மட்டக்களப்பு குறூப் நிருபர்

மட்டக்களப்பில் அரச காணி வழங்கலில் முஸ்லிம், சிங்கள ஊடகவியலாளர்கள் முற்றாகப் புறக்கணிப்பட்டுள்ளனர். இந்த விடயத்தில் ஜனாதிபதி விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என கிழக்கு மாகாண சபையின் முன்னாள் அமைச்சர் எம்.எஸ். சுபைர் தெரிவித்தார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஊடகவியலாளர்கள் கடந்த யுத்த காலத்திலும் சரி தற்போதைய கால கட்டத்திலும் சரி மக்களின் நடப்பு விவகாரங்களை வெளிக் கொண்டு வந்து குரலற்ற மக்களின் குரலாக ஒலித்துக் கொண்டிருப்பவர்கள்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக நிலையான இன ஐக்கியத்திற்காகவும் நாட்டுக்காகவும் அவர்கள் உழைத்துக் கொண்டிருக்கிறார்கள்.



அர்ப்பணிப்போடு பணியாற்றும் இத்தகைய ஊடகவியலாளர்களின் பணியை எவரும் இனம், மதம் என்ற நோக்கில் குறைத்து மதிப்பிட்டு புறந்தள்ளலாகாது.

ஆயினும் இந்த புறக்கணிப்பு மட்டக்களப்பு மாவட்டத்தில் வெளிப்படையாக இடம்பெற்றிருப்பது வியப்பை அளிக்கிறது. இது விடயமாக அவர் நேற்று ( 24) ஜனாதிபதிக்கு அவசர மின்னஞ்சல் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

மட்டக்களப்பில் கடந்த வாரம் 33 தமிழ் சமூக ஊடகவியலாளர்கள் என்று கூறப்படுகின்றவர்களை மாத்திரம் தெரிவு செய்து காணி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

இதில் காத்தான்குடி, ஏறாவூர், கல்குடா ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த முஸ்லிம் ஊடவியலாளர்களும் மட்டக்களப்பு மாவட்டத்தின் சிங்கள ஊடகவியலாளர்களும் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றார்கள்.

கடந்த 2019ஆம் ஆண்டில் மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்தில் வதிவிடக் காணி இல்லாத ஊடகவியலாளர்களுக்கு அரச காணி வழங்கும் நேர்முகப் பரீட்சைக்கு ஊடகவியலாளர்கள் சமுகமளித்திருந்தபோதும் அதிலிருந்து முஸ்லிம், சிங்கள சமூகங்களைச் சேர்ந்த ஊடகவியலாளர்கள் அனைவரும் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டு தமிழ் சமூக ஊடகவியலாளர்களுக்கு மாத்திரம் அரச காணிகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

எனவே இனம், மதம், சமூகம் என்ற அடிப்படையில் பிரித்து நோக்கி அரச நிருவாகத்தின் மூலம் பேதங்களை வளர்க்காது காணி வழங்கப்படாமல் விடுபட்டிருக்கின்ற முஸ்லிம், சிங்கள ஊடகவியலாளர்களையும் புறக்கணிக்கப்பட்டிருக்கின்ற ஏனைய தமிழ் ஊடவியலாளர்களுக்கும் உடனடியாகக் காணி வழங்க வேண்டும்.

இத்தகைய ஒரு தீர்மானத்தை ஏறாவூர் நகர சபை அங்கீகரித்துள்ளது. இந்த விடயத்தை ஜனாதிபதி, பிரதமர், ஊடக அமைச்சர், காணி அமைச்சர், கிழக்கு மாகாண ஆளுநர் ஆகியோர் உடனடிக் கவனத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டும்.

# அரச உத்தியோகத்தர்களுக்கு இரண்டாம் மொழிப் பயிற்சி

(கல்லடி குறூப் ,மட்டக்களப்பு விசேட, புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்கள்)

தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தினால் அரச அலுவலகங்களில் பணியாற்றுகின்ற உத்தியோகத்தர்களுக்கான இரண்டாம் மொழி சிங்கள பயிற்சி வகுப்பின் இறுதி நாள் நிகழ்வு, செவ்வாய்க்கிழமை (23) மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

இந் நிகழ்விற்கு பிரதம அதிதியாக மேலதிக மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி சுதர்சினி சிறிகாந் கலந்து சிறப்பித்ததுடன், சிறப்பு அதிதிகளாக உதவி அரசாங்க அதிபர் ஏ. நவேஸ்வரன், மண்முனை வடக்கு உதவி பிரதேச செயலாளர் பொறியியலாளர் அருணன், மாவட்ட ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் வீ.சந்திரகுமார் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

பயிற்சி வகுப்பில் கலந்து கொண்ட உத்தியோகத்தர்களினால் கண்கவர் கலை நிகழ்வுகள் சிங்கள மொழியில் நிகழ்த்தப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள அரச அலுவலகங்களில் பணியாற்றி வருகின்ற மத்திய தர ( மட்டம் 2 ) உத்தியோகத்தர்கள் பலரும் கலந்துகொண்டு பயிற்சி வகுப்பினை திறம்பட நிறைவு செய்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# மாற்று திறனாளிகளுக்கு சுயதொழில் உபகரணங்கள் வழங்கி வைப்பு

(பெரியநீலாவணை விசேட நிருபர்)

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கு சுயதொழில் முயற்சி மற்றும் திட்டமிடல் பயிற்சி செயலமர்வு செவ்வாய்க்கிழமை (23) பிரதேச செயலாளர் ரி.ஜெ. அதிசயராஜ் தலைமையில் பாண்டிருப்பு கலாசார மத்திய நிலையத்தில் நடைபெற்றது.

விதாதா வள நிலையம் டீப் லின்ங் (Deaf Link) நிறுவனத்தோடு விதாதா வள நிலையம் ஆகியன இணைந்து நடாத்திய இந்த சுயதொழில் திட்டமிடல் பயிற்சி செயலமர்வில் விஞ்ஞான தொழில்நுட்ப உத்தியோகத்தர் எஸ்.எஸ். தர்ஷன் வளவாளராக கலந்துகொண்டு மாற்றுத்திறனாளிகளின் தொழில் முயற்சிகள் திட்டமிடல், சமூக மட்டத்தில் மாற்றுத்திறனாளிகளின் போக்கு எதிர்காலத்தில் தொழில் முயற்சியின் அவசியம் குறித்து விளக்கமளித்தார்.

இந் நிகழ்வில் டீப் லின்ங் (Deaf Link) நிறுவனத்தின் மாவட்ட இணைப்பாளர் ரி.இளையராஜா, சமூக சேவை அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி லில்லிமலர் சுபாஸ்கரன், விதாதா வள நிலைய உத்தியோகத்தர்கள், சுய உதவிக் குழு அங்கத்தவர்கள், மாற்றுத்திறனாளிகள் என பலர் கலந்து கொண்டனர்.

# சமுர்த்தி கடன் தொடர்பில் பயனாளிகளுக்கு உத்தியோகத்தர்கள் விழிப்பூட்ட வேண்டும்

## மட்டு. மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் அமிர்தகலா

(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)

சமுர்த்தி உதவித் திட்டத்தின் கீழ் உதவி பெறும் சமுர்த்திப் பயனாளிகளுக்கு கடன் திட்டங்களின் நன்மைகள் தொடர்பில் வெளிக்கள அலுவலர்கள் இன்னமும் சிறப்பாகப் பணியாற்ற வேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் அமிர்தகலா பாக்கியராசா தெரிவித்தார்.

ஏறாவூர் நகர பிரதேச செயலகப் பிரிவில் சமுர்த்தி வங்கிகளை கணனிமயப்படுத்தும் அங்குரார்ப்பண நிகழ்வு செவ்வாய்க்கிழமை (23) இடம்பெற்ற பொழுது இதனைத் தெரிவித்தார்.



மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நஸீர் அஹமட் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட இந் நிகழ்வில், ஏறாவூர் நகர பிரதேச செயலகப் பிரிவிலுள்ள ஏறாவூர் மத்தி, ஏறாவூர் கிழக்கு ஆகிய இரண்டு சமுர்த்தி வங்கிகள் கணனி மயப்படுத்தப்பட்டன.

நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய சமுர்த்திப் பணிப்பாளர் , மட்டக்களப்பு மாவட்டத்தில் 29 சமுர்த்தி வங்கிகளும் 14 சமுர்த்தி மகா சங்கங்களும் இருக்கின்றன. அவற்றிலே இந்த வங்கியோடு சேர்த்து 13வது சமுர்த்தி வங்கி கணனி மயப்படுத்தப்பட்டு திறந்து வைக்கப்படுகிறது.

சமுர்த்தி கடனுதவிகள் குறைந்த வட்டி வீதத்திலே அறிமுகப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன.பயனாளிகளுக்கு இந்தக் கடன் திட்டங்கள் சம்பந்தமான விழிப்புணர்வுகள் போதாமலுள்ளது.அதனால் இந்த விடயத்தில் வெளிக்கள உத்தியோகத்தர்கள் தங்களது கடப்பாட்டை காட்ட வேண்டும்.

குறைந்த வட்டி வீதத்திலான சமுர்த்தி கடனுதவிகள்பற்றி பயனாளிகளுக்கு தெரியப்படுத்தி அவர்களது தொழிலையும் பொருளாதாரத்தையும் மேம்படுத்த ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றார்.

# இன்று கும்பாபிஷேகம்

(காரைதீவு குறூப் நிருபர்)

வரலாற்று பிரசித்திபெற்ற சம்மாந்துறை தமிழ்க் குறிச்சி ஸ்ரீ பத்ரகாளியம்பாள் ஆலய பாலஸ்தாபன கும்பாபிஷேகம் இன்று (25) வியாழக்கிழமை காலை 7.45 மணி முதல் 9.13 மணி வரையிலான சுபமுகூர்த்த வேளையில் நடைபெறும். பாலஸ்தாபன பிரதமகுரு சிவாகமவித்யாபூஷணம் சிவஸ்ரீ சண்முக மகேஸ்வரக்குருக்கள் பாலஸ்தாபனக்கிரியைகளை நடாத்தி வைப்பார். சாதகாசிரியராக சிவஸ்ரீ சண்முக மயூரவதனக்குருக்கள் செயற்படுவாரென ஆலயத்தலைவர் வி.சுப்பிரமணியம் தெரிவித்தார்.

# பனையோலை பயிற்சி

கந்தளாய் தினகரன் நிருபர்

பனை அபிவிருத்தி அதிகார சபையின் ஏற்பாட்டில் திருகோணமலை மாவட்டத்தின் தம்பலகாமம் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கிராமத்திற்கு கிராமம் சுயதொழிலை ஏற்படுத்தும் நோக்கில் பனையோலை பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

தம்பலகாமம் சதாம் நகர் பகுதியில் இப் பனையோலை பயிற்சி செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. வறுமை கோட்டின் கீழ் வாழ்கின்ற பெண்கள் மற்றும் யுவதிகளை இனம் கண்டு இவ்வாறு பனையோலை பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

# அக்கரைப்பற்று கடற்கரைக்கு ஓய்வுக்காக செல்வோர் அவதானம்

(அட்டாளைச்சேனை குறூப் நிருபர்)

அக்கரைப்பற்று கடற்கரைக்கு ஓய்வைக்கழிக்க செல்வோர் எச்சரிக்கையாகவும் அவதானமாகவும் இருக்க வேண்டும். அண்மைக் காலமாக கடற்கரைக்கு மாலை வேளைகளில் அதிகமான இளைஞர்கள், யுவதிகள் மாத்திரமன்றி பலதரப்பட்டோர் வருகை தருகின்றனர்.

போதை வஸ்துக்கு இலக்கான இளைஞர்கள், அங்கு ஓய்வைக் கழிக்க வரும் மக்களை துன்புறுத்துகின்றனர். சந்தர்ப்ப சூழ்நிலைகளைப் பார்த்து வழிப்பறி கொள்ளை போன்றவைகளிலும் ஈடுபட்டுவருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

அண்மையில் கத்திமுனையில் ஒரு குழுவினர் பணத்தை சூறையாடி சென்றுள்ளனர். கத்தியைக்காட்டி பயமுறுத்தவே கடற்கரைக்கு வந்தவர்கள் தம்மிடமிருந்த பணத்தை தாமாகவே கொடுத்ததும் அவர்கள் பணத்தை எடுத்துக்கொண்டு ஓடி விட்டனர்.

இனிவரும் காலங்களில் இது போன்ற சம்பவங்கள் இடம்பெறாமல் இருக்க கடற்கரைக்கு செல்பவர்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

இதனைக் கட்டுப்படுத்த அக்கரைப்பற்று பொலிசாரும் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

# பொருட்கள் கொள்வனவில் ஈடுபடுவோர் சுகாதார நடைமுறையை பின்பற்ற வேண்டும்

## கல்முனை சுகாதார சேவைகள் பணிப்பாளர்

(ஒலுவில் விசேட நிருபர்)

புத்தாண்டு காலப்பகுதியில் பொருட்களை கொள்வனவு செய்வதற்கு பொது மக்கள் ஒன்று கூடும் இடங்களில் சுகாதார நடைமுறைகளை பின்பற்றுமாறு, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டொக்டர் ஜீ. சுகுணன் தெரிவித்தார்.



புத்தாண்டுக்காக பொருட்களை கொள்வனவு செய்வதற்கு மக்கள் பொதுச் சந்தைகள் மற்றும் வர்த்தக நிலையங்களுக்கு செல்கின்ற போது முகக்கவசம் அணிந்து செல்லுமாறு கேட்டுள்ளார்.

ஆடைகளை கொள்வனவு செய்வதற்கு பொது மக்கள் ஆடை விற்பனை நிலையங்களுக்கு செல்கின்ற போது ஆடை விற்பனை உரிமையாளர்கள் சுகாதார நடைமுறைகளை பின்பற்றுவதோடு ஆடைகளை கொள்வனவு செய்வதற்கு வரும் வாடிக்கையாளர்களுக்கு கை கழுவுவதற்குரிய ஏற்பாடுகளை செய்து கொடுக்க வேண்டுமெனவும் கேட்டுள்ளார்.

கடைகளுக்கு முன்னால் சுகாதார வழிமுறைகளை மக்களை கடைப்பிக்கச் செய்வதற்கு பொறுப்பான ஒருவரை நியமிப்பதோடு, கை தொற்று நீக்கியை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென கேட்டுள்ளார்.

இது தொடர்பாக சகல சுகாதார வைத்தியதிகாரிகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும், மேற்குறித்த அறிவுறுத்தல்களை பின்பற்றாத ஆடை விற்பனை நிலையங்கள் மூடப்படுவதோடு, அவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவித்தார்.

# இருவர் இடைநிறுத்தம்

றொட்டவெவ குரூப் நிருபர்

திருகோணமலை மொரவெவ பிரதேச சபை ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர்கள் இருவரை இடைநிறுத்தி உள்ளதாக ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் பாலித்த ரங்கே பண்டார பிரதேச சபையின் செயலாளருக்கு கடிதம் மூலம் தெரியப்படுத்தியுள்ளார்.

கட்சியின் யாப்பை மீறி செயற்பட்டமை, கட்சியின் ஒழுங்கு விதிகளையும் நெறிமுறைகளையும் மீறியமை ஆகிய குற்றச்சாட்டின் பேரில் இவர்கள் இருவரும் கட்சியிலிருந்து நீக்கப்பட்டதாக அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. 2021 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 9 ஆம் திகதி முதல் இவர்களுடைய உறுப்புரிமை நீக்கப்பட்டுள்ளது. இக் கடிதத்தின் பிரதிகள் தேர்தல் ஆணைக்குழுவுக்கும் மொரவெவ பிரதேச சபையின் செயலாளருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# இன நல்லுறவை கட்டியெழுப்பும் நோக்கில் எனது செயற்பாடு முன்னெடுக்கப்படும்

வெல்லாவெளி தினகரன் நிருபர்)

இனங்களுக்கிடையேயான உறவைக் கட்டியெழுப்பக்கூடிய முறைமையிலேயே எனது பிரதேச சபை செயற்பாடுகள் அனைத்தும் இருக்கும் என, மண்முனைப்பற்று பிரதேச சபை தவிசாளர் தருமரெட்ணம் தயானந்தன் தெரிவித்தார்.

கிரான்குளம் சுகவாழ்வு மன்றத்தின் ஏற்பாட்டில் மண்முனை பற்று ஆரையம்பதி பிரதேச சபையின் புதிய தவிசாளர் மற்றும் உறுப்பினர்களை கௌரவிக்கும் நிகழ்வு, கிரான்குள பொதுநூலக வளாகத்தில் அண்மையில் இடம்பெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மண்முனை பிரதேச சபை உறுப்பினர்கள்,கிரான்குள கிராமத்தின் சமூக நிறுவனங்களின் பிரதிநிதிகள், ஆலயங்களின் தலைவர்கள், விளையாட்டுக்கழக பிரநிதிகள்,பொதுமக்கள் கலந்து கொண்டதுடன்,தவிசாளர் மற்றும் உறுப்பினர்களுக்கு மாலை அணிவித்து பொன்னாடை போத்தி கௌரவித்தார்கள்.



அவர் மேலும் கூறுகையில்,

மண்முனை பிரதேசத்தில் அநியாயமாகச் செயற்படும் ஒருவரை தவிசாளராக நீண்டகாலம் பதவியில் வைத்திருக்க முடியாது. தமிழ் முஸ்லிம் பிரதேசத்தின் இன நல்லுறவை மேம்படுத்தி அபிவிருத்தியை கட்டியெழுப்பக்கூடிய செயற்பாடுகளே தொடர்ந்தும் என்னால் முன்னேடுக்கப்படும்.

பல வளங்களைக் கொண்டுள்ள ஆரையம்பதி பிரதேச சபையினை முறையாக நடைமுறைப்படுத்துகின்ற தேவைப்பாடு தவிசாளர் உட்பட உறுப்பினர்கள் எல்லோருக்கும் இருக்கின்றது.

பிரதேச சபை வரவுசெலவுத் திட்டத்தில் எனக்கு ஆதரவு அளித்த பத்து உறுப்பினர்களுக்கும் என்னுடைய தற்துணிவில் அபிவிருத்தி வேலைகளுக்கு நிதியொதுக்குவேன் என்பதை திடமாக தெரிவிப்பதோடு, எதிர்காலத்தில் இரு சமூகங்களும் வாழ்கின்ற மண்முனைப்பற்று கிராம மக்களுக்கு என்னால் இயன்ற முடியுமான அபிவிருத்தி வேலைகளை முன்னெடுக்க ஆயத்தமாக இருக்கின்றேன் என்றார்.



ஒரு இலட்சம் வேலை வாய்ப்புக்களை வழங்கும் திட்டத்தின் கீழ் அக்கரைப்பற்று பிரதேச செயலக பிரிவில் மூன்றாம் கட்டமாக தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கான நேர்முகப் பரீட்சை (23) அக்கரைப்பற்று பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற போது.

(படம்;அக்கரைப்பற்று மத்திய நிருபர்)

# விடுமுறையில் கற்றல் செயற்பாடுகளுக்கு பங்களிப்பு நல்கிய ஆசிரியர்கள் கௌரவிப்பு

(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)

விடுமுறை காலத்தில் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்கு பங்களிப்பு நல்கிய, அக்கரைப்பற்று அஸ்ஸிராஜ் கனிஸ்ட கல்லூரி ஆசிரியர்கள் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

பாடசாலை அதிபர் எஸ்.றினோஸ்டீன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் ஆசிரியர்கள் அதிதிகளினால் நினைவுப்பரிசு வழங்கி பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

குறித்த ஆசிரியர்களின் அர்ப்பணிப்புச் சேவையானது மாணவர்கள், பெற்றோர் உள்ளிட்ட பலரது பாராட்டையும் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வில் அக்கரைப்பற்று கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் (ஆரம்பப் பிரிவு) எஸ்.அம்ஜத்கான், கணக்காளர் கே.லிங்கேஸ்வரன், அக்கரைப்பற்று கோட்டக்கல்வி அதிகாரி எம்.ஏ.கலீலுர் ரஹ்மான், ஆசிரிய ஆலோசகர் எஸ்.எல்.மன்சூர், பாடசாலை விளையாட்டு விருத்தித் திட்ட இணைப்பாளர் ஏ.எல்.பாயிஸ் உள்ளிட்ட முக்கியஸ்த்தர்கள் அதிதிகளாகக் கலந்து சிறப்பித்தனர்.

# சுயஸ் கால்வாயில் குறுக்காக சிக்கியுள்ள கப்பலால் நெரிசல்

இராட்சத கொள்கலன் கப்பல் ஒன்று கட்டுப்பாட்டை இழந்து குறுக்காக சிக்கிக்கொண்டதால் எகிப்தின் சுயஸ் கால்வாயில் சரக்குக் கப்பல் பயணத்தில் நெரிசல் ஏற்பட்டுள்ளது.




400 மீற்றர் நீளம் மற்றும் 59 மீற்றர் அகலம் கொண்ட இந்தக் கப்பலுக்கு உதவியாக இழுவைப் படகுகள் அனுப்பப்பட்டபோதும் நிலைமையை சீர்செய்ய பல நாட்கள் எடுத்துக்கொள்ளலாம் என்று அஞ்சப்படுகிறது.

சுயஸ் கால்வாயின் வடக்காக கடந்த செவ்வாய்க்கிழமை காலை இந்த விபத்து நேர்ந்துள்ளது. மத்தியதரைக் கடலில் இருந்து செங்கடலை இணைக்கும் இந்த நீர்ப்பாதை ஆசியா மற்றும் ஐரோப்பாவுக்கு இடையிலான குறுகிய கடல் பாதையாக உள்ளது.

பனாமாவில் பதிவு செய்யப்பட்ட இந்தக் கப்பல், சீனாவில் இருந்து நெதர்லாந்தின் ரொட்டர்டாம் துறைமுகத்தை நோக்கி பயணித்துள்ளது.

கால்வாயை முழுமையாக தடுக்கும் வகையில் குறுக்காக சிக்கி இருப்பதால் இரு பக்கங்களில் இருந்து வரும் கப்பல்களும் முன்னேற முடியாமல் நெரிசலுக்கு உள்ளாகியுள்ளன.

போக்குவரத்து தடைபட்டதால், 100க்கும் அதிகமான கப்பல்கள் கால்வாயைக் கடந்து செல்ல காத்துக்கொண்டிருப்பதாக புலும்பர்க் செய்தி நிறுவனம் குறிப்பிட்டது.

சர்வதேச கடல்துறை வர்த்தகத்தில், சுமார் 10 வீதமானது சுயஸ் கால்வாயை கடந்து செல்கிறது. கடந்த ஆண்டு, சுமார் 19,000 கப்பல்கள் கால்வாயைக் கடந்து சென்றன. அதில் ஏற்றிச் செல்லப்பட்ட சரக்குகளின் மொத்த எடை 1 பில்லியன் தொன்களுக்கு அதிகம்.

சுயஸ் கால்வாய் மூன்று இயற்கையான ஏரிகளை இணைத்து அமைக்கப்பட்ட 193 கிலோமீற்றர் நீளமான நீர்ப்பாதையாகும்.

# மியன்மார் படையினரால் ஏழு வயது சிறுமி சுட்டுக்கொலை

மியன்மாரில் பாதுகாப்பு படையினரின் துப்பாக்கிச் சூட்டில் 7 வயது சிறுமி ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். கடந்த மாத இராணுவ சதிப் புரட்சிக்கு பின்னர் இராணுவத்தின் ஒடுக்குமுறையில் கொல்லப்பட்ட மிக இளம் வயதினராக இந்த சிறுமி உள்ளார்.



மண்டலேயில் இருக்கும் தனது விட்டில் வைத்து இந்த சிறுமி கொல்லப்பட்டதாக அவரது குடும்ப உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

இராணுவ வீரர்கள் சிறுமியின் தந்தையைச் சுட்டதாகவும் அப்போது தந்தையின் மடியில் உட்கார்ந்திருந்த சிறுமி காயப்பட்டதாகவும் சிறுமியின் சகோதரி 'மியன்மார் நவ்' செய்தி நிறுவனத்திடம் கூறினார்.

கொல்லப்பட்ட சிறுமியின் பெயர் கின் மியோ சிட் என்று அடையாளம் காணப்பட்டுள்ளது. அந்தச் சிறுமிக்கு சிகிச்சை அளிக்க மருத்துவக் குழு ஒன்று விரைந்து சென்றபோதும், அவரைக் காப்பாற்ற இயலவில்லை என்று மீட்புதவிப் பணியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த பெப்ரவரி 1 ஆம் திகதி இராணுவம் ஆட்சியை கைப்பற்றியது தொடக்கம் அதற்கு எதிராக தொடர்ந்து ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

கொல்லப்பட்டவர்களில் 20க்கும் அதிகமான சிறுவர்கள் இருப்பதாக சிறுவர்களை பாதுகாப்போம் உரிமைக் குழு குறிப்பிட்டுள்ளது.

இதில் மொத்தம் 164 ஆர்ப்பாட்டக்காரர்கள் கொல்லப்பட்டிருப்பதாக இராணுவம் கூறியபோதும் குறைந்தது 261 பேர் கொல்லப்பட்டிருப்பதாக அரசியல் கைதிகளுக்கான உதவிச் சங்கம் என்ற செயற்பாட்டுக் குழு குறிப்பிட்டுள்ளது.

போராட்டக்காரர்கள் உயிரிழந்தது குறித்து செவ்வாயன்று கவலை வெளியிட்டுள்ள மியன்மார் இராணுவம், நாட்டில் நடக்கும் 'அராஜக' செயல்களுக்கு காரணம் அவர்கள் தான் என்று குற்றம் சாட்டியது.

# இஸ்ரேல் தேர்தல் முடிவு: ஆட்சி அமைப்பதற்கு மீண்டும் இழுபறி

இஸ்ரேல் பாராளுமன்றத் தேர்தலில் பிரதமர் பென்ஜமின் நெதன்யாகு தனது பதவியை தக்கவைத்துக்கொள்ள தேவையான ஆசனங்களை பெறத் தவறியுள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற தேர்தலின் 90 வீதமான வாக்குகள் எண்ணப்பட்ட நிலையில் நெதன்யாகுவின் வலதுசாரி தரப்புகள் ஆட்சி அமைப்பதற்கு எட்டு ஆசனங்கள் குறைவாக உள்ளது.

இந்நிலையில் போட்டி வலதுசாரி கட்சி ஒன்று ஏழு ஆசனங்களை பெற்றிருப்பதால் ஆட்சி அமைக்க அவர்களின் ஆதரவு நெதன்யாகுவுக்கு அவசியமாக உள்ளது.

இந்தத் தேர்தலின் இறுதி முடிவு இஸ்ரேல் மற்றும் பலஸ்தீனத்திற்கு இடையிலான உறவிலும் தீர்மானகரமாக அமையவுள்ளது.

இஸ்ரேலில் நீண்டகாலம் பதவியில் உள்ள தலைவரான நெதன்யாகு, தனது லிகுட் கட்சி தலைமையில் வலதுசாரி அரசு ஒன்றை அமைக்கப்போவதாக உறுதி அளித்துள்ளார்.

நெதன்யாகுவின் முன்னாள் விசுவாசியான நப்டாலி பென்னட் தலைமையிலான சிறிய வலதுசாரி கட்சி ஆட்சி அமைப்பதில் தீர்க்கமான சக்தியாக உருவெடுத்துள்ளது. எனினும் நெதன்யாகுவுக்கு ஆதரவளிப்பது அல்லது அவரை வெளியேற்ற விரும்பும் எதிர்க்கட்சிகளுக்கு ஆதரவளிப்பது பற்றி அந்தக் கட்சி வெளிப்படையான அறிவிப்பு எதையும் வெளியிடவில்லை.

"இஸ்ரேலிய தேசத்திற்கு சிறந்ததையே நான் செய்வேன்" என்று பென்னட் தெரிவித்துள்ளார்.

இதனிடையே ட்விட்டரில் தனது ஆதரவாளர்களுக்கு நன்றி தெரிவித்திருக்கும் நெதன்யாகும், "எனது தலைமையின் கீழ் லிகுட் மற்றும் வலதுசாரிகளுக்கு பெரு வெற்றியை வழங்கி உள்ளீர்கள். தற்போது லிகுட் மிகப்பெரிய கட்சியாக உள்ளது" என்று அவர் தெரிவித்துள்ளார்.

மறுபுறம் பிரதான எதிர்க்கட்சித் தலைவரான யெயிர் லபிட், அவரது தலைமையிலான மையவாத யெஷ் அடிட் சுமார் 17 ஆசனங்களை வென்றிருக்கும் நிலையில், தமது கட்சி பெரும் அடைவை பெற்றிருப்பது பெருமையாக உள்ளது என்று தெரிவித்துள்ளார். "இஸ்ரேல் தேசத்தில் விவேகமான அரசு ஒன்றை அமைப்பதற்கு அனைத்தையும் செய்வேன்" என்று உறுதி அளித்துள்ளார்.

கடந்த இரண்டு ஆண்டுகளில் நான்காவது முறையாக நடைபெற்ற இந்தப் பொதுத் தேர்தல் பிரதமர் பென்ஜமின் நெதன்யாகுவுக்கு தீர்க்கமானதாக பார்க்கப்பட்டது. ஊழல் குற்றச்சாட்டை முகம்கொடுத்திருக்கும் நெதன்யாகுவை பதவியில் இருந்து நீக்க எதிர்க்கட்சிகள் வலியுறுத்தி வருகின்றன.

முந்தைய மூன்று தேர்தல்களிலும் எந்தத் தரப்பும் போதுமான பெரும்பான்மையை பெறாத நிலையில் ஸ்திரமான கூட்டணி ஒன்றை அமைக்க முடியாத சூழல் இருந்தது. இந்நிலையில் புதிய கூட்டணி அரசு ஒன்றை அமைக்கும் பேச்சுவார்த்தை தோல்வி அடையும் பட்சத்தில் இஸ்ரேல் ஐந்தாவது பொதுத் தேர்தல் ஒன்றை எதிர்கொள்ளும் நிலை உள்ளது.



# ஹமாஸ் இலக்குகள் மீது இஸ்ரேல் வான் தாக்குதல்

இஸ்ரேலை நோக்கி ரொக்கெட் குண்டுகள் வீசப்பட்டதை அடுத்து பதில் நடவடிக்கையாக காசாவில் ஹமாஸ் இலக்குகள் மீது தாக்குதல் நடத்தியதாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.



காசாவின் தெற்கு துறைமுகங்களில் நேற்று அதிகாலையில் இஸ்ரேல் இராணுவம் தாக்குதல் நடத்தியதாக காசாவைச் சேர்ந்த ஒருவர் ஏ.எப்.பி செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார்.


காசாவில் இருந்து இஸ்ரேலுக்குள் இன்று வீசப்பட்ட ரொக்கெட் குண்டுக்கு பதில் நடவடிக்கையாக ஹமாஸ் ரொக்கெட் உற்பத்தித் தளம் மற்றும் இராணுவத் தளம் ஒன்றின் மீது போர் விமானங்கள் மற்றும் தாக்குதல் ஹெலிகொப்டர் மூலம் தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக இஸ்ரேல் இராணுவம் குறிப்பிட்டுள்ளது.

காசா நகரில் தென்மேற்கில் உள்ள தளம் மீது ஐந்து ஏவுகணை தாக்குதல்கள் இடம்பெற்றதாக பலஸ்தீன செய்தி நிறுவனமான மஆன் தெரிவித்துள்ளது. மத்திய காசாவின் டெயிர் அல் பலாஹ்வை இலக்கு வைத்தும் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன.

காசாவில் இருந்து வீசப்பட்ட ரொக்கெட் குண்டு தெற்கு இஸ்ரேலின் திறந்த வெளிப்பகுதியில் விழுந்ததாக இஸ்ரேலிய இராணுவ பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

# செவ்வாயில் ஹெலியை பறக்கவிட நாசா ஏற்பாடு

செவ்வாய்க் கிரகத்தில் வரும் ஏப்ரல் ஆரம்பத்தில் முதலாவது ஹெலிகொப்டரை பறக்கவிட அமெரிக்க விண்வெளி ஆய்வு மையமான நாசா திட்டமிட்டுள்ளது.



ஒரு மாதத்திற்கு முன்னர் செவ்வாயின் ஜெசேரோ பள்ளத்தாக்கில் தரையிறங்கிய பெர்சவரன்ஸ் ஆய்வு கலத்துடன் இந்த சிறிய விமானம் அனுப்பப்பட்டது.

இன்ஜினியுட்டி என்று அழைக்கப்படும் இந்த ஹெலி இரண்டு சுழலிகளுடனான 1.8 கி.கி மாத்திரமே எடை கொண்டதாகும். செவ்வாயில் அரிதாக உள்ள காற்றில் அது தனது பறக்கும் முயற்சியை மேற்கொள்ளவுள்ளது.

இந்த முயற்சி வெற்றிபெறுமாயின் அது 'ரைட் சகோதரர்களின் தருணம்' போன்று இருக்கும் என்று நாசா தெரிவித்தது. 1903 இல் ரைட் சகோதரர்களே காற்றைவிட கனமான வலுக்கொண்ட விமானத்தில் முதல் முறை பறந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த ஹெலி இன்னும் பெர்சவரன்ஸ் ஆய்வு கலத்தின் வயிற்றுப்பகுதியில் பாதுகாக்கப்பட்ட நிலையில் காணப்படுகிறது. எதிர்வரும் நாட்களில் அது செவ்வாய் தரைக்கு இறக்கப்படவுள்ளது.

இது 90 மீற்றர் பறக்கும் வலயத்தில் பறக்கவிருப்பதோடு அந்த செயற்பாடுகள் அனைத்தையும் பொருத்தப்பட்டிருக்கும் பெமராவில் பதிவு செய்யவுள்ளது.

# பிரேசிலில் தினசரி கொரோனா உயிரிழப்பு 3,000ஐ தாண்டியது

பிரேசிலில் கொரோனா தொற்றினால் தினசரி உயிரிழப்போர் எண்ணிக்கை கடந்த செவ்வாய்க்கிழமை முதல் முறையாக 3,000ஐ தாண்டியுள்ளது.



இதன்படி கடந்த செவ்வாய்க்கிழமை முடிவுற்ற 24 மணி நேரத்தில் பிரேசிலில் சாதனை எண்ணிக்கையாக 3,251 பேர் உயிரிழந்திருப்பதாக பிரேசில் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

பிரேசிலில் மொத்தம் சுமார் 299,000 பேர் உயிரிழந்திருப்பதோடு உலகில் கொரோனா தொற்றினால் அதிக உயிரிழப்பு பதிவான நாடுகளில் அமெரிக்காவுக்கு அடுத்து இது இரண்டாவது இடத்தில் உள்ளது.

பிரேசில் ஜனாதிபதி ஜெயிர் பொல்சொனாரோ இந்த கொரோனா தொற்றுக்கு பின்னரான காலத்தில் நான்காவது சுகாதார அமைச்சரை நியமித்த அதே தினத்திலேயே உயிரிழப்பு எண்ணிக்கையும் உச்சம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நாட்டில் கொரோனா தொற்று பரவல் தீவிரம் அடைந்த நிலையிலும் அந்நாட்டு ஜனாதிபதி அந்த நோய்த் தொற்றை குறைத்து மதிப்பிட்டு வருவது அவர் மீதான அழுத்தத்தை அதிகரித்துள்ளது.

நோய்த் தொற்று அதிகரிப்பால் பிரேசில் மருத்துவமனைகள் நிலைகுலையும் நிலையை எதிர்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உலகின் மிகப் பெரிய ஓவியம் 62 மில்லியன் டொலருக்கு ஏலம்

பிரிட்டிஷ் நாட்டு ஓவியரான சச்சா ஜெப்ரி தீட்டிய உலகின் மிகப்பெரிய ஓவியம் சிறுவர் நலன்புரிக்காக நிதி திரட்டுவதற்கு 62 மில்லியன் டொலருக்கு விற்கப்பட்டுள்ளது.



டுபாயில் கைவிடப்பட்ட ஹோட்டல் ஒன்றின் நடன மண்டபத்தின் 17,000 சதுர அடிப் பகுதியில் எட்டு மாதங்கள் செலவிட்டு ஜெப்ரி இந்த ஓவியத்தை திட்டியிருந்தார்.

70 பாகங்களாக இதனை விற்பதற்கு அவர் திட்டமிட்டிருந்த நிலையில், பிரான்ஸ் வர்த்தகரான அன்ட்ரே அப்தூன் ஒட்டுமொத்த ஓவியத்தையும் வாங்க முன்வந்துள்ளார். இதன்மூலம் உயிர்வாழும் ஓவியர் ஒருவரின் ஓவியம் ஒன்று ஏலத்தில் அதிக விலைக்கு விற்கப்பட்ட நிகழ்வாக இது சாதனை படைத்துள்ளது.

62 மில்லியன் டொலர் முழுமையான தொகையும் பிரேசில், இந்தியா, இந்தோனேசியா மற்றும் தென்னாபிரிக்கா போன்ற நாடுகளில் பின்தங்கிய சிறுவர்களுக்கு உதவுவதற்காக டுபாய் கேயார், யுனிசெப் மற்றும் உலகளாவிய நன்கொடை அறக்கட்டளைக்கு செல்லும் என்று ஜெப்ரி தெரிவித்துள்ளார்.

கடந்த செப்டெம்பர் மாதம் இந்த ஓவியம் உலகின் மிகப்பெரிய ஓவியமாக கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# வடகொரியா ஏவுகணை சோதனை: கவலையில்லை என்கிறார் பைடன்

வட கொரியா இரு குறுகிய தூர ஏவுகணைகளை ஏவியது பற்றி கவலை கொள்ளவில்லை என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார். பைடன் ஜனாதிபதியாக பதவியேற்ற பின் வட கொரியாவின் முதல் ஏவுகணைச் சோதனையாக இது உள்ளது.



'இது வழக்கமான ஒன்று' என்று பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்ததாக பைடன் குறிப்பிட்டார்.

கண்டம் விட்டு கண்டம் பாயாத இரு குரூஸ் ஏவுகணைகளை ஏவியதாக குறிப்பிட்டிருக்கும் வட கொரியா, இது ஐ.நா பாதுகாப்புச் சபை தீர்மானத்திற்கு எதிரானதல்ல என்று தெரிவித்துள்ளது.

வட கொரியாவின் ஒன்வோனில் இருந்து கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை மஞ்சள் கடலை நோக்கி இரு குரூஸ் ஏவுகணைகள் வீசப்பட்டதாக தென் கொரியா குறிப்பிட்டது.

அமெரிக்கா மற்றும் தென் கொரியாவின் கூட்டு இராணுவ பயிற்சி பற்றி வட கொரியா கண்டனம் வெளியிட்டிருக்கும் நிலையிலேயே இந்த ஏவுகணை சோதனை இடம்பெற்றுள்ளது.

அதேபோன்று வட கொரியாவுடன் தொடர்பை ஏற்படுத்த பைடன் நிர்வாகம் தொடர்ந்து முயற்சித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## நகர்வலம்



# இலங்கைக்கு உதவுவதில் பாகிஸ்தான் ஒருபோதும் பின்வாங்கியதில்லை





பாகிஸ்தானின் 81 ஆவது தேசிய தினத்தை முன்னிட்டு கொழும்பிலுள்ள பாகிஸ்தான் உயர் ஸ்தானிகராலயம் நேற்று முன்தினம் கொழும்பு கிங்ஸ் பெரி ஹோட்டலில் வரவேற்பு நிகழ்வொன்றை ஏற்பாடு செய்திருந்தது. இந்நிகழ்வில் விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அலுத்கமகே சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். அமைச்சர்களான மஹிந்த அமரவீர, பந்துல குணவர்தன உட்பட இராஜாங்க அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், இராஜதந்திரிகள் புத்திஜீவிகள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

இவ்வைபவத்தில் பாகிஸ்தான் உயர் ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் (ஓய்வு பெற்ற) முஹம்மது சாத் கட்டாக் நிகழ்த்திய வரவேற்புரையில் "1948 இல் அன்றைய இலங்கை பிரதமர் மறைந்த டி.எஸ். சேனாநாயக்க, பாகிஸ்தானுக்கு விஜயம் செய்த போது பாகிஸ்தானுக்கும் இலங்கைக்கும் இடையில் வலுவான சகோதரத்துவத்தின் அடித்தளம் இடப்பட்டது என்றார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான உறவு இரண்டாயிரம் வருடங்களுக்கும் மேலாக தொடர்கிறது.

இந்த உறவானது பௌத்த மற்றும் இஸ்லாம் மதங்கள் போதிக்கும் உலகளாவிய அமைதி மற்றும் அன்பினால் மென்மேலும் வலுப்பெற்றுள்ளன' என்று குறிப்பிட்டார்.

பிராந்திய பாதுகாப்பு நிலைமை பற்றி அவர் குறிப்பிடும் போது" ஆத்திரமூட்டும் நிகழ்வுகள் இருந்தபோதிலும், பாகிஸ்தான் விவேகமும் தீவிர கட்டுப்பாடும் உள்ள ஒரு பொறுப்புள்ள நாடாக செயற்பட்டுள்ளது.அர்த்தமுள்ள பேச்சுவார்த்தைகள் மற்றும் கலந்துரையாடல்கள் மூலம் இருதரப்பு மற்றும் பிராந்திய மோதல்களையும் அமைதியான முறையில் தீர்க்கும் நடவடிக்கைகளை பாகிஸ்தான் ஆதரிக்கிறது.

தெற்காசியாவில் அமைதி மற்றும் நல்லிணக்கத்தை மேலோங்கச் செய்வதற்காக இலங்கை அரசாங்கம் மேற்கொள்ளும் முயற்சிகளையும் நாம் பாராட்டுகிறோம்.

பாகிஸ்தான் அரசாங்கம் இலங்கை மாணவர்களுக்கு பல்வேறு துறைகளில் 1000 புலமைப்பரிசில்களை வழங்க உள்ளது. அத்தோடு பாகிஸ்தான் காம்சாட் பல்கலைக்கழக அனுசரணையுடன், இலங்கையில் உலகத் தரம் வாய்ந்த உயர் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தை நிறுவுவதற்கான முயற்சிகள் மேகொள்ளப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இவ்வைபவத்தில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட அமைச்சர் மஹிந்தானந்த அலுத்கமகே உரையாற்றுகையில், தேவைப்படும் அனைத்து சந்தர்ப்பங்களிலும் இலங்கைக்கு உறுதுணையாக இருந்து வருவதற்காக பாகிஸ்தான் அரசாங்கத்திற்கும் அந்நாட்டு மக்களுக்கும் நன்றி தெரிவிக்கிறோம்.

இரு நாடுகளுக்கும் இடையிலான வலுவான உறவுகளை நினைவுகூர்ந்த அவர், பாகிஸ்தானும் இலங்கையும் எப்போதும் நெருக்கமான, நல்லுறவு மற்றும் பரஸ்பர உறவுகளைப் பேணிவருகின்றன. அடிப்படையிலான மற்றும் பன்முகத் தன்மை கொண்டவை என்றும் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில், பாகிஸ்தான் தேசிய தின விசேட கேக்கை உயர் ஸ்தானிகர் மற்றும் பிரதம விருந்தினர் கூட்டாக சேர்ந்து வெட்டியமை குறிப்பிடத்தக்கது.

தேசிய தின வைபவத்தில் உயர்ஸ்தானிகர்






## போலி நாணயத்தாள் புழக்கத்தில் விழிப்பாக இருக்க கோரிக்கை

**மினுவாங்கொடை நிருபர்**

பண்டிகைக் காலங்களில் வியாபாரபங்கள் களை கட்டியுள்ளதால் முடிச்சு மாறிகள் மற்றும் திருடர்களின் நடமாட்டம் அதிகரித்துள்ளது. இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி போலி நாணயத்தாள்களும் புழக்கத்தில் விடப்பட்டுள்ளதால் மிகக் கவனமாகப் பயன்படுத்துமாறு பொதுமக்களை பொலிஸார் எச்சரித்துள்ளனர். கடந்த சில நாட்களில் போலி 5 ஆயிரம் ரூபா நோட்டுக்களை அச்சிட்ட பலரைப் கைது செய்துள்ளதாகவும்,பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, கொரோனாச் சூழல் முற்றாக நீங்காத நிலையில், சந்தைகள்,கடைத் தொகுதிகளுக்கு பொருட்களை வாங்க வருவோர் சுகாதார நடைமுறைகளைப் பேணுமாறும் கோரப்பட்டுள்ளனர்.



புத்தளம் நகர பிதா கே.ஏ. பாயிஸின் வழிகாட்டலின் கீழ், நகர சபை உறுப்பினர் எம்.எச்.எம். ரஸ்மியின் வேண்டுகோளின் பேரில், புதிய வடிகான்கள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. புத்தளம் வான் வீதி மூன்றாம் ஒழுங்கை ஏ.எம்.சீ.எம். புஹாரி மௌலவி மாவத்தையில் வடிகான் நிர்மாணப்பணிகளை நகர பிதா கே.ஏ. பாயிஸ் மற்றும் நகர சபை உறுப்பினர் எம்.எச்.எம். ரஸ்மி ஆகியோர் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைப்பதை காணலாம்.புத்தளம் நகர சபை,இதற்கென சுமார் 5 இலட்சம் ரூபா நிதியை ஒதுக்கியுள்ளது. படம் : புத்தளம் தினகரன் நிருபர்



"சகலருக்கும் மின்சாரம்'' செயற்திட்டத்தின் கீழ், மிஹிந்தலை பகுதியில் அமைந்துள்ள வீடொன்றிற்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க மின் இணைப்பை ஆரம்பித்து வைத்த போது பிடிக்கப்பட்ட படம்.
படம் : அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

## கர்ப்பிணித் தாய்மார்களுக்கு போஷாக்குணவுக்கான கூப்பன்கள்

**தோப்பூர் குறூப் நிருபர்**



மூதூர் பிரதேச செயலகத்திற்குட்பட்ட 80 கர்ப்பிணித் தாய் மார்களுக்கான போசனை உணவுக்கான கூப்பன் வழங்கும் நிகழ்வு, மூதூர் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் செவ்வாய்கிழமை (23) நடைபெற்றது.

மூதூர் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில், முன் பிள்ளைப்பருவ மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கே.நப்ரதின் ஏற்பாட்டில் இது இடம் பெற்றது.

மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சின் முன் பிள்ளைப்பருவ அபிவிருத்திக்கான தேசிய செயலகம் இதற்கு அனுசரணை வழங்கியது. மூதூர் சுகாதார பணிமனை மற்றும் Lions Club of Mutur United பங்களிப்புடன் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நிகழ்வில் மூதூர் பிரதேச செயலகத்தின் பிரதேச செயலாளர் எம்.பி.எம்.முபாரக், மூதூர் சுகாதார வைத்திய பணிமனை வைத்திய அதிகாரி என்.எம்.எம்.கஸ்ஸாலி, மாவட்ட செயலகத்தின் முன் பிள்ளைப்பருவ மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கே.நப்ரத் மற்றும் மூதூர் பிரதேச செயலகத்தின் முன் பிள்ளைப்பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.ஆர்.பாத்திமா ஸஸ்னா உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

## ஒரு இலட்சம் வேலைவாய்ப்புக்கான மூன்றாம் கட்ட நேர்முகப் பரீட்சை



**அக்கரைப்பற்று மத்திய நிருபர்**

ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷவின் சுபீட்சத்தின் நோக்கு தேசிய வேலைத்திட்டத்திற்கு அமைய,வறுமையற்ற இலங்கையை உருவாக்குதல் எனும் பிரதான தொனிப்பொருளின் அடிப்படையில், ஒரு இலட்சம் வேலைவாய்ப்புக்களை வழங்கும் திட்டத்தின் கீழ் அக்கரைப்பற்று பிரதேச செயலக பிரிவில் மூன்றாம் கட்ட நேர்முகப் பரீட்சை (23) நடத்தப்பட்டது. பல்நோக்கு அபிவிருத்தி செயலணித் திணைக்களத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் எம். சங்கீதன் ஒருங்கிணைப்பில் அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் எம். எஸ்.எம். றஸ்ஸானின் வழிகாட்டலில் இந்த நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டது.

அக்கரைப்பற்று பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இந்த நேர்முகப்பரீட்சையில்,49 பேர் கலந்து கொண்டனர்.

## சட்டவிரோதமாக வைக்கப்பட்ட பலகைகள் மரக்குற்றிகள் அதிகாரிகளால் மீட்பு



**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

தம்புத்தேகம பஹலகம பகுதியில் பலகைகள் மற்றும் தேக்க மரக் கட்டைகளை வைத்திருந்த நபர் கைது செய்யப்பட்டார்.

அனுமதிப்பத்திரமின்றி கொட்டகையில் இவற்றை வைத்திருந்தவரே கைது செய்யப்பட்டார்.

தம்புத்தேகம இராணுவ முகாம் உளவுத்துறை அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய தம்புத்தேகம பொலிஸார், இராணுவ உளவுத் துறை அதிகாரிகள் மற்றும் தலாவ அதிகாரிகள் இணைந்து அவ்விடத்தை முற்றுகையிட்டபோதே இவர், கைது செய்யப்பட்டார். இச்சம்பவம் (22) இல் இடம்பெற்றன. இவை, பல மாத காலம் பழமை வாய்ந்தவையென விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இங்கிருந்து 378 தேக்க மரக் கட்டைகளும் பலகைகளையும் மீட்ட அதிகாரிகள்,கொட்டகையின் உரிமையாளரையும் கைது செய்துள்ளனர்.



அநுராதபுரம் மாவட்டத்தில் காலபோக அறுவடை ஆரம்பமாகியுள்ளது. இந்நிலையில் சில தினங்களுக்கு முன்னர் பெய்த கடும் மழையால் ஏற்பட்ட சிரமங்களுக்கு மத்தியிலும் அறுவடை நடைபெறுவதைக் காணலாம். படம்: அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

# மேலும் 7 சுப்பர் கோடீஷ்வர வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் !







## உங்களின் தேசத்தின் வெற்றி

**நீங்கள் செலவிடும் சிறு தொகையான ரூ. 20 ல் வெற்றிபெற்றாலும் வெற்றிபெறவில்லை எனிலும், அது நாட்டின் வெற்றிக்கு பங்களிக்கிறது என்பது உங்களுக்குத் தெரியுமா?**

கடந்த 38 ஆண்டுகளில் ஜனாதிபதி நிதியத்திற்கு ரூ.31,445,322,472.00 நிதிபங்களிப்பும் மஹபொல புலமைப்பரீசில்கள் 325,000 மற்றும் 20,000 க்கும் அதிகமான வேலை வாய்ப்புகளை வழங்குவதற்கு சாத்தியமானது உங்களின் பங்களிப்பினாலேயாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை - இல.356, கலாநிதி கொல்வின் ஆர்,டி,சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.

BE BETTER INFORMED!
News you can trust now free on your mobile phone.
Dinamina
Daily News
Thinakaran
Visit - apps.lakehouse.lk
DOWNLOAD TODAY!
AVAILABLE AT

LAKE HOUSE

# ස්වයංපෝෂිත රටක්

නිදන් කුඹුරු අස්වද්දන ජාතික මෙහෙවර

## நாடு உருவாக்கும் சௌபாக்யா வேலைத்திட்டம்






**தேசிய ரீதியாக 21 மாவட்டங்களில் 320 கமநல சேவை நிலைய நிலப்பரப்பில் 28000 ஏக்கர் கைவிடப்பட்ட வயல் காணிகளை மீள பயிர்ச்செய்கையில் ஈடுபடுத்தும் திட்டம் ஹம்பகா மாவட்டத்தின் தொம்பே கமநல சேவை நிலைய பிரதேசத்தில் பகுறுவெல கல்வலகொட வயல் கண்டத்தில் மிக விமர்சையாக ஆரம்பிக்கப்படும்**

உலகலாவிய நிலையான அபிவிருத்தி இலக்குகளுக்கு ஏற்ப நாடு உருவாக்கும் சௌபாக்யா வேலைத் திட்டம் ஊடாக உணவு பாதுகாப்பின் ஊடாக வளமான நாட்டுக்காக கைவிடப்பட்ட வயல்காணிகளை மீளப்பயிர்ச்செய்கையில் ஈடுபடுத்தும் தேசிய ஆரம்ப விழா

கௌரவ விவசாய அமைச்சர் மஹிந்தானந்தா அலுத்கமகே அவர்கள் மற்றும் விவசாய இராஜங்க அமைச்சர் சசீந்திர ராஜபக்ச அவர்களின் தலைமையில் அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்க உத்தியோகத்தர்கள் மற்றும் விவசாய மக்களின் பங்களிப்புடன்

**2021 மார்ச் மாதம் 25ம் திகதி வியாழக்கிழமை காலை 9.52இற்கு வருகின்ற சுப நேரத்தில் ஆரம்பிக்கப்படும்.**

AGRO-S

කෘෂිකර්ම රාජ්‍ය අමාත්‍යාංශය
கமத்தொழில் இராஜாங்க அமைச்சு
State Ministry of Agriculture

ගොවිජන සංවර්ධන දෙපාර්තමේන්තුව
கமநல அபிவிருத்தித் திணைக்களம்
Department of Agrarian Development

# அறிவித்தல்

## அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் தொழில்நுட்ப சேவையில் தொழில்நுட்ப உத்தியோகத்தர் வரைபடக் கலைஞர் தரம் III பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக விண்ணப்பங்கள் கோரல்

1.0 அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிகளில் நிலவும் 03 வெற்றிடங்களுக்கும் வரைப்படக் கலைஞர் பதவிகளில் நிலவும் 01 வெற்றிடத்துக்கும் ஆட்சேர்ப்புச் செய்வதற்காக அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் அனுமதிக்கு இணங்க விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2.0 இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தினால் நடாத்தப்படும் எழுத்துப் பரீட்சையொன்றினதும், சாதாரண நேர்முகப் பரீட்சையொன்றினதும் பெறுபேறுகளுக்கு இணங்க திறமையின் அடிப்படையில் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள பரீட்சார்த்திகள், நிலவும் வெற்றிடங்களுக்கு நியமிக்கப்படுவர்.

3.0 இந்நியமனம் நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையதுமாகும். பதவிக்கு உரித்துடைய ஓய்வூதிய முறை தொடர்பில் அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு உத்தியோகத்தர்கள் கட்டுப்படுதல் வேண்டும்.

4.0 **அடிப்படைத் தகைமைகள்**

(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியில் 18 வயதுக்கு குறையாதவராகவும் 30 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

(இ) சிறந்த நடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.

(ஈ) ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் பணியாற்றுவதற்கும் பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான பொருத்தமான உடல் மற்றும் உளத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(உ) **கல்வித் தகைமைகள்**

(I) விஞ்ஞான/கணித/தொழில்நுட்ப துறைக்குரிய பௌதிகவியல், இணைந்த கணிதம், இரசாயனவியல், தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம். தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம், பொறியியல் தொழில்நுட்பவியல் ஆகிய பாடங்களில் இரண்டு பாடங்களுடன் கல்விப் பொதுத் தராதர (உ/த) பரீட்சையில் ஒரே தடவையில் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் அல்லது குறித்த துறைக்குரிய தேசிய தொழிற் தகைமை 4 (NVO 4) ஐப் பூர்த்தி செய்திருத்தல்.

அத்துடன்

(II) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சா/த) பரீட்சையில் சிங்கள தமிழ் ஆங்கில மொழி, விஞ்ஞானம், கணிதம், மற்றும் இன்னுமொரு பாடத்தில் திறமைச் சித்திகளுடன் ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் அல்லது குறித்த துறைக்கான தேசிய தொழிற் தகைமை 3 (NVQ 3) ஐப் பூர்த்தி செய்திருத்தல்.

(ஊ) **தொழிற் தகைமைகள் :**

(I) மொரட்டுவைப் பல்கலைக்கழகத்தினால் அல்லது அம்பாறை ஹாடி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா (சிவில்) அல்லது

(II) தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபையினால் வழங்கப்படும் தேசிய பொறியியல் டிப்ளோமா (சிவில்) அல்லது

(III) கல்வி மற்றும் உயர் கல்வி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளரினால் வழங்கப்படும் தேசிய உயர் பொறியியல் டிப்ளோமா (சிவில்) அல்லது

(IV) இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் தொழில்நுட்ப டிப்ளோமா (சிவில்) அல்லது

(V) இலங்கை பொறியியலாளர் நிறுவனத்தினால் வழங்கப்படும் பொறியியலாளர் பரீட்சையின் 1 ஆம் பகுதியை சிறப்பாகப் பூர்த்தி செய்திருத்தல் அல்லது

(VI) தொழில் துறைக்குரிய தேசிய தொழிற் தகைமை (NVQ) மட்டம் 06 இற்குரிய தகைமைகளைப்பூர்த்தி செய்திருத்தல் அல்லது

(VII) உயர் கல்வி அமைச்சிடமும் மேற்குறித்த தொழில்நுட்பச் சான்றிதழ்களை வழங்கும் நிறுவனங்களிடமும் விசாரித்து கருத்துக்களைப் பெற்று மேலே குறிப்பிட்ட தொழில் நுட்பத் தகைமைகளுக்கு எல்லா விதத்திலும் சமனானது என்று மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்படும் ஏனைய தொழில்நுட்பத் தகைமைகளைப் பெற்றிருத்தல்.

(எ) ஏதேனும் ஒரு சமயத் துறவியாக உள்ள எந்தவொரு ஆளும் இந்தப் பரீட்சைக்கு தோற்றுவதற்குத் தகுதிபெற மாட்டார்கள்.

(ஏ) ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பதவிக்குரிய அனைத்து தகைமைகளையும் விண்ணப்பங்கள் கோரப்படும் திகதியில் அல்லது அதற்கு முன்னர் பூர்த்தி செய்திருத்தல் கட்டாயமானதாகும்.

5.0. **சம்பளத் திட்டம் :** ரூபா 31040/- 10X445 - 11X660 - 10X730- 10X 750 - 57550/= (03/2016 ஆம் இலக்கப் பொது நிருவாகச் சுற்றறிக்கைக்கு இணங்க MN 3 - 2016 சம்பளக் குறியீடு ஏற்புடையதாகும்.)

6.0 **பரீட்சை நடைமுறைகள்**
இப்பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிமூலங்களில் நடாத்தப்படும். விண்ணப்பதாரர்கள் தமக்குரிய மொழி மூலமொன்றைத் தெரிவு செய்ய வேண்டும் என்பதுடன் பரீட்சைக்குரிய அனைத்துப் பாடங்களுக்கும் அந்த மொழி மூலத்திலேயே விடை எழுதுதல் வேண்டும். விண்ணப்பிக்கும் மொழி மூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. இப்பரீட்சை இரண்டு வினாப்பத்திரங்களைக் கொண்டதாகும்.

| வினாப்பத்திரம் பாடத்துறை | காலம் | மொத்தப் புள்ளிகள் | சித்தியடைவதற்கான புள்ளிகள் |
|---|---|---|---|
| நுண்ணறிவு | 01 மணித்தியாலம் | 100 | 40% |
| துறைசார் தொழில்நுட்ப வினாப்பத்திரம் | 03 மணித்தியாலங்கள் | 100 | 40% |


| வினாப்பத்திரத்தின் பெயர் | பாடத்திட்டம் |
|---|---|
| நுண்ணறிவு | பரீட்சார்த்தியின் தர்க்கரீதியாகச் சிந்திக்கும் ஆற்றல், பகுப்பாய்வு செய்யும் ஆற்றல், தீர்மானம் எடுக்கும் ஆற்றல், மதிப்பீடு செய்யும் ஆற்றல் என்பவற்றைச் சோதிப்பதற்கான வினாக்களைக் கொண்டிருக்கும். |
| துறைசார் தொழில்நுட்ப வினாப்பத்திரம் | கட்டட நிர்மாணக் கோட்பாடுகள், நிர்மாணிப் பணிகளுக்கான வரைபடம் தயாரிக்கும், அவற்றை வாசித்து புரிந்துகொள்ளும் ஆற்றல், மதிப்பீடுகளைத் தயாரிக்கும் ஆற்றல், நீர் வழங்கல், வடிகாலமைப்பு, நடவடிக்கைகள் மற்றும் கழிவகற்றல் செயற்பாடுகள் தொடர்பான விண்ணப்பதாரியின் அறிவை மதிப்பீடு செய்வதற்கான வினாக்களைக் கொண்டிருக்கும். |

7.0. இங்கு குறிப்பிடப்படாத ஏதேனும் விடயங்கள் இருப்பின், அவை தொடர்பில் அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரினால் தீர்மானிக்கப்படும். அனைத்து விண்ணப்பதாரர்களும் இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பொதுச் சட்டதிட்டங்களுக்கு இணங்க செயற்படுவது கட்டாயமாகும்.

2021 மார்ச் மாதம் ....... ஆம் திகதி

.........................................
(திணைக்களத் தலைவர்)

அதற்கான விண்ணப்பப் படிவமும் உரிய நிபந்தனைகளும் அரசாங்க சேவை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் www.pubad.gov.lk இணையதளத்தில் வெளியிடப்படும் என்பதுடன் அதனைப் பூர்த்தி செய்து 2021.04.10 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் அரசாங்க சேவை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, சுதந்திர சதுக்கம், கொழும்பு 07. என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

BE BETTER INFORMED! News you can trust now free on your mobile phone.
தினமின Dinamina
Daily News
தினகரன் Thinakaran

Visit - apps.lakehouse.lk
DOWNLOAD TODAY!
LAKE HOUSE
AVAILABLE AT
App Store Google play Windows Store

## போதனா வைத்தியசாலை - இரத்தினபுரி

# பெறுகை அறிவித்தல்

இரத்தினபுரி போதனா வைத்தியசாலைக்குச் சொந்தமான கீழ்க்காணும் கட்டிடங்களை நிர்மாணித்தல் மற்றும் பழுதுபார்ப்பதற்காக CIDA நிறுவனத்தில் பதிவுசெய்துள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து பிரதேச பெறுகைக் குழுவின் தலைவரால் 2021.04.21ஆம் திகதி மு.ப.10.30 வரை பொறியிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கு குறித்த பெறுகை ஆவணங்களை 2021.03.24 முதல் 2021.04.20 வரை அரச விடுமுறை தினம் தவிர்ந்த வாரத்தின் வேலை நாட்களில் மு.ப.9.00 முதல் பி.ப.3.00 வரை ஒவ்வொரு வேலை விடயங்களுக்காக மீளளிக்கப்படாத ரூ.3500.00 கட்டணத்தை காசாளர் பிரிவிற்கு செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை சமர்ப்பித்து ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்ட பெறுகை ஆவணங்களை பணிப்பாளர் பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம்.

2021.04.21 மு.ப. 10.30 இற்கு விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் இரத்தினபுரி போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் பணிமனையில் விலைமனுக்கள் திறக்கப்படுவதுடன் அவ்வேளையில் விலைமனுதாரர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம் சகல வேலை விடயத்திற்கும் பெறுகை ஆவணத்தில் குறிப்பிடப்படுமாறு அப்பெறுமதிக்கு அமைவாக விலைமனுக்கள் திறக்கப்படும் தினம் முதல் முன்வரும் 119 நாட்களுக்கு செல்லுபடியாகும் இலங்கை மத்திய வங்கியினால் செல்லுபடியாகும் நிதி நிறுவனத்திலிருந்து பெற்றுக்கொண்ட பெறுகை பாதுகாப்பு பிணை முறியொன்று அல்லது அப்பெறுமதிக்கு சமமான தொகையை (மீளளிக்கப்படும்) பிணையாக வைத்தியசாலை காசாளர் பிரிவிற்கு செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை பெறுகை ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

ஒவ்வொரு பெறுகை ஆவணமும் உள்ளிடும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் வேலை விடயத்தின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும். உங்களது விலைமனுக்கள் குறித்த தினம் குறித்த நேரத்திற்கு அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு பதிவுத்தபாலில் அனுப்பலாம் அல்லது பணிப்பாளர் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். மேலதிக விபரங்களுக்கு இல-0452222261 மூலம் கணக்காளரைத் தொடர்பு கொள்ளலாம்

| இலக்கம் | வேலை விடயம் | குறைந்தபட்ச CIDA தகைமை |
|---|---|---|
| E17/PA01/2021 | Supply and Installation of Container Box Temporary Dialysis Unit | C 6 |
| E17/PA02/2021 | Renovation of Drug Stores | C 7 |
| E17/PA03/2021 | Repairing of Damaged Roof, Roof Plumbing System, Eave ceiling and painting works in Nurses Quarters | C 7 |
| E17/PA04/2021 | Demolish and Remove the Incinerator (model BN-1000) near main Drug stores | C 9 |
| E17/PA05/2021 | Divert of Drain Water Disposal System from Drug stores Entrance gate 3 | C 7 |

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக்குழு**
**போதனா வைத்தியசாலை,**
**இரத்தினபுரி**
**2021.03.23.**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

## இலங்கை துறைமுகங்கள் அதிகார சபை (SLPA)

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

1. கீழே வழங்கப்பட்டுள்ள பொருட்களுக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கைத் துறைமுகங்கள் அதிகாரசபையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் அழைக்கின்றார்.

| கேள்வி இல. | கேள்வியின் பெயர் | விலைமனுப்-பிணைத் தொகை (ரூபா) | பெசேவ அடங்கலான ஆவணக் கட்டணம் | மூடும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CES/FP/02/PT/6129(EL) | Skew Motor for Yard Cranes | 35,000.00 | 1,000.00 | 2021.-4.27 அன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/05/PT/6173(EL) | 10 Nos. Pulse Generators for Fuji Cranes | 20,000.00 | 1,000.00 | 2021.-4.27 அன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/03/PT/6171(MP) | Main Hoist Wire Rope for Mitsui 35.5T STS Cranes | 55,000.00 | 1,000.00 | 2021.-4.27 அன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/03/PT/6176/(MP) | 24 Nos. Main Hoist Wire Ropes (Ø14MM X 85M, S-Lay and Z-Lay) for IHI RMT Crane at JCT | 16,500.00 | 1,000.00 | 2021.04.29 அன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/02/PT/6175(MP) | 30 Nos. Main Hoist Wire Rope for ZPMC RTG Cranes | 135,000.00 | 3,500.00 | 2021.04.29 அன்று மு.ப. 10 மணிக்கு |
| CMS/LP/21/PT/02/009 | Vehicle mounted terminals (VMT's) – 50 Units | 500,000.00 | 3,500.00 | 2021.04.20 அன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/21/PT/02/010 | Purchase of Container Position Detection System (PDS) for SLPA Container Yards at JCT & ECT | 1,200,000.00 | 20,000.00 | 2021.04.20 அன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/21/PT/04/051 | Spares for 45T Kone Cranes TFC45HC Reach Stackers | 45,000.00 | 1,000.00 | 2021.04.20 அன்று பி.ப. 1.30 மணிக்கு |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்படும் கேள்விகளின் மொத்த ஆகுசெலவிற்கு 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்த சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படுமென விலைமனுதாரர்கள் இத்தால் அறிவிக்கப்படுகின்றனர். இதற்கமைவாக, மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு கேள்வியிலும் ஈடுபட்டுள்ள அனைத்து சாரார்களும் ஒப்பந்தத்தின் முழுமையான காலப்பகுதியிலும் கூறப்பட்ட சட்டத்திற்கு தீவிரமாக அமைந்தொழுகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேலும், எந்தவொரு வெளிநாட்டு உற்பத்தியாளருக்காக மற்றும் அவர் சார்பாக அல்லது வழங்குநரொருவருக்கு முகவராக, உபமுகவராக, பிரதிநிதியொருவராக அல்லது பெயர் குறிப்பிடப்பட்டவராக செயற்பட விரும்பினால், அவர், பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் பதிவை மேற்கொண்டு உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை அவரது விலைமனு ஆவணங்களுடன் சமர்ப்பிக்குமாறு தேவைப்படுத்தப்படுகின்றார்.

3. ஆகக் குறைந்தது கடந்த மூன்று (3) வருடங்களில் மேலே வழங்கப்பட்டுள்ள பொருட்களுக்கு நிகரான பொருட்களை வழங்கும் வியாபாரத்தில் விலைமனுதாரர் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.

4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக விபரங்களை பிரதான முகாமையாளரிடமிருந்து (வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவம்) பெற்று அலுவலக நேரங்களில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனு ஆவணங்களைப் பரீட்சிக்கலாம்.

5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 04 ஆம் நிரலில் வழங்கப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை 2021 மார்ச் 26 ஆம் திகதியிலிருந்து வேலை நாட்களில் இறுதித் திகதிக்கு முன்னைய நாள் வரை மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரை ஆங்கில மொழியிலுள்ள விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். பணக்கொடுப்பனவு முறைமை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.

6. விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரிக்கு இறுதி நேரத்திற்கு அல்லது அதற்கு முன்னராக ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. இறுதி நேரத்தில் கீழேயுள்ள முகவரியில் நேரடியாகச் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள விலைமனுப்பிணைத் தொகையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பொருள் முகாமைத்துவம்)**
**வழங்கல்கள் பிரிவு**
**இலங்கைத் துறைமுகங்கள் அதிகாரசபை**
**இல. 45, லெய்டன் பஸ்தியன் வீதி,**
**கொழும்பு-01.**

**தொலைபேசி இலக்கங்கள் : 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
**தொலைநகல் இலக்கங்கள் : 2381652, 2470443.**

## அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1)ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் பெயர் : **நேச்சர் மிரகல் பியூட்டி கொஸ்மெட்டிகல் (பிவீடி) எல்டிடீ**
பதிவிலக்கம் : **PV 00234705**
கூட்டிணைப்புத் திகதி : **2021.02.12**
பதிவு முகவரி : **இல.40, துருனுசவிகம, பல்லேகல, குண்டசாலை**

**பணிப்பாளர் சபை**

## அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1)ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் பெயர் : **த்ரீ ஸ்டார் ட்ரிங்கிங் பொட்ல்ட் வோட்டர் (பிவீடி) எல்டிடீ**
பதிவிலக்கம் : **PV 00235260**
கூட்டிணைப்புத் திகதி : **2021.02.21**
பதிவு முகவரி : **இல.44, மஹபத்தன, ஹரஸ்பெத்த, வலபனே**

**பணிப்பாளர் சபை**

## அற்றோணித்தத்துவத்தை இல்லாதொழித்தல்

பயாகல, குடா பயாகல, காலி வீதி, 111/1 ஆம் இலக்க ''கைத்தன் நிவச'' என்ற முகவரியைச் சேர்ந்த பயாகல, பதுகே டொன் அந்தோணி ஷிரான டிலேந்திர ஆகிய நான், 2007.07.25 ஆம் திகதியிடப்பட்டதும் தெஹிவளை, நெதிமால, ரூபசிங்ஹ மாவத்தை, 6B என்ற முகவரியைச் சேர்ந்தவரும் 748030026V என்ற இலக்கமுடைய தேசிய அடையாள அட்டையைக் கொண்டவருமான பயாகல, பதுகே டோனா மேரி அன்ரநெட் இந்திரா என்பவருக்கு என்னால் வழங்கப்பட்ட மேற்கூறப்பட்ட அற்றோணித்தத்துவமானது 2021.03.25 ஆம் திகதியிலிருந்து செயல்வலுப்பெறும் வகையில் இல்லாதொழிக்கப்பட்டு இரத்துச் செய்யப்பட்டுள்ளதெனவும் மேற்கூறப்பட்டுள்ள பயாகல, பதுகே டோனா மேரி அன்ரநெட் இந்திராவிற்கு எமது அற்றோணித்தத்துவக்காரராக செயற்படும் எந்தவொரு செயற்பாடு அல்லது நடவடிக்கைக்கும் நான் பொறுப்பேற்க மாட்டேன் என இத்தால் பொது மக்களுக்கு அறியத் தருகின்றேன்.

**பயாகல பதுகே டொன் அந்தோணி ஷிரான டிலேந்திர**
**2021.03.25**

## அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1)ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் பெயர் : **லீட்ஸ் ஹெல்த்கெயார் இன்டர் நெஷனல் (பிவீடி) எல்டிடீ**
பதிவிலக்கம் : **PV 00232953**
கூட்டிணைப்புத் திகதி : **2021.01.11**
பதிவு முகவரி : **இல.520, பலகொல்ல, கொங்கல்ல**

**பணிப்பாளர் சபை**

## பெயர் மாற்றம்

ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் சரீப் சேர்மன் வீதி, மீராவோடை மேற்கு என்னும் விலாசத்தில் வசிக்கும், உதுமாலெப்பை ஹம்ஸியா ஆகிய எனது பிறப்பு சான்றிதழில் "ரம்ஸியா" என்று வைக்கப்பட்டுள்ளது. எனது பிள்ளைகளின் பதிவுகளில் ஹம்ஸியா என்று உள்ளதாலும், என்னை எனது உறவினர்கள், நண்பர்கள் ஹம்ஸியா என்று அழைப்பதால் எனது அனைத்து ஆவணங்களிலும் ஹம்ஸியா என்று மாற்றவுள்ளேன் என இத்தால் இலங்கை அரசுக்கும் பொது மக்களுக்கும் தெரியப்படுத்துகிறேன்.

**பாத்திமா றிஸானா**

## பெயர் மாற்றம்

இல.120 காந்திநகர், திருகோணமலையில் வசிக்கும் முஹமட் மாஹிர் ஷாஹிரா (968461010V) ஆகிய நான் இன்று முதல் எனது பெயரை மாதவன் ஷிரோமி என்று மாற்றிக் கொள்கிறேன் என்பதை இலங்கை மக்களுக்கும் இலங்கை அரசாங் கத்திற்கும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## பெயர் மாற்றம்

கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் பிரிவில் மைப் பள்ளி வீதி, கொண்டையன்கேணி என்னும் விலாசத்தில் வசிக்கும் பாத்திமா றிஸானா ஆகிய நான் கடந்த 2018ம் ஆண்டு புனித இஸ்லாத்தைத் தழுவிக் கொண்டு மனோகரன் ஜனனி என்ற எனது பெயரை பாத்திமா றிஸானா என்று மாற்றியுள்ளேன். அன்று முதல் எனது சகல ஆவணங்களிலும் பாத்திமா றிஸானா என்று ஒப்பமிட்டு வருகின்றேன். என்பதனை இத்தால் இலங்கை அரசுக்கும் பொது மக்களுக்கும் அறியத்தருகிறேன்.

**பாத்திமா றிஸானா**

## அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2)ஆம் பிரிவின் கீழ், கீழ்க்காணும் கம்பனி, 2021 மார்ச் 19 முதல் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என இத்தால் அறிவித்தல் வழங்கப்படுகின்றது.

கம்பனியின் பழைய பெயர்:
**3W எக்ஸ்பிரஸ் (பிறைவட்) லிமிட்டட்**

கம்பனியின் புதிய பெயர்:
**ஆர் பீ எக்ஸ் மெக் எக்ஸ்பிரஸ் (பிறைவட்) லிமிட்டட்**

கம்பனி இலக்கம்:
**பீவீ 86816**

பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி:
**"தி வேவட்ரீ", 141/9, வொக்ஸ்ஹோல் வீதி, கொழும்பு - 02**

**குழுவின் ஒழுங்கு மூலம்,**
**நிமாலி காரியவசம்,**
**நிறுவனத்தின் செயலாளர்**

Repeat
Your
Ad
For
Better
Offers

## களனிப் பல்கலைக்கழகம் - இலங்கை

# வெற்றிடங்கள்

**கீழ்க்காணும் பதவிக்கான விண்ணப்பங்கள் 2021.04.20ஆம் திகதி வரை என்னால் ஏற்கப்படும்**

**மருத்துவபீடம்**

1. **சத்திரசிகிச்சை கற்கைப்பிரிவு**
   **விரிவுரையாளர் (பயிலுநர்)/விரிவுரையாளர் (சேவையை உறுதி செய்யாத)/ சிரேஷ்ட விரிவுரையாளர் II/I**
2. **குடும்ப வைத்திய கற்கைப் பிரிவு**
   **விரிவுரையாளர் (பயிலுநர்)/விரிவுரையாளர் (சேவை உறுதி செய்யாத)/ சிரேஷ்ட விரிவுரையாளர் II/I**

விண்ணப்பிக்கும் முறை :
இப்பதவிக்காக குறித்த விண்ணப்பங்கள் மற்றும் விபரங்களை அலுவலக நேரங்களில் பிரதிப் பதிவாளர்/நிறுவனக் கல்வி இடம் பெற்றுக்கொள்ளலாம். அவ்வாறே இணையத்தளத்தில் www.kln.ac.lk பல்கலைக்கழக இணையத்தளத்திற்கு பிரவேசித்து குறித்த விண்ணப்பம் மற்றும் தகவல்களை பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்கள் மற்றும் விபரங்களை தபாலில் பெற்றுக் கொள்வதற்கு தேவையாயின் அதற்காக வேண்டுதலுடனான கடிதம் எழுதிய முத்திரையுடனான, 23X10 செ.மீ. அளவான உறையொன்றை அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்பதாரர்களால் ஒவ்வொரு பதவிக்கும் வேறு வேறாக விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டியதுடன், விண்ணப்பங்களை குறித்த சான்றிதழ்களின் பிரதிகளுடன் 2021.04.20ஆம் திகதி அல்லது அதற்கு முன் பிரதிப் பதிவாளர், நிறுவனக் கல்வி, களனிப் பல்கலைக்கழகம், களனி என்ற முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்கள் உள்ளிட்டு அனுப்பப்படும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடுதல் வேண்டும். பூர்த்தியற்ற, தெளிவற்ற அல்லது தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

அரச கூட்டுத்தாபனம், நியதிகள் சபை, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி நிறுவனங்களின் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை நிறுவன தலைமையூடாக சமர்ப்பித்தல் வேண்டும். தேவைப்படின் தகைமையின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகளை மட்டும் நேர்முகத் தேர்விற்கு அழைப்பதற்கு பல்கலைக்கழகத்திற்கு நடவடிக்கை எடுக்கலாம்.

**பதிவாளர்**
**களனி பல்கலைக்கழகம்**
**களனி**
**2021.03.25**

## வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, மின்சாரம் மற்றும் சக்திவலு, வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சு - மத்திய மாகாணம்
## மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை

### அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனத்தில் நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான செழிப்பான நோக்கில் காட்டப்பட்டுள்ள 100000 கி.மீ. மாற்று வீதி முறைமைகளைச் செயற்படுத்துதல்

மத்திய மாகாண சபையின் வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, மின்சாரம் மற்றும் சக்திவலு, வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சின் பெறுகைக் குழுத் தவிசாளரினால் கண்டி, மாத்தளை, நுவரெலியா போன்ற மாவட்டங்களில் அமைந்துள்ள கீழே காட்டப்பட்டுள்ள மாகாண வீதிகளுக்கு நீளம் மற்றும் குறுக்கு வெட்டு திட்ட வரைபடங்களைத் தயாரிப்பதற்காக பின்வரும் நிறைவேற்றுப் பொறியியலாளர் பிரிவுகளை உள்ளடக்கும் வகையில் 11 ஒப்பந்தப் பொதிகளின் கீழ் தகைமை வாய்ந்த பட்டதாரி நில அளவையாளர்கள் அல்லது காணி அளத்தல் சபையில் பதிவு செய்து அனுமதிப்பத்திரம் பெற்ற நில அளவையாளர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொ. இல | ஒப்பந்த இலக்கம் | நிறைவேற்றுப் பொறியியலாளர் பிரிவு | வீதியின் பெயர் | கீ. மீ. | கேள்விப் பிணை முறி (செல்லுபடியாகும் கால எல்லை 120 நாட்கள்) | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | ரொக்கப் பணமாக | வங்கிப் பிணை முறியாக |
| **கண்டி மாவட்டம்** | | | | | | |
| 1 | MORH/PRDA/LBRRP/CP/KY/2020/P2/SVY | | மல்கம்மன – முருத்தலாவ வீதியின் அளவை வேலைகள் (0+000 - 4+100 km) | 2.88 | 5,000.00 | 10,000.00 |
| 2 | MORH/PRDA/LBRRP/CP/KY/2020/P3(QA)/SVY | கண்டி | கன்னொருவ – முருத்தலாவ வீதியின் அளவை வேலைகள் (0+000 - 4+100 km) | 4.10 | 7,000.00 | 14,000.00 |
| 3 | MORH/PRDA/LBRRP/CP/KY/2020/P4(QA)/SVY | | கிரிபத்கும்புர - தியபலகொட வீதியின் அளவை வேலைகள் (2+925 -5+785 km) | 3.20 | 5,500.00 | 11,000.00 |
| 4 | MORH/PRDA/LBRRP/CP/KY/2020/P1(QA)/SVY | கம்பொல | மாவதுர கல்தர தெல்பிட்டிய வீதியின் அளவை வேலைகள் (6+500- 10+500 km) | 4.00 | 6,500.00 | 13,000.00 |
| 5 | MORH/PRDA/LBRRP/CP/KY/2020/P5/SVY | குண்டசாலை | யக்கஹபிட்டிய நெலும்பத்தின தேவாலகம்மெத்த வீதியின் அளவை வேலைகள் (0+000 - 2+250 km) | 2.25 | 4,000.00 | 8,000.00 |
| 6 | MORH/PRDA/LBRRP/CP/KY/2020/P6/SVY | | Survey works on Malpana Kengalla Road (0+000 - 2+320 km) | 2.32 | 4,000.00 | 8,000.00 |
| **மாத்தளை மாவட்டம்** | | | | | | |
| 7 | MORH/PRDA/LBRRP/CP/MTL/2020/P3(QA)/SVY | மாத்தளை | ஓவில்கந்த அங்கும்புர வீதியின் அளவை வேலைகள் (0+000 - 2+100 km) | 3.32 | 5,000.00 | 10,000.00 |
| 8 | MORH/PRDA/LBRRP/CP/MTL/2020/P2(QA)/SVY | | சாலகம - ருசிகம வீதியின் அளவை வேலைகள் (0+000 - 2+316 km) மற்றும் சாலகம – புளத்வத்த டெம்பள் (0+000 - 0+060km) வீதிகளின் அளவை வேலைகள் | 2.38 | 3,500.00 | 7,000.00 |
| 9 | MORH/PRDA/LBRRP/CP/MTL/2020/P1/SVY | நாஉல | இலுக்கும்புர – மஹல்கொடுவ வீதியின் அளவை வேலைகள் (0+000 - 3+320km) | 2.08 | 3,000.00 | 6,000.00 |
| **நுவரெலியா மாவட்டம்** | | | | | | |
| 10 | MORH/PRDA/LBRRP/CP/NE/2020/P1(QA)/SVY | திம்புள்ள | அக்ராஸ் போபத்தலாவ வீதியின் அளவை வேலைகள் (0+000 - 10+500 km) | 10.50 | 14,500.00 | 29,000.00 |
| 11 | MORH/PRDA/LBRRP/CP/NE/2020/P2(QA)/SVY | ராகல | டன்சினன் வீதியின் அளவை வேலைகள் (4+200-6+575km), (6+575-10+300km), (12+717-15+430km) | 8.81 | 12,500.00 | 25,000.00 |

கவனிக்கவும்:

01. இதில் ஆர்வம் காட்டும் கேள்விதாரர்கள் 2021-04-12ஆம் திகதிக்கு முன் பொது முகாமையாளர், மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பெயரில் வீதியின் பெயர், ஒப்பந்த இலக்கம் மற்றும் கேள்விப் படிவங்களை அனுப்புவதற்குத் தேவையான மின்னஞ்சல் முகவரியை தெளிவாகக் குறிப்பிட்டு வேண்டுகோள் கடிதம் மற்றும் பட்டதாரி நில அளவையாளர் அல்லது காணி அளத்தல் சபையில் பதிவு செய்துள்ள உத்தரவுபெற்ற நில அளவையாளர் என்பதை உறுதி செய்வதற்குத் தேவையான ஆவணங்களின் பிரதியை **cpprda.survey@gmail.com** எனும் மின்னஞ்சல் முகவரிக்கும் மற்றும் பொது முகாமையாளர், மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை, இல. 09, எஹெல்லெபொல குமாரிஹாமி மாவத்தை, கண்டி எனும் முகவரிக்கு அனுப்புவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.
02. இயைபுடைய வேண்டுகோள் கடிதங்களை ஏற்றுக்கொள்ளல் 2021-04-12ஆம் திகதி நிறைவுறும் என்பதுடன் கேள்விப் படிவங்களை விண்ணப்பிக்கும் ஒப்பந்த நிறுவனத்திற்கு 2021-03-25ஆம் திகதி முதல் 2021-04-19ஆம் திகதி வரையான அரச சேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான அலுவலக நேரத்தினுள் இயைபுடைய கேள்விப் படிவங்களின் மென் பிரதி (Soft copy) உங்களால் குறிப்பிடப்பட்டும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்படும் என்பதுடன் நீங்கள் கேள்விப் படிவங்களின் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியாக 02 மென் பிரதிகளை (Soft copy) பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.
03. கேள்விப் படிவங்களில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின் பிரகாரம் முறையாகப் பூர்த்தி செய்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விகளை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி என வெவ்வேறு உறைகளிலிட்டு அவ்விரு உறைகளையும் ஒரு உறையிலிட்டு தலைவர், பெறுகைக் குழு, வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, மின்சக்தி, சக்திவலு மற்றும் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சு, 109, யடிநுவர வீதி, கண்டி எனும் முகவரிக்கு 2021-04-21ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பியோ அல்லது இக்காரியாலயத்தில் இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிட்டோ கேள்விகளைச் சமர்ப்பிக்கலாம்.
04. கேள்விகளைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் இயைபுடைய வீதிக்குரித்தான ஒப்பந்த இலக்கத்தையும் வீதியின் பெயரையும் தெளிவாகக் குறிப்பிடவும். கேள்விகள் ஏற்கப்பட்டு முடிவடைந்த உடனடுத்து கேள்விகள் திறக்கப்படுமென்பதுடன் அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது கேள்விதாரரின் அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்து கொள்வதற்கு அனுமதி வழங்கப்படும்.
05. தேவையான மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தினுள் கண்டி, இல. 09, எஹலபொல குமாரிஹாமி மாவத்தை, மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை, பொது முகாமையாளரிடம் பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி: 081-3159004, 081-3159905)

மேலும் எந்தவொரு கேள்வியை அல்லது எல்லாக் கேள்விகளையும் காரணம் காட்டாமல் நிராகரிக்கும் உரிமையை பெறுகைக் குழுவின் தலைவர் தன்னகத்தே கொண்டுள்ளார்.

**தலைவர்,**
**வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, மின்சக்தி,**
**சக்திவலு மற்றும் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சு,**
**109, யடிநுவர வீதி, கண்டி.**

இலங்கை சனநாயக சோசலிச குடியரசு
நெடுஞ்சாலைகள் அமைச்சு
வீதி அபிவிருத்தி அதிகாரசபை

## விலை மனுக்கோரல் (IFB)

01. வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வழங்கல் குழு தலைவரினால் வீதி அபிவிருத்தி அதிகார சபை சார்பாக கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத்திட்டத்திற்கான தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றது.

| ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்தத்தின் பெயர் | பொறியியலாளர்களின் மதிப்பீட்டுத் தொகை (மேலதிக செலவுகளற்ற) ரூ. மில்லியன் | CIDA தரம் | மனு காப்புறுதிப் பிணைத் தொகை (ரூ.மில்லியன்) | ஒப்பந்த காலம் (நாட்கள்) |
|---|---|---|---|---|---|
| RDA/DC/CP/IR-GOSL/2021/46 | கண்டி வில்லியம் கோபல்லாவ மாவத்தை (1+600 km-2+900-km) அகலபடுத்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல் | 388.0 | C1 அல்லது C2 | 4.8 | 364 |
| RDA/DC/CP/IR-GOSL/2021/47 | கண்டி வில்லியம் கோபல்லாவ மாவத்தை (2+900 km-2+900-km) அகலபடுத்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல் | 278.0 | C1 அல்லது C2 | 4.1 | 364 |

02. இச் செயற்திட்டம் துணை அடித்தளம் இடுதல், அடித்தளம் இடுதல், தடுப்புச்சுவர் அமைத்தல், அஸ்போல்ட் (Asphalt) தார் இடுதல் மற்றும் வேறு பல கட்டுமான வேலைகளை கொண்டுள்ளது.
03. மனுகோரல்கள் தேசிய மனு கோரல் போட்டி முறைக்கமைய நடைபெறும்.
04. ஒப்பந்தத்திற்கு தகுதியுடையவர்களாவதற்கு மனுதாரர்கள் கட்டுமான கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் (CIDA) தரத்தில் **நெடுஞ்சாலைகள்துறையில்** நிபுணத்துவத்திற்கு அமைய பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.
05. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் மேலதிக விபரங்களை கீழ் குறிப்பிடப்பட்டுள்ள காரியாலயங்களில் பெற்றுக் கொள்ளக்கூடியதுடன், மனு ஆவணங்களை **www.rda.gov.lk** எனும் இணையத்தளத்திலிருந்து **2021.03.26** ஆம் திகதி முதல் பெற்றுக்கொள்ளலாம்.

    செயற்திட்ட பணிப்பாளர் (மத்திய மகாணம்)
    வீதி அபிவிருத்தி அதிகார சபை,
    கண்டி.
    தொலைபேசி: 081-2252119

    பணிப்பாளர் (கட்டுமானம்)
    வீதி அபிவிருத்தி அதிகார சபை,
    மூன்றாம் மாடி, "மஹாநெகும மஹா மெதுர" 216, டென்சில் கொபேகடுவ மாவத்தை,
    பத்தரமுல்லை
    தொலைபேசி:- 011-2864388 மற்றும் பெக்ஸ்:- 011-2861821

06. மனு தொடர்பான கூட்டம் **2021.04.06** ஆம் திகதி **மு.ப.10.00** மணிக்கு **மாகாணப் பணிப்பாளர் (மத்திய மகாணம்) வீதி அபிவிருத்தி அதிகாரசபை, கண்டி** காரியாலயத்தில் இடம்பெறுவதுடன் தேவையேற்படின் வேலைத்தள பரீட்சிப்பும் இடம்பெறும்.
07. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் **2021.03.26** ஆம் திகதியிலிருந்து **2021.04.22** ஆம் திகதி வரை **09.00 மணியிலிருந்து 15.00 மணி** வரையான காலப்பகுதியினுள் எழுத்து மூல விண்ணப்பத்தை **மாகாணப் பணிப்பாளர், (மத்திய மாகாணம்) வீதி அபிவிருத்தி அதிகாரசபை, கண்டி அல்லது பத்தரமுல்லை, டென்சில் கொபேகடுவ மாவத்தையில் அமைந்துள்ள வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு உரித்தான "மகநெகும மஹமெதுர" 3 வது மாடியில் அமைந்துள்ள பணிப்பாளருக்கு (கட்டுமானம்)** மீள் செலுத்தப்படாத கட்டணத்துடன் சமர்ப்பிப்பதன் மூலம் அச்சிடப்பட்ட ஆங்கில மொழியிலான விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ள முடியும்.

    மீளச்செலுத்தப்படாத **ரூபா.37,800/- (வட் வரி உள்ளடங்களான)** கட்டணத்தை கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கணக்கிலக்கத்திற்கு செலுத்துதல் வேண்டும்.

    **அ. கணக்கின் பெயர் : பொது முகாமையாளர்- RDA**
    **ஆ. கணக்கு இலக்கம் : 0000001943**
    **இ. வங்கி : இலங்கை வங்கி - பெருநிறுவன கிளை**

    1987 இலக்கம் 03 ஒப்பந்த சட்டத்தின் கீழ் பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்படும் மனுதாரர்கள் மட்டும் நிறுவன பதிவாளர் திணைக்களத்தில் குறித்த மனுவுக்கு பதிவு செய்யப்படல் வேண்டும்.

08. அனைத்து மனுக்களும், **2021.08.20** ஆம் திகதி வரை செல்லுபடியாகும் காப்புறுதிப்பிணையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
09. பூரணப்படுத்தப்பட்ட மனு ஆவணங்களை பிரதிகளுடன் **2021.04.23** ஆம் திகதி **14.00** மணித்தியாலங்களுக்கு முன் **தலைவர், அமைச்சரவையின் வழங்கல் குழு, நெடுஞ்சாலைகள் அமைச்சு, வழங்கல் குழு, 07 ஆம் மாடி, "மகநெகும மஹமெதுர" டென்சில் கொபேகடுவ மாவத்தை, பத்தரமுல்லை** எனும் முகவரிக்கு கொண்டு வந்து கையளிக்கப்படல் வேண்டும். காலம் தாழ்த்தி கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மனு கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுக்கள் மனுதாரர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
10. மனுக்கள் **2021.07.23** ஆம் திகதி வரை செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும்.
11. ஒவ்வொரு தொகுப்புக்கும் தனி ஏலச்சீட்டு தொகுப்புகள் வழங்கப்படும். மனுதாரர் ஒன்றுக்கு மேற்பட்ட தொகுப்புகளுக்கு ஏலம் எடுத்தால், அது ஒன்றுக்கு மேற்பட்ட தொகுப்புகளுக்கான வெற்றிகரமான முயற்சியாக இருந்தால் (குறைந்தபட்சம், அடிப்படையில் பதிலளிக்கக்கூடியது) வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் (அ) சராசரி ஆண்டு வருவாய் (ஆ) அடிப்படையில் ஒட்டுமொத்த உடற்பயிற்சி தேவைகளை பூர்த்தி செய்யும் திறனை மதிப்பீடு செய்கிறது. திரவ சொத்துக்களின் மதிப்பு மற்றும் வீதி அபிவிருத்தி அனைத்து நன்மை பயக்கும் மற்றும் பொருளாதார ரீதியாக சாதகமான தொகுப்புகளின் மிகக் குறைந்த கலவையானது கணக்கிடப்பட்டு வெற்றிகரமான மனுதாரர்களுக்கு ஏலம் எடுக்க பரிந்துரைகள் செய்யப்படுகின்றன.

**தலைவர்,**
**அமைச்சின் வழங்கல் குழு,**
**நெடுஞ்சாலைகள் அமைச்சு,**
**வழங்கல் பிரிவு,**
**07 ஆம் மாடி, 'மகநெகும மஹமெதுர', டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்லை.**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## உள்ளூராட்சி திணைக்களம்

1. கீழேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள செயற்றிட்டங்களுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து வட மத்திய மாகாண உள்ளூராட்சி திணைக்களத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர், முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கோருகின்றார்.

2. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் மூலம் நடாத்தப்படும். இந்த பெறுகையின் கீழ் நிறைவேற்றப்படவுள்ள வேலையின் மதிப்பீடு செய்யப்பட்டுள்ள பெறுமதியானது (பெ.சே.வ. மற்றும் ஏனைய வரிகள் நீங்கலாக) 50 மில்லியனுக்கு குறைவாகவிருப்பதனால், 04/2016 (ii) என்ற அரச நிதி சுற்றறிக்கையில் நிர்ணயிக்கப்பட்டுள்ளவாறு பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தர முன்னுரிமை ஆகியன பிரயோகப்படுத்தப்படும்.

3. ஒப்பந்தத்தைப் பெறுவதற்காக, வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் கீழேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறான CIDA பதிவை பூர்த்தி செய்தல் வேண்டும்.

4. ஒப்பந்தத்தை வழங்குவதற்கான தகைமையைப் பெறுவதற்கான தகைமை தேவைப்பாடுகள் பின்வருமாறு: கடந்த தொடர்ச்சியான ஐந்து வருடங்களில் 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்பட்ட நிகரான தன்மையுள்ள கட்டிட வேலையை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருப்பதுடன், கடந்த ஐந்து வருடங்களில் நிகரான மூன்று செயற்றிட்டங்களில் ஈடுபட்டிருந்த (NCT Civil/NVQ 5) தொழில்நுட்ப அலுவலரொருவரையும் பணியில் ஈடுபடுத்தியிருத்தல்.

5. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை அனுராதபுரம், ஹரிஸ்சந்திர மாவத்தை, மாகாண சபை அலுவலக கட்டிடத்தொகுதி, உள்ளூராட்சித் திணைக்கள ஆணையாளரிடமிருந்து (தொலைபேசி இல.: 025-2234728. தொலைநகல்: 025-2234728. மின்னஞ்சல்: info@lgd.nc.gov.lk) பெற்று, விலைமனுக்கோரல் ஆவணங்களை கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் மு.ப. 8.30 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் பரீட்சிக்கலாம்.

6. 2021 மார்ச் 23 ஆம் திகதியிலிருந்து 2021 ஏப்ரல் 19 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக 3,500 ரூபாவைச் செலுத்திய பின்னர், அனுராதபுரம், ஹரிஸ்சந்திர மாவத்தை, மாகாண சபை அலுவலக தொகுதி, உள்ளூராட்சி திணைக்கள ஆணையாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.

7. விலைமனுக்கள் இரு பிரதிகளில் கீழேயுள்ள முகவரியில் 2021 ஏப்ரல் 20 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் அவைகளை மூடிய பின்னர் விரைவாகவே திறக்கப்படும்.

8. விலைமனுக்கள் 2021.07.06 ஆம் திகதி வரையும் 77 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

| இல. | பணி விளக்கம் | மதிப்பீடு செய்யப்பட்டுள்ள ஆகுசெலவு (ரூபாவில்) | ஒப்பந்தக் காலப்பகுதி | தேவைப்படும் தரம் | தேவைப்படும் விலைமனுப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணைத் தொகை | செல்லுபடி யாகும் காலப்பகுதி |
| 01. | கல்நேவ பிரதேச சபையின் கல்நேவவில் கடைத் தொகுதியின் நிர்மாணம் (மீதி வேலை) ii ஆம் கட்டம் | 8.00 மில்லியன். | 180 நாட்கள் | கட்டிட நிர்மாணத் திற்காக சி-7- சி-6 | 80,000.00 | 2021.08.03 ஆம் திகதி வரையும் |
| 02. | கல்நேவ பிரதேச சபையில் ஒத்தபாஹுவவில் கலி (GULLY) சுத்திகரிப்பு பொறித்தொகுதியின் நிர்மாணம் | 9.00 மில்லியன் | 180 நாட்கள் | கட்டிட நிர்மாணத் திற்காக சி-7- சி-6 | 90,000.00 | 2021.08.03 ஆம் திகதி வரையும் |
| 03. | ஹொரவபொத்தான பிரதேச சபையில் கடைத் தொகுதியின் நிர்மாணம் | 6.00 மில்லியன் | 180 நாட்கள் | கட்டிட நிர்மாணத் திற்காக சி-7- சி-6 | 60,000.00 | 2021.08.03 ஆம் திகதி வரையும் |

**தலைவர்,**
**உள்ளூராட்சி திணைக்களம்,**
**மாகாண சபை கட்டிடத்தொகுதி (தரை மாடி),**
**ஹரிஸ்சந்திர மாவத்தை,**
**அனுராதபுரம்.**
**22.03.2021.**

**தனியார் பெருந்தோட்ட சீர்திருத்தங்கள், தேயிலை மற்றும் இறப்பர் பெருந்தோட்டங்கள் தொடர்பான பயிர்கள், பயிர்ச்செய்கை மற்றும் தொழில்சாலைகள் நவீனமயமாக்கல் மற்றும் தேயிலை மற்றும் இறப்பர் ஏற்றுமதி ஊக்குவித்தல் இராஜாங்க அமைச்சு**

## இறப்பர் அபிவிருத்தி திணைக்களம்

# பொலித்தீன் பைகளின் வழங்கலுக்கான விலைமனுக்களுக்கான அழைப்பு

### Bid No.: P/08/02/2021/01

1. பின்வரும் பொலித்தீன் பைகளின் வழங்கலுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் (உயர் மட்டம்) தலைவர் இப்போது கோருகின்றார்.

| உருப்படி இலக்கம் | பொலித்தீன் பைகள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | 7”x18” Gauge 500 | 1,220,000 |
| 2 | 6”x15” Gauge 300 | 2,290,000 |

2. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் முறைமை மூலம் நடாத்தப்படும்.

3. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை வார நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் பத்தரமுல்ல, காணஹேன, 465 ஆம் இலக்க இறப்பர் அபிவிருத்தி திணைக்கள அபிவிருத்தி மற்றும் **ICT** இற்கான பணிப்பாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

4. விலைமனுக்களுக்கான அழைப்பில் பொலித்தீன் பைகளின் அனைத்து உற்பத்தியாளர்கள்/ வழங்குநர்களும் பங்கு பெறலாம்.

5. 2021.03.25 ஆம் திகதியிலிருந்து 2021.04.16 ஆம் திகதி வரையும் மு.ப. 10 மணிக்கு முன்னராக, மீளளிக்கப்படாத கட்டணமான 1000 ரூபாவைச் செலுத்திய பின்னர் கீழேயுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கொள்வனவு செய்யப்படலாம்.

6. 2021.04.19 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் விலைமனுக்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். 2021.04.19 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு கீழேயுள்ள முகவரியில் சமுகமளித்திருக்கும் உரித்தான விலைமனுதாரர் அல்லது அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்களை மூடிய பின்னர் உடனடியாகவே அவைகள் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் புகழ்வாய்ந்த வர்த்தக வங்கியொன்றிலிருந்து பெறப்பட்டதும் 339,350 ரூபா பெறுமதியானதுமான விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப்பிணையின் செல்லுபடியாகும் காலப்பகுதியானது நான்கு (04) மாதங்களாகும்.

7. மேலே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள முகவரி பின்வருமாறு:


**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (உயர்மட்டம்),**
**இறப்பர் அபிவிருத்தி திணைக்களம்,**
**465, காணஹேன, கடுவெல வீதி,**
**பத்தரமுல்ல.**

**தொலைபேசி இலக்கங்கள்: 011-2889446/011-2889447**
**தொலைநகல் இலக்கம்: 011-2889484**


## சிறு விளம்பரம்

மோட்டார் வாகனங்கள்







**கார்கள்**
**விற்பனைக்கு**

WP CAE-9070 Subaru, 2013, car கூடிய விலைக் கோரிக்கைக்கு . வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ. பே. 071 454 2958.
022774

BE BETTER INFORMED!




News you can trust now free on your mobile phone.

Dinamina Daily News Thinakaran

VISIT apps.lakehouse.lk

DOWNLOAD TODAY!

AVAILABLE AT

LAKE HOUSE

The Housewives’ companion
Classifieds on
Daily News


# விலைமனுக் கோரல்

ලංකා විදුලිබල මණ්ඩලය
இலங்கை மின்சார சபை
CEYLON ELECTRICITY BOARD

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|
| பிராந்தியம் | கேள்வி இல. பொருட்களது விபரம் - தொகை | விலைமனு கோரல் முடிவுத் திகதி | விலைமனு ஆவணம் பெறும் இடமும் தொ.பே. இலக்கமும் | விலைமனு ஆவண விலை (ரூபா) | கேள்வி விபரம் ICB/NCB |
| **சேவைகள்** | | | | | |
| பிராந்தியம்-02 கிழக்கு | DGM(E)/QPPC/21/111<br>வாடகைக்கு வான் மின் அத்தியட்சகர் (அலுவலகம்) - மட்டக்களப்பு<br>(இரண்டு வருட காலம்) | 07-04-2021ம் திகதி பி.ப.2.00 மணி | பிரதேச பிரதம மின் பொறியியலாளர் அலுவலகம் (மட்டக்களப்பு)<br>065-2222639<br>அல்லது<br>பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை<br>026-2222666<br>026-2221030 | 1000.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | DGM(E)/QPPC/21/112<br>வாடகைக்கு மோட்டார் கார் /டபிள்கப் பிரதம மின் பொறியியலாளர் (சக்தி முகாமைத்துவம்)- கிழக்கு<br>(இரண்டு வருட காலம்) | 07-04-2021ம் திகதி பி.ப.2.00 மணி | பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை<br>026-2222666<br>026-2221030 | 1000.00 | NCB |

மேற்குறித்த பொருட்கள் வழங்கப்படல் தொடர்பாக வழங்குதாரர்களிடமிருந்து இலங்கை பிராந்தியம்-02 மின்சார சபை சார்பாக கொள்வனவுக்குழுவின் தலைவர் சர்வதேச/தேசிய போட்டித்தன்மையுடன் கூடியதான விலைமனுக்களைக் கோருகின்றார். இலங்கை மின்சார சபையிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ஆவணங்களில் மாத்திரமே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

விலைமனுக்கோர உத்தேசித்திருப்பவர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற முகவர்களுக்கு மாத்திரமே விலைமனு ஆவணங்கள் விநியோகிக்கப்படும். தேவைக்கேற்ப அவர்கள் 1987ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டத்திற்கேற்ப பதிவு செய்து கொள்ளல் வேண்டும்.

விலைமனுக்கோரல் முடிவுத் திகதிக்கு இரண்டு தினங்கள் இருக்கும் வரை விலைமனு ஆவணங்கள் விலைமனுக்கோர உத்தேசித்திருப்பவர்கள் அல்லது அவர்களது முகவர்கள் மூலம் உரித்தான முறையில் இலங்கை மின்சார சபையின் பிரதிப் பொது முகாமையாளருக்கு/ பிரதம பொறியியலாளருக்கு எழுத்துமூலமாக விண்ணப்பித்து 5ஆம் கூட்டில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை வழங்குவதன் மூலம் கடமை நாட்களில் 09.00 மணி முதல் 15.00 மணி வரையிலான காலப்பகுதிக்குள் ஆவணங்கள் பெற்றுக்கொள்ளலாம். பணமாகவோ இலங்கை மின்சார சபை பொது முகாமையாளர் சார்பாக வரையப்பட்ட வங்கி வரைவுப் பத்திரம் ஒன்றின் மூலமாகவோ கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படலாம்.

எழுத்துமூலமான விண்ணப்பமொன்றின் அடிப்படையில் வெளிநாட்டுத் தூதரகங்கள்/வர்த்தக ஆணைக்குழுக்கள் என்பன இலவசமான முறையில் விலைமனுக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். இ.மி. சபையின் உரித்தான பி.பொ.மு/பிரதம பொறியியலாளர்களது அலுவலகங்களில் வைத்து உத்தேச விலைமனுதாரர்களினாலும் அவர்களது முகவர்களினாலும் விலைமனுக்கோரல் ஆவணங்கள் இலவசமாகப் பரிசீலிக்கப்படலாம்.

4ஆம் கூட்டில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் வைத்து விலைமனுதாரர்கள் மற்றும் அவர்களது முகவர்கள் முன்பாக விலைமனுக்கோரல் நேரம் முடிந்தவுடனேயே விலைமனுக்கள் திறக்கப்படும். காலம் பிந்திவரும் மனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனு ஆவணங்கள் விநியோகிப்பவர்களான இ.மி.சபை, பொ.மு/ பிரதம பொறியியலாளர் ஆகியோர்களிடமிருந்து விலைமனுக்கோரல் முடிவு திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்பாக அனைத்து விளக்கங்களும் பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

**பொது முகாமையாளர்**

**வளமான வாழ்விற்கு மின்சாரம்**

**விலைமனு ஆவணத்தின் தகவல் பிரதியானது www.ceb.lk என்ற இ.மி.ச. கூட்டுரு இணையத்தளத்திலிருந்து பதிவிலக்கம் செய்யப்படலாம்.**

# 2019 ஆம் வருடத்திற்கான தனது 75 MDRT தகுதியாளர்களைக் கௌரவிக்கும் HNB அஸ்சூரன்ஸ்

HNB அஸ்சூரன்ஸ் பிஎல்சி (HNBA) டொப் ஓ.'ப் தெ டேபிள் (TOT) தகுதியாளர் ஒருவருடன், மூன்று கோர்ட் ஓ.'ப் தெ டேபிள் (COT) தகுதியாளர்கள் உள்ளடங்கலாக ஐக்கிய அமெரிக்காவில் இடம்பெற்ற மதிப்புமிக்க மில்லியன் டொலர் வட்ட மேசை (MDRT) மாநாட்டிற்காக மொத்தமாக 75 தகுதியாளர்களை வழங்கியிருந்தது. இச்சாதனையானது நிறுவனம் இதுவரையில் உருவாக்கியிருந்த ஆதுகவு மற்றும் COT சாதனையாளர்களின் மிகவும் உயர்வான எண்ணிக்கை என்பதனால் இது நிறுவனத்திற்கு மிகவும் முக்கியமானதொன்றாகவே அமைந்திருந்தது.

HNBA மற்றும் HNB ஜெனரல் இன்ஷுரன்ஸ் லிமிட்டட் (HNBGI) நிறுவனங்களின் பிரதான நிறைவேற்று அதிகாரி திரு. பிரசாந்த பெர்னாண்டோ வெற்றியாளர்களைப் பாராட்டிக் கருத்துத் தெரிவிக்கையில், மிகவும் ஊக்கமுள்ள தனிநபர்களைக் கொண்ட இந்த அணியானது காப்புறுதித் துறையில் ஒரு நிலையான தர நிர்ணயத்தையே இன்று உருவாக்கியிருப்பதுடன், ஒருவரின் தொழில்சார் வளர்ச்சியையும் மற்றும் மேம்பாட்டையும் விரிவுபடுத்துவதில் பாரிய திர்மானமொன்றையும் வெளிப்படுத்துகின்றது. அதாவது இந்த இயல்பான தொழில் வழிவமைப்புச் சாதனைகள் நிறுவனத்தினுடைய விற்பனை அணியினைப் பலப்படுத்துவது மட்டுமின்றி எங்களுடைய இளமையும், துடிப்பும் மிக்க புதிய ஊழியர்கள் அவர்களுடைய வாழ்க்கையில் தங்களுடைய விருப்பங்கள் மற்றும் இலக்குகளுக்கு உண்மையாக இருப்பதற்கு மிகச்சிறந்த உதாரணத்தையும் உருவாக்குகின்றது என நான் நம்புவதோடு, மேலும் அனைத்து வெற்றியாளர்களையும் பாராட்டும் இத்தருணத்தில் இதனைச் சாத்தியமாக்கிய அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன் எனக் கருத்துத் தெரிவித்திருந்தார்.

இந்த தகுதியாளர்கள் ஆதுகவு அங்கீகாரத்தை எய்துவதற்காகப் பாரிய முயற்சிகளையும் மற்றும் தீர்மானங்களையும் எடுத்திருந்ததோடு, மிகச்சிறந்த தொழில்சார் திறன்கள், காப்புறுதித் திட்டங்கள் தொடர்பான அறிவு மற்றும் நெறிமுறைசார் நடத்தை போன்றவற்றையும் பெரிதும் வெளிக்காட்டியிருந்தனர். இந்த மகத்தான வெற்றியை அடைவதற்குக் காரணமாக இருந்த விநியோக மேலாண்மை அணி, பயிற்சி வழங்கல் அணி மற்றும் விசேடமாக வங்கிக் காப்புறுதி அணி ஆகியவற்றின் உதவிகள் மற்றும் பாரிய முயற்சிகளுக்காக நான் மிகவும் நன்றிகளை இவ்விடத்தில் தெரிவித்துக் கொள்கின்றேன் என ஏயு நிறுவனத்தின் பிரதான செயற்பாட்டு மற்றும் தலைமை அதிகாரியான திரு. லசித விமலரத்னவும் வெற்றியாளர்களைப் பாராட்டிக் கருத்துத் தெரிவித்திருந்தார்.

HNB அஸ்சூரன்ஸ் பிஎல்சி (HNBA) இலங்கையில் 63 கிளைகள் வலையமைப்பைக் கொண்ட மிகவும் வேகமாக வளர்ந்து வரும் காப்புறுதி நிறுவனமொன்றாகவே காணப்படுகின்றது. மேலும் HNBA ஆயுள் காப்புறுதி நிறுவனமானது "தேசிய காப்புறுதி வழங்குநர் நிதி வலிமை மதிப்பீட்டிற்காக" பிட்ச் ரேட்டிங்ஸ் லங்கா நிறுவனத்தினால் A (lka) தரவரிசையில் மதிப்பிடப்பட்டுள்ளதுடன், இலங்கைக் காப்புறுதி ஒழுங்குபடுத்துனரின் பாதுகாப்பு விதிமுறைகளின் அறிமுகத்தினைத் தொடர்ந்து HNB ஜெனரல் இன்ஷுரன்ஸ் லிமிட்டட் (HNBGI) தனது செயற்பாட்டை 2015ம் வருடம் ஜனவரி மாதம் ஸ்தாபித்திருந்தது. HNBGI நிறுவனமானது மிகச்சிறந்த விசேடமான மோட்டார் வாகன, மோட்டார்சாரா மற்றும் தகாபுல் காப்புறுதித் தீர்வுகளை தொடர்ச்சியாக வழங்கி வருவதுடன், HNB அஸ்சூரன்ஸ் பிஎல்சி (HNBA) நிறுவனத்தின் முழுமையாகச் சொந்தமாக்கப்பட்ட துணை நிறுவனமாகவும் திகழ்கின்றது. மேலும் HNB ஜெனரல் இன்ஷுரன்ஸ் லிமிட்டட் நிறுவனமும் (HNBGI) தேசிய காப்புறுதி வழங்குநர் நிதி வலிமை மதிப்பீட்டிற்காக பிட்ச் ரேட்டிங்ஸ் லங்கா லிமிட்டட் நிறுவனத்தினால் A (lka) தரவரிசையில் மதிப்பிடப்பட்டுள்ளது. HNBA இலங்கையில் அதிசிறந்த 100 வர்த்தக நாமங்கள் மற்றும் அதிசிறந்த 100 நிறுவனங்கள் பட்டியலில் LMD இனால் தரப்படுத்தப்பட்டுள்ளதுடன், பணி செய்வதற்கான சிறந்த இடம் (GPTW) சான்றிதழ் உள்ளடங்கலாக, பிராண்ட் எக்ஷலன்ஸ், டிஜிட்டல் மார்க்கடிங் மற்றும் HR எக்ஷலன்ஸ் போன்றவற்றிற்காக சர்வதேச விருதுகளையும் வெற்றி பெற்றிருப்பதோடு, இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனம் மற்றும் தெற்காசியக் கணக்காளர்கள் கூட்டமைப்பு (SAFA) ஆகியவற்றினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விருது வழங்கல் விழாக்களில் தனது வருடாந்த அறிக்கைகளுக்காக பல விருதுகளையும் வெற்றி பெற்றிருக்கின்றது.



2019 ஆம் வருடத்திற்கான HNBA இன் MDRT வெற்றியாளர்கள்

www.adz.lk
it's what you want

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### மேல் மாகாண சபையின் மேல் மாகாண பொறியியல் நிறுவனம்

**வத்துபிட்டிவல ஆதார வைத்தியசாலையில் செயற்றிட்டங்களை வடிவமைத்தல் மற்றும் நிர்மாணித்தல்**

1) பின்வரும் பணிகளுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து மேல் மாகாண மேற்கத்தய மாகாண சபையின் பொறியியல் நிறுவன பொறியியலுக்கான பிரதி பிரதான செயலாளரின் பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கோருகின்றார்.
   i. வத்துபிட்டிவல ஆதார வைத்தியசாலையில் வளிச்சீராக்கல் முறைமை மற்றும் வளி உட்புகல் முறைமை ஆகியவற்றை வடிவமைத்தல், நிர்மாணித்தல் மற்றும் பூர்த்தி செய்தல்.
   ii. வத்துபிட்டிவல ஆதார வைத்தியசாலையில் தற்போதுள்ள சாக்கடை நீர் சுத்திகரிப்பு முறைமையை வடிவமைத்தல், அபிவிருத்தி செய்தல் மற்றும் மேம்படுத்தல் .
2) விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் தனி-கட்ட இரு-உறைகள் முறைமை மூலம் நடாத்தப்படும்.
3) தகுதியுள்ள விலைமனுதாரர் (தனிநபர், நிறுவனம் அல்லது கூட்டுமுயற்சி) பின்வரும் ஆரம்ப தகைமை தேவைப்படுத்தல்களுக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்.
   அ) விலைமனுதாரரானவர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவிருத்தல் வேண்டும்.
   ஆ) இலங்கையில் உசாத்துணை நிறுவனம்/ கம்பனியாக வியாபார பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   இ) 1987 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் விலைமனுதாரரானவர் பதிவு பெற்றவராகவிருத்தல் வேண்டுமென்பதுடன் பதிவுச் சான்றிதழானது விலைமனுவுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
   ஈ) ஆகக் குறைந்தது கடந்த ஐந்து வருடங்களில் விலைமனுதாரர் உரித்தான துறையில் தீவிர பங்கேற்பவராக இருந்திருத்தல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| செயற்றிட்டப் பெயா | வத்துபிட்டிவல ஆதார வைத்தியசாலையில் வளிச்சீராக்கல் மற்றும் வளிஉட்புகல் முறைமையை வடிவமைத்தல், நிர்மாணித்தல் மற்றும் பூர்த்தி செய்தல். | வத்துபிட்டிவல ஆதார வைத்தியசாலையில் தற்போதுள்ள சாக்கடை நீர் சுத்திகரிப்பு முறைமையை வடிவமைத்தல், அபிவிருத்தி செய்தல் மற்றும் மேம்படுத்தல். |
| வேலையின் நோக்கம் | சத்திரசிகிச்சை தொகுதியில் தற்போதுள்ள வளி குளிரூட்டல் வளி உட்புகல் முறைமையை பதிலீடு செய்தல். | தற்போதுள்ள சாக்கடை நீர் சுத்திகரிப்பு பொறித்தொகுதியை தாங்கிகளின் புனரமைத்தல் மற்றும் மேம்படுத்தல், நிர்மாண காலப்பகுதியில் வைத்தியசாலையிலிருந்து வெளியேறும் சாக்கடை மற்றும் கழிவுகளை அகற்றுவதற்கான பொறிமுறையொன்றை அமுல்நடாத்தல், கழிவு நீர் ஆள்செல் துவார வலையமைப்பு போன்றவற்றை புனரமைத்தல். |
| CIDA பதிவு | ஈஎம்-1 வளிச்சீராக்கல் மற்றும் குளிரூட்டல் | மின்னியல் மற்றும் பொறிமுறைக்காக ஈஎம்1/ஈஎம்2 மற்றும் கட்டிட நிர்மாணம் மற்றும் கழிவு நீர் மற்றும் நீர் வழங்கலுக்காக சி-4/சி-5 |
| காலப்பகுதி | 180 நாட்கள் | 150 நாட்கள் |
| கடந்த ஐந்து வருடங்களில் நிறைவேற்றப்பட்ட நிர்மாண வேலையின் வருடாந்த சராசரி நிதிப்புரள்வு | 150 மில்லியன் | 80 மில்லியன் |
| கடந்த ஐந்து வருடங்களில் நிகரான தன்மை மற்றும் சிக்கல்தன்மையுடனான இரு செயற்றிட்டங்களின் நிர்மாணம் மற்றும் பூர்த்தி செய்தலின் அனுபவம். | 100 மில்லியன் | 50 மில்லியன் |
| ஏனைய ஒப்பந்தரீதியிலான கடப்பாடுகளுக்கு ஒதுக்கிய பின்னர், இந்த ஒப்பந்தத்திற்காக மேற்கொள்ளப்பட்ட எந்தவொரு முற்பணக் கொடுப்பனவுகள் நீங்கலாக, ஆகக் குறைந்த திரவச் சொத்துக்கள் மற்றும்/ அல்லது கடன் வசதிகளின் தொகை. | 50 மில்லியன் | 30 மில்லியன் |
| மீளளிக்கப்படாத கட்டணம் | 5,000 ரூபா | 5,000 ரூபா |
| விலைமனுப்பிணை | 1,500,000 ரூபா | 1,000,000 ரூபா |
| விலைமனுப்பிணை செல்லுபடியாகும் காலம் | 119 நாட்கள் | 119 நாட்கள் |

4) ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை கம்பஹா, நீதிமன்ற வீதி, 50 ஆம் இலக்கத்திலுள்ள பிரதேச பொறியியல் அலுவலகத்திலிருந்து (தொலைபேசி: 033-2222515, மின்னஞ்சல்: **degampaha@gmail.com**) ஆகியவற்றினூடாக பெற்று சாதாரண வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் பத்தரமுல்ல, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, 204 ஆம் இலக்கத்திலுள்ள மேல் மாகாண, மாகாண சபையின் 5 ஆம் மாடியின் பொறியியல் நிறுவனத்தின் பெறுகை பணிமனையில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
5) 2021.03.26 ஆம் திகதியிலிருந்து 2021.04.23 ஆம் திகதி வரையும் சாதாரண வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் பத்தரமுல்ல, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, 204 ஆம் இலக்கத்திலுள்ள மேல் மாகாண, மாகாண சபையின் 5 ஆம் மாடியின் பொறியியல் நிறுவனத்தின் பெறுகை பணிமனை பொறியியலாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.
6) விலைமனுக்கள் அவற்றை மூடும் திகதியிலிருந்து 91 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
7) 2021.04.30 ஆம் திகதியன்று மு.ப. 11.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பத்தரமுல்ல, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, 204 ஆம் இலக்கத்திலுள்ள மேல் மாகாண, மாகாண சபையின் 5 ஆம் மாடியின் பொறியியல் நிறுவனத்தின் பெறுகை பிரிவிலுள்ள கேள்வி பெட்டியில் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகளில் சேர்க்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். 'தொழில்நுட்ப முன்மொழிவுடனான' பொதுவான தகவல் (தபாலுறை-1) மற்றும் 'விலை முன்மொழிவு' (தபாலுறை-2) ஆகியன இரு தனித்தனியான தபாலுறைகளும் தனியானதொரு தபாலுறையில் அடக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்களுக்கான 1 ஆம் தபாலுறையானது விலைமனுக்களை மூடிய பின்னர் விரைவாகவே விலைமனுதாரர் அல்லது அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.
8) வத்துபிட்டிவல, ஆதார வைத்தியசாலையில் 2021 ஏப்ரல் 9 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று நடைபெறும்.

**தலைவர்,**
**பொறியியல் பெறுகை குழுவின் பிரதி பிரதான செயலாளர்,**
**பொறியியல் நிறுவனம், 5 ஆம் மாடி, பிரதான செயலாளரின் அலுவலகம்,**
**மேல் மாகாண, மாகாண சபை,**
**இல.: 204, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல.**

**தொலைபேசி இல.: 0112092501, தொலைநகல் இல.: 0112092505**

**23.03.2021.**

## விலைமனுக்களுக்கான அழைப்பு

**திறன்கள் அபிவிருத்தி, வாழ்தொழில் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சு**

### தம்புள்ளயிலுள்ள தொழில்நுட்ப கல்லூரிக்கான வடிவமைத்தல், மாற்றங்கள் மற்றும் புதுப்பித்தல்

ஒப்பந்த இல.: **SDVT/PRO/01/01**

01. கீழே விபரிக்கப்பட்டதும் 120 மில்லியன் ரூபா ஆகுசெலவில் மதிப்பீடு செய்யப்பட்டதுமான தம்புள்ளயிலுள்ள தொழில்நுட்ப கல்லூரிக்கான வடிவமைத்தல், மாற்றங்கள் மற்றும் புதுப்பித்தல் ஆகியவற்றிற்காக திறன்கள் அபிவிருத்தி, வாழ்தொழில் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சின் அமைச்சு பெறுகைக் குழுத் தலைவர் தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது கோருகின்றார்.

    முன்பக்கத்திலுள்ள கட்டிடங்களுக்கான முன்பூச்சுக்கள், ஏனைய கட்டிடங்களுக்கான புதுப்பித்தல்கள், சீரற்ற முறைமையிலுள்ள கட்டிடங்களை இடித்துடைத்தல், காணிச்சீராக்கல், உணவுகூடம் அடங்கலான பொதுவசதிகளுக்கான கட்டிடத்தை வடிவமைத்தல் மற்றும் நிர்மாணம் மற்றும் பிரதான உட்செல்லல் வாசலின் புதுப்பித்தல். மூன்று மாடி புதிய கட்டிடத்தின் கட்டிடக்கலை வடிவமைத்தல், ஆண்கள் மற்றும் பெண்களுக்கான விடுதிகள்.

    ஒப்பந்தக் காலப்பகுதி – 6 மாதங்கள் - குறைபாடுகள் கடப்பாடு காலப்பகுதி – 365 நாட்கள்.

02. விலைமனுக்கோரல் தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும் - (ஆரம்ப தகவல், வடிவமைத்தல்/ தொழில்நுட்ப முன்மொழிவு மற்றும் நிதிசார் முன்மொழிவு ஆகியவைகளை இரு பிரதிகளில் விலைமனுதாரர் சமர்ப்பித்தல் வேண்டும். முன்மொழிவானது இரு தனித்தனியான முத்திரையிடப்பட்ட தபாலுறைகளை கொண்டிருத்தல் வேண்டும் - முதலாவது தபாலுறையானது ஆரம்ப தகவல், வடிவமைத்தல் / தொழில்நுட்ப முன்மொழிவு ஆகியவற்றைக் கொண்டிருப்பதுடன் இரண்டாவது தபாலுறையானது நிதிசார் முன்மொழிவைக் கொண்டிருக்கும்) நிதிசார் விலைமனுவை திறக்கும் வேளையில் தொழில்நுட்ப ரீதியில் தகைமையுடைய விலைமனுதாரர்களின் விலைமனுக்கள் வாசிக்கப்படும்.
03. ஒப்பந்தத்தைப் வழங்குவதற்காக, வெற்றிகரமான விலைமனுதாரர்கள் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவர்களாகவும் கட்டிட நிர்மாணத்தில் சி-4 அல்லது மேற்பட்ட தரத்தில் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையுடனான பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
04. ஒப்பந்தத்தை வழங்குவதற்காக தேவைப்படும் தேவைப்படுத்தல்கள் பின்வருமாறு:
    - கடந்த ஐந்து வருடங்களில் நிறைவேற்றப்பட்ட கம்பனியின் நிர்மாண வேலையின் வருடாந்த சராசரிப் பெறுமதி ஆகக் குறைந்தது 180 மில்லியன் ரூபாவாகவிருத்தல் வேண்டும்.
    - கடந்த 5 வருடங்களில் நிகரான தன்மையில் ஒரு செயற்றிட்டத்தை வெற்றிகரமாக பூர்த்தி செய்த அனுபவம் (வடிவமைத்து மற்றும் கட்டிட நிர்மாணம் அல்லது நிர்மாணம், கட்டிடமொன்றின் மாற்றங்களை உருவாக்கல் மற்றும் புதுப்பித்தல்) ஆகியவற்றின் பெறுமதி 100 மில்லியன் இலங்கை ரூபாவிற்கு குறையாமலிருத்தல் வேண்டும்.
    - திரவச் சொத்துக்கள் மற்றும்/ அல்லது கடன் வசதிகள் (ஏனைய ஒப்பந்த ரீதியிலான கடப்பாடுகளை ஒதுக்கிய பின்னர்) இந்த ஒப்பந்தத்தின் கீழ் செலுத்தப்பட்ட ஏதாவது முன்பணக்கொடுப்பனவு நீங்கலாக 20 மில்லியன் இலங்கை ரூபாவிற்கு குறையாமல் இருத்தல் ஆகாது.
05. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை கொழும்பு-05, எல்விட்டிகல மாவத்தை, 354/ 2 ஆம் இலக்கத்திலுள்ள திறன்கள் அபிவிருத்தி, வாழ்தொழில் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சின் பெறுகைக்கான உதவி செயலாளரிடமிருந்து பெற்று 2021.03.25 ஆம் திகதியிலிருந்து 2021.04.27 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் அதே முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம்.
06. 2021.03.25 ஆம் திகதியிலிருந்து 2021.04.27 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமான இருபதினாயிரம் இலங்கை ரூபாவை (20,000 இ.ரூபா) செலுத்திய பின்னர், கொழும்பு-05, எல்விட்டிகல மாவத்தை, 354/ 2 ஆம் இலக்கத்திலுள்ள திறன்கள் அபிவிருத்தி, வாழ்தொழில் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சின் செயலாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
07. விலைமனுக்கள் கொழும்பு-05, எல்விட்டிகல மாவத்தை, 354/ 2 ஆம் இலக்கத்திலுள்ள திறன்கள் அபிவிருத்தி, வாழ்தொழில் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சின் செயலாளரிடம் 2021.04.29 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக ஒப்படைக்கப்படல் வேண்டும் அல்லது கொழும்பு-05, எல்விட்டிகல மாவத்தை, 354/ 2 ஆம் இலக்கத்திலுள்ள திறன்கள் அபிவிருத்தி, வாழ்தொழில் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சின் தரை மாடியிலுள்ள பெறுகை பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்களை அவைகளை மூடிய பின்னர் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விரைவாகவே திறக்கப்படும்.
08. இலங்கை ரூபாவில் பன்னிரண்டு இலட்சம் (1,200,000 இ.ரூபா) பெறுமதியானதும் இலங்கையில் செயற்படும் வர்த்தக வங்கியொன்றிலிருந்து வழங்கப்பட்டதும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதுமான விலைமனுப்பிணையொன்றுடன் அனைத்து விலைமனுக்களும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப்பிணையானது நிபந்தனையற்றதும் இலகுவில் மாற்றக்கூடியதுமான பிணையாகவும் திறன்கள் அபிவிருத்தி, வாழ்தொழில் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சின் செயலாளரின் பெயரில் வழங்கப்பட்டதாகவும் 2021.08.26 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலுமிருத்தல் வேண்டும்.
09. 2021.04.01 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு தம்புள்ள தொழில்நுட்ப கல்லூரியில் விலைமனு முன்னோடிக் கூட்டம் நடைபெறும்.

**தலைவர்,**
**அமைச்சு பெறுகைக் குழு,**
**திறன்கள் அபிவிருத்தி, வாழ்தொழில் கல்வி,**
**ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சு,**
**இல.: 354/2, எல்விட்டிகல மாவத்தை,**
**கொழும்பு-05.**

# 46வது தேசிய விளையாட்டு விழா நெஸ்டமோல்ட் அனுசரணையில்

## மரதன், சைக்கிளோட்டம், நடைப் போட்டிகள் கதிர்காமத்தில் நாளை ஆரம்பம்

இளைஞர் விவகார மற்றும் விளையாட்டு அமைச்சு, நெஸ்டமோல்ட் ஆகியன இணைந்து மரதன், சைக்கிளோட்டம் மற்றும் நடையோட்டப் போட்டிகளுடன் 46 வது தேசிய விளையாட்டு விழா ஆரம்பமாகவுள்ளன.

சர்வதேச அளவில் நாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தேசிய குழாமில் இணைத்துக்கொள்ளப்படுவதற்கு வெற்றியாளர்கள் பரிசீலிக்கப்படுவார்கள்.

மிகவும் ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்ட 46 வது தேசிய விளையாட்டு விழாவின் முதல் மூன்று நிகழ்வுகளான மரதன், சைக்கிளோட்டம் மற்றும் நடையோட்டம் நாளை 26 முதல் 29 வரை நடைபெறும் என்று இளைஞர் விவகார மற்றும் விளையாட்டு அமைச்சு மற்றும் நெஸ்டமோல்ட் ஆகியன அறிவித்துள்ளன. போட்டியாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக, சுகாதார அமைச்சின் கண்டிப்பான ஒழுங்குமுறைகளின் கீழ் போட்டிகள் இடம்பெறவுள்ளதுடன், வெற்றியாளர்கள் தேசிய குழாத்திற்கு தெரிவு செய்யப்படுவார்கள். கடந்த கால வெற்றியாளர்களான ஜீவன் ஜெயசிங்க, இந்திரஜித் குரே மற்றும் பீ.எம்.என். நயானானந்த ஆகியோர் நாட்டை பிரதிநிதித்துவப்படுத்தி சர்வதேச மட்டத்தில் சிறப்பாக மிளிர்ந்தனர்.

தேசிய விளையாட்டு நாட்காட்டியில் மிக முக்கியமானதாகக் கருதப்படும் தேசிய விளையாட்டு விழா பாரம்பரியமாக 31 நிகழ்வுகளைக் கொண்டுள்ளது. இருப்பினும், தொற்றுநோய் காரணமாக, இந்த நிகழ்வுகள் பாதுகாப்பு மற்றும் சுகாதார விதிமுறைகளுக்கு இணங்க, இந்த ஆண்டில் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் நடத்தப்படும்.

இளைஞர் விவகார மற்றும் விளையாட்டு அமைச்சர் நாமல் ராஜபக்ஷ இது தொடர்பில் கூறுகையில், 'எங்கள் போட்டியாளர்களின் பாதுகாப்பு மற்றும் நலனுக்கு நாம் முதலிடம் கொடுப்பதால், தொற்றுநோய் காரணமாக தேசிய விளையாட்டு விழாவை கடந்த ஆண்டு நாம் ஒத்திவைக்க நேர்ந்தது. எவ்வாறாயினும், மாபெரும் நிகழ்வின் பாரம்பரியத்தை இந்த ஆண்டில் எம்மால் தொடர முடிந்ததில் நாங்கள் மகிழ்ச்சியடைவதுடன், 1972 ஆம் ஆண்டு முதல் நாங்கள் ஆற்றி வந்துள்ளதைப் போல நாடு முழுவதும் உள்ள திறமையான விளையாட்டு வீரர்களுக்கு போட்டியிடுவதற்கான வாய்ப்பை வழங்குகிறோம்.

எங்கள் முக்கிய நிகழ்வுகளுக்கு தொடர்ந்து ஆதரவளித்து, இலங்கையிலுள்ள விளையாட்டு வீரர்களுக்கு அவர்களின் திறமைகள் அங்கீகரிக்கப்பட்டு வளர்க்கப்படுவதற்கான ஒரு களத்தை ஏற்படுத்துவதை உறுதிசெய்வதில் எங்கள் நீண்டகால பங்காளராகத் திகழ்ந்து வருகின்ற நெஸ்டமோல்ட்டுக்கு நன்றி தெரிவிக்க விரும்புகிறேன்,' என்று குறிப்பிட்டார்.

இலங்கையர்கள் தமது தினத்தை சிறப்பாக ஆரம்பிப்பதற்கான அத்திவாரத்திற்கும், சக்தியை வளர்ப்பதற்கும் உறுதிபூண்டுள்ள தனது இலட்சியத்தின் ஒரு பகுதியாக, நெஸ்டமோல்ட் கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக இப்பெரும் நிகழ்வில் மரதன் போட்டிக்கு வலுவூட்டி வந்துள்ளது.

நெஸ்லே நிறுவனத்தின் வர்த்தக விவகாரங்களுக்கான துணைத் தலைவர் பந்துல எகொடகே இது தொடர்பில் குறிப்பிடுகையில், 'தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் போட்டியிடுவதற்கு ஒருவர் உடல் மற்றும் மனதால் 100வீதம் தயாராக இருக்க வேண்டும்.

நாட்டின் மிகவும் விரும்பப்படும் மோல்ட் அடங்கிய உணவுப் பானமாக, இளம் விளையாட்டு வீரர்களுக்கு அவர்களின் விளையாட்டு வாழ்வில் சிறப்பான தொடக்கத்தை வழங்குவதற்காக இந்த நிகழ்வுடன் நாங்கள் பல தசாப்தங்களாக இணைந்துள்ளோம்.

இளம் விளையாட்டு வீரர்களின் அபிலாஷைகளுக்கு வலுவூட்டி, அவர்கள் போட்டியிடுவதற்கும், அங்கீகரிக்கப்படுவதற்கும், அவர்கள் தமது உச்ச ஆற்றலை வெளிப்படுத்தி அவர்களை வளர்ப்பதற்கும் ஒரு களம் இருப்பதை உறுதி செய்வதன் மூலம் அவர்களின் முன்னேற்றத்திற்கு உதவுவதில் நாம் பெருமிதம் அடைகின்றோம்,' என்று கூறினார்.




| திகதி | நேரம் | நிகழ்வு | போட்டியாளர்களின் எண்ணிக்கை | போட்டி நடைபெறும் இடம் |
|---|---|---|---|---|
| 26 | மு.ப. 5.30 | 42 கிமீ மரதன் ஆண்கள் | 85 | கதிர்காமம் பேரூந்து நிலையம் , தெபராவெள மணிக்கூட்டுக் கோபுரம் , திஸ்ஸமகராம பாலம் (இரும்புப் பாலம்) , மீண்டும் கதிர்காமம் பேரூந்து நிலையத்திற்கு (42 கிமீ) |
| | | 42 கிமீ மரதன் பெண்கள் | 40 | |
| 27 | மு.ப. 6.00 | 20 கிமீ நடையோட்டம் ஆண்கள் | 100 | கதிர்காமம் ரஜ மாவத்தை (செல்ல கதிர்காமம் வீதி), போதிராஜ ஆலயத்திற்கு அருகில் (1 கிமீ நீளத்திற்கு முன்னும் பின்னுமாக) |
| | மு.ப. 6.30 | 20 கிமீ நடையோட்டம் பெண்கள் | 40 | |
| 29 | மு.ப. 6.30 | 158.8 கிமீ சைக்கிளோட்டம் ஆண்கள் | 270 | கதிர்காமம் பேரூந்து நிலையம் , செல்ல கதிர்காமம் வீதி , லுணுகம்வெஹர சந்தி , கம் உதாவ சந்தி , கதிர்காமம் பேரூந்து நிலையம் (ஆண்கள் 4 சுற்று, பெண்கள் 2 சுற்று) |
| | பி.ப. 4.00 | 79.4 கிமீ சைக்கிளோட்டம் பெண்கள் | 40 | |

சுப்பர் லீக் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி



## கொழும்பு எப்சி, புளு ஸ்டார் அணிகள் வெற்றி

**(வட கொழும்பு தினகரன், திருகோணமலை குறூப் நிருபர்கள்)**

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் முன்னெடுக்கப்பட்டு வரும் பருவகால சுப்பர் லீக் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் பி பிரிவுக்கான போட்டியில் கொழும்பு உதைபந்தாட்ட அணியினரும் வென்னப்புவ நியூயங்ஸ் அணியினரும் மோதிய நிலையில் ஏ பிரிவுக்கான போட்டியில் டிபெண்டரஸ் (இலங்கை இராணுவம்)அணியினர் எதிர் களுத்துறை புளூஸ்டார் அணியினர் மோதினர்.இப்போட்டிகள் இரண்டும் கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் ( 23) மாலை இடம்பெற்றன.

போட்டி சூடுபிடித்த நிலையில் நியுயங்ஸ் அணி வீரர் கெலும்சஞ்சய 19 ஆவது நிமிடத்தில் ஒருகோலை பெற்றார்.போட்டி விறுவிறுப்பான நிலையில் கொழும்பு உதைபந்தாட்ட அணியின் வீரர் எம்.எப். மொகமட் ஆஷிப் 29 ஆவது நிமிடத்தில் தனது அணிக்கான ஒருகோலை மிக லாவகமாக பெற்றார்.

போட்டியின் சில நிமிடங்கள் இரு அணிகளும் சமநிலையில் விளையாடிய தருணத்தில் நியூயங்ஸ் அணியின் வீரர் பீ . ருமேஷ் மெண்டிஸ் 40 ஆவது நிமிடத்திலும் இவ் அணியின் மற்றுமொரு வீரரான தரிந்து தனுஷ்க்க 48 ஆவது நிமிடத்திலும் தலா ஒவ்வொரு கோல்களை பெற்று வெற்றியின் விளிம்பின் தன் அணியை நிலைநிறுத்தினர். இந்நிலையில் கொழும்பு உதைபந்தாட்ட அணியின் வீரர்களான மோமஸ் யாபோ 54 ஆவது நிமிடத்திலும் ஸர்வ் ஜோகர் 58 ஆவதுநிமிடத்திலும் எம்.எப்.மொஹமட் ஆஷிப் 64 ஆவதுநிமிடத்திலும் தன் அணிக்கான அதிரடி கோல்களை பெற்று போட்டியின் களநிலையை திசைதிருப்பினர்.

இப்போட்டியின் முடிவில் 4 – 3 என்ற கோல்கள் அடிப்படையில் கொழும்பு உதைபந்தாட்ட அணி நியூயங்ஸ் அணிக்கு அதிர்ச்சி தோல்வியை வழங்கியது.நியுயங்ஸ் அணியின் வீரர் பீ.ருமேஷ் மெண்டிர்ஸ்க்கு மத்தியஸ்தரால் மஞ்சள் அட்டை காட்டபட்டது.

மின்னொளியில் இடம்பெற்ற பி பிரிவுக்கான சுப்பர் லீக் போட்டியில் டிபெண்டர்ஸ் அணி எதிர் புளூஸ்டார் அணியினர் மோதினர்.

இப்போட்டியின் 12 ஆவது நிமிடத்தில் டிபெண்டர்ஸ் அணியின் வீரர் மதுசான் டி சில்வாதன் அணிக்கான முதலாவது கோலைபெற்றார்.

டீபெண்டர்ஸ் அணிக்குபதில் வழங்கும் வகையில் புளூ ஸ்டார் அணியின் வீரர் 28 ஆவது நிமிடத்தில் தனக்கு கிடைத்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி மிகவேகமான வகையில் ஒருகோலை சுவீகரித்தார்.

இச்சந்தர்பத்தில் முப்பத்தைந்தாவது நிமிடத்தில் இவ் அணியின் மற்றுமொரு வீரரான சீனல் சென்டேஸ் ஒருகோலை பெற்று தன் அணியை முன்நிலைக்கு எடுத்துச் சென்றார். இப்போட்டியின் வெற்றியை சுவீகரிக்கும் நிலையை உறுதிப்படுத்த புளுஸ்டார் அணியின் வீரர் எம்.எப். எம்.றிசான் 52 ஆவதுநிமிடத்தில் ஒருகோலைதன் அணிக்காக சுவீகரித்தார்.

மேற்கிந்திய தீவுகள் அணிக்கெதிரான முதல் டெஸ்ட் போட்டி:

## வலுவான நிலையில் இலங்கை அணி

மேற்கிந்திய தீவுகள் அணிக்கெதிரான முதல் டெஸ்ட் போட்டியின் மூன்றாம் நாள் ஆட்ட நேர முடிவில் இரண்டாவது இன்னிங்காக துடுப்பெடுத்தாடி வரும் இலங்கை அணி 4 விக்கட்டுக்களை இழந்து 255 ஓட்டங்களை பெற்று துடுப்பெடுத்தாடி வருகிறது.

முதல் இன்னிங்ஸிற்காக இலங்கை அணி 169 ஓட்டங்களையும், மேற்கிந்திய தீவுகள் அணி 271 ஓட்டங்களையும் பெற்றிருந்தன.

இதனைத் தொடர்ந்து இரண்டாவது இன்னிங்காக துடுப்பெடுத்தாட களமிறங்கியுள்ள இலங்கை அணி மூன்றாம் நாள் ஆட்ட நேர முடிவில் 4 விக்கட்டுக்களை இழந்து 255 ஓட்டங்களை பெற்றுள்ளது.

துடுப்பாட்டத்தில் இலங்கை அணி சார்பில் ஓஷத பெர்ணாண்டோ 91 ஓட்டங்களையும், லஹிரு திரிமான்ன 76 ஓட்டங்களையும் அதிகபட்சமாக பெற்றுக்கொடுத்திருந்தனர். அத்துடன், தனஞ்சய டி சில்வா 46 ஓட்டங்களையும், பதும் நிசங்க 21 ஓட்டங்களையும் பெற்றுள்ள நிலையில் ஆட்டமிழக்காமல் இருந்தனர். மேற்கிந்திய தீவுகள் அணி தனது முதல் இன்னிங்ஸிற்காக 271 ஓட்டங்களை பெற்றுள்ளது.

கடந்த 21ம் திகதி ஆரம்பமாகிய குறித்த போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி அனைத்து விக்கெட்களையும் இழந்து 169 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதனை அடுத்து தனது முதலாவது இன்னிங்ஸை தொடர்ந்த மேற்கிந்திய தீவுகள் அணி, அனைத்து விக்கெட்களையும் இழந்து 271 ஓட்டங்களை பெற்று 102 ஓட்டங்கள் முன்னிலையில் இருந்துள்ளது.

அவ்வணி சார்பாக கோர்ன்வல் 61 ஓட்டங்களையும் ஜோசுவா த சில்வா 46 ஓட்டங்களையும் ஜோன் கம்ப்பெல் 42 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இலங்கை அணி சார்பாக லக்மல் 5 விக்கெட்களையும் விஸ்வ பெர்னாண்டோ மற்றும் சமீர ஆகியோர் தலா இரண்டு விக்கெட்களையும் வீழ்த்தினர்.இச்செய்தி மூன்றாம் நாள் ஆட்ட நேரம் வரையான தகவலே இவை.










## நிந்தவூர் லகான் அணி சம்பியன்

**(ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்)**

அட்டாளைச்சேனை சோபர் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற கொரோனா வெற்றிக்கிண்ண கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் நிந்தவூர் லகான் விளையாட்டுக்கழக அணி சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

05 ஓவர் 7 பேர் மட்டுப்படுத்தப்பட்ட இச்சுற்றுப் போட்டியில் அம்பாறை மாவட்டத்திலுள்ள 38 முன்னணிக் கழகங்கள் பங்கு கொண்டன.இதன் இறுதிப்போட்டி (14.03.2021) அட்டாளைச்சேனை பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இறுதிப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்ற பெற்ற அக்கரைப்பற்று லீ ஸ்டார் விளையாட்டுக் கழக அணி முதலில் துடுப்பெடுத்தாடி 5 ஓவர் நிறைவில் இரண்டு விக்கட் இழற்பிக்கு 33 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டனர்.இதில்சாஸிர் 24 ஓட்டங்களைப் பெற்றனர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய நிந்தவூர் லகான் அணியினர் 3.1ஓவர் நிறைவில் 1 விக்கட் இழந்து 34 ஓட்டங்களைப் பெற்று 6 விக்கட்களினால் இப்போட்டியில் வெற்றி பெற்றனர்.

இறுதிப்போட்டியில் சிறந்த வீரராக லகான் அணியின் ஏ.எம்.நஜாதும் தொடரின் சிறந்த வீரராக அட்டாளைச்சேனை நியூ ஸ்டார் விளையாட்டுக் கழக அணித்தலைவர் ஏ.எச். றிசாட்டும் தெரிவு செய்யப்பட்டு அதிதிகளினால் கிண்ணங்களைப் பெற்றுக் கொண்டனர்.

சோபர் விளையாட்டுக் கழகத்தின் உபதலைவர் எம்.எச்.எம்.சர்மி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பொதுஜன பெரமுன கட்சியின் கல்முனை தொகுதி அமைப்பாளரும், கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகார சபையின் பணிப்பாளர் சபை உறுப்பினருமான றிஸ்லி முஸ்தபா பிரதம அதிதியாக்க கலந்து கொண்டு வெற்றி கிண்ணங்களை இதன்போது வழங்கி வைத்தார்.

வெற்றி பெற்ற லகான் அணிக்கு வெற்றிக்கிண்ணத்துடன் 20ஆயிரம் பணப்பரிசும், இரண்டாம் இடம் பெற்ற லீ ஸ்டார் அணிக்கு கிண்ணத்துடன் 10ஆயிரம் ரூபா பணப்பரிசும் வழங்கி வைக்கப்பட்டது. இச்சுற்றுப்போட்டியின் அரை இறுதிப்போட்டிக்கு அட்டாளைச்சேனை பைனா, அட்டாளைச்சேனை நியூ ஸ்டார், நிந்தவூர் லகான், அக்கரைப்பற்று லீ ஸ்டார் விளையாட்டுக் கழகங்கள் தெரிவு செய்யப்பட்டன.



இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2021 மார்ச் மாதம் 25ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.